இந்தியக் கல்வெட்டுக்களும் எழுத்துக்களும்

மூலம். C. சிவராமமூர்த்தி

தமிழாக்கம் முனைவர். நா. மார்க்சியகாந்தி

பதிப்பாசிரியர்

முனைவர் தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இஆப.

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, சென்னை- 600 008.

2010 - திருவள்ளுவர் ஆண்டு 2041

இந்தியக் கல்வெட்டுகளும் எழுத்துகளும்

மூலம் C. சிவராமமூர்த்தி

தமிழாக்கம் முனைவர் நா. மார்க்சியகாந்தி

பதிப்பாசிரியர்

முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப,

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை - 600 008

2010 - திருவள்ளுவர் ஆண்டு 2041

முதற்பதிப்பு 1977. — 1000 பிரதிகள்
இரண்டாம் பதிப்பு 2010 — திருவள்ளுவர் ஆண்டு 2041
1000 பிரதிகள்
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
வெளியீடு எண். 45

© தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

மூலம் : C. சிவராமமூர்த்தி
தமிழாக்கம் : முனைவர் நா. மார்க்சியகாந்தி

பதிப்பாசிரியர்
முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப,

விலை : ரூ. 81.00

அச்சிட்டோர்
திருமுல்லைவாயில் கூட்டுறவு அச்சகம்
40, ஆன்டர்சன் தெரு
சென்னை — 600 001

அணிந்துரை

"செப்பும் மொழி பதினெட்டுடையாள் எனில்
சிந்தனை ஒன்றுடையாள்"

என்றான் பாரதி. இந்தியத்தாய் பல மொழிகளிலும் பேசும் ஆற்றல் கொண்டவள். ஆயினும் அவள் சிந்தை ஒன்றே என அறிய இலக்கியங்கள்போலக் கல்வெட்டுக்களும், அவை எழுதப்பட்டுள்ள எழுத்துக்களும் சான்றுகளாகத் திகழ்கின்றன. சுமார் 2000 ஆண்டுகளாகத் திகழ்கின்ற இந்த மரபைத் தெளிவாக ஒருபெரும் ஆராய்ச்சி நூலாக திரு C. சிவராமமூர்த்தி அவர்கள் ஆங்கிலத்தில் வெளியிட்டார்கள். சென்னை அருங்காட்சியகத்தில் தொல்லியல் துறைத் தலைவராக முதலில் பணியேற்ற இவர், படிப்படியாக உயர்ந்து இந்திய தேசிய அருங்காட்சியகத்தின் தலைவராகி, இன்று அனைத்துலகுக்கும் இந்தியக் கலையின் பெருமையை எடுத்துரைக்கும் ஆசானாகத் திகழ்கிறார். இவர் அண்மையில் வெளியிட்டுள்ள 'இந்தியக்கலை' என்னும் ஒப்பரும் நூல், பிரஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ், ஆங்கிலம் ஆகிய நான்கு உலக மொழிகளிலும் வெளியிடப்பட்டு யுனஸ்கோ நிறுவனத்தின் பாராட்டுதலைப் பெற்றுள்ளது. அவர் தாம் எழுதிய இந்தியக் கல்வெட்டுக்கள் என்னும் ஆராய்ச்சி நூலைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட அனுமதித் தந்தமைக்கு எமது உளங்கலந்த நன்றி. இந்நூலை வெளியிடுவதில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை பெருமை கொள்கிறது.

இந்நூல் முதலில் சென்னை அருங்காட்சியகத்தினரால் ஆங்கிலத்தில் வெளியிடப் பெற்றது. இதைத் தமிழிற் கொணர்வதற்கு உதவி, உரிய பிளாக்குகளையும் கொடுத்து உதவிய சென்னை அருங்காட்சியக இயக்குநர் அவர்களுக்கு எமது உளங்கனிந்த நன்றி.

இந்நூலின் தமிழாக்கம் இத்துறையின் கல்வெட்டாய்வாளர் செல்வி. மார்க்சீயகாந்தியால் செய்யப்பட்டுள்ளது. பணி கடினமானது. வடமொழிச் செய்யுட்கள் நிறைந்து நிற்கும் இந்நூலைத் தமிழ்ப்படுத்துவது அவ்வளவு எளிமையான செயலல்ல. கல்வெட்டுத் துறைக்குப் புதியவரே யாயினும் இப்பணியைத் திறனுடன் செய்துள்ளது பாராட்டுதற்குரியது.

இந்நூலில் ஒரு சில பகுதிகளை விரிவஞ்சிக் குறுக்கியுள்ளோம். குறிப்பாக ஒவ்வொரு எழுத்தும் பல்வேறு கல்வெட்டுக்களில் எவ்வாறு சிறுசிறு மாற்றங்கள் அடைந்தன எனப்படத்தில் உள்ளதால், எழுத்துரையில் குறைத்துள்ளோம். பிற பகுதிகள் அப்படியே உள்ளன. இந்நூல் தமிழ்மொழி மூலம் இந்தியக் கல்வெட்டுக்களை அறிய விரும்பும் அன்பர்களுக்குப் பெரிதும் உதவும் என்று எண்ணுகிறோம்.

இரா. நாகசாமி

முன்னுரை

தமிழகக் கல்வெட்டுக்களைக் கற்பித்து, அவற்றை ஓரளவு படிக்கத் தெரிந்தவுடன் இத்தகைய கல்வெட்டுக்களை அகில இந்திய அளவிலும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று திரு. சிவராமமூர்த்தி அவர்களின் Indian Epigraphy and South Indian Scripts என்னும் நூலை அறிமுகப்படுத்தியவர் எனதாசிரியப் பெருந்தகை இயக்குநர் திரு. நாகசாமி அவர்கள். கல்வெட்டில் பயிற்சி பெற விரும்பும் அனை வருக்கும் இன்றியமையாத அடிப்படை புத்தகம் அது. அந்த அடிப்படைப் புத்தகம் கண்டிப்பாகத் தமிழில் இருக்க வேண்டும் என அதைத் தமிழ்ப் படுத்த என்னைச் சரியான சமயத்தில் ஈடுபடுத்திய முறையை என்னால் என்றும் மறக்க இயலாது. எனது முதல் முயற்சி இது. முதல் முயற்சி யிலேயே பெரிய பணியை எடுத்துக் கொண்டு விட்டேன். பெரியோர்கள் குறை பொறுத்து நிறை பாராட்டுவார்களென்ற நம்பிக்கையில்.

இந்நூலில் முதற் பகுதி கல்வெட்டில் உள்ள பொருளைப் பற்றியது அதில் எழுதும் முறையுண்டு; எழுதுவோரின் புகழுண்டு; எழுத்தின் அழகுண்டு; எல்லா வகையிலும் அது கொண்ட சிறப்புக்கள் பலவும் உண்டு. அடுத்த பகுதியில் எளிய கற்கால மனிதன் தொடங்கி, இன்று நாகரிகச் சூழலில் தன்னைப் பிரிக்க இயலாது வளர்ந்து நிற்கும் மனிதன் வரையுள்ள அனைத்து வளர்ச்சிப் படிகளும் மனிதனுக்கு மட்டுமல்ல; அவன் எழுதிய எழுத்துக்கும் உண்டு என்பதைக் காட்டுவது போல வளர்ச்சிப் படிகள் அனைத்தும் காட்டப்பட்டுள்ளன. மூன்றும் பகுதி எடுத்துச் சுவைக்கத்தக்க பகுதிகள். அதே நேரத்தில் இந்திய எழுத்துக் களுள் பெரும்பாலும் அனைத்திலும் பயிற்சி பெற வழி காட்டும்.

தமிழாக்கத்தின் போது என்னை அனைத்து வழிகளிலும் ஆதரித்து உரிய வழிகளையும் முறைகளையும் எடுத்துக் கூறி, தவறுகளைச் சிறிதும் முகவேறுபாடின்றிச் சுட்டித் திருத்தி இப்பணியை முடிக்கச் செய்த என் பேராசிரியருக்கு எனதன்பான வணக்கங்களும் நன்றியும். இதனைத் துறை வெளியீடாகவும் ஆக்கிப் பெரும்பெருமை அளித்துள்ளார்.

இந்தப் பணியைச் சிறிதும் தயக்கம் இன்றி மிக அழகிய முறையில், விரைவாக அச்சிட்டுப் பெரும்பணி புரிந்துள்ளனர் எம்துறை அச்சுப் பிரிவினர். அவர்கள் விருப்பத்தோடு செய்து கொடுத்தது என் மனதில் நிறைந்துள்ளது. அவர்களுக்கு என் நன்றி.

நா. மார்க்சியகாந்தி

பதிப்புரை

வரலாற்றினை எழுதுவதற்கு மிகத் தேவையான அடிப்படைச் சான்றுகள் கல்வெட்டுகளே. இந்தியாவில் சற்றேறக்குறைய 60,000 கல்வெட்டுகள் உள்ளன. தமிழகத்தில் ஏறக்குறைய 25,000 கல்வெட்டுகள் காணப்படுகின்றன. தற்போது கல்வெட்டுகள் அழிக்கப்படுகின்றன. இவை உடனே காக்கப்பட வேண்டும். அன்றைய மன்னர்களின் வரலாற்று சிறப்பு மிக்க பணிகள், அரசியல், சமய, சமுதாய பொருளாதாரச் செய்திகளை அறிந்துகொள்ள கல்வெட்டுகள் முதன்மைச் சான்றாக உள்ளன. கல்வெட்டுகளைப் பற்றி அறியும்போது அதில் தொல்லெழுத்தியல் மிகச் சிறந்த இடம்பெறுகிறது. கல்வெட்டின் காலம், மொழியின் வளர்ச்சி மொழிகளில் உள்ள இலக்கியங்களின் சிறப்பு ஆகியன இரண்டாவதாக இடம்பெறுகின்றன. இந்நூலில் தென்னிந்தியாவில் உள்ள கல்வெட்டுகளையும் அதிலுள்ள எழுத்துகளையும் துணையாகக் கொண்டு இந்தியக் கல்வெட்டுகளின் சிறப்பான அம்சங்களை விரிவாக திரு. சி. சிவராமமூர்த்தி அவர்கள் எடுத்துரைத்துள்ளார். இந்நூலாசிரியர் திரு. சி. சிவராமமூர்த்தி அவர்கள் சென்னை அருங்காட்சியத்தில் பணியாற்றி பின்னர் படிப்படியாக உயர்ந்து இந்திய தேசீய அருங்காட்சியத் தலைவராகப் பணியாற்றியவர். "Indian Epigraphy and South Indian Scripts" என்னும் தலைப்பில் எழுதிய இந்நூல் சென்னை அரசு அருங்காட்சியாகத் துறையால் 1948–ஆம் ஆண்டு வெளியிடப் பெற்றதாகும்.

கல்வெட்டுப் பயிற்சி பெறும் அனைவருக்கும் இன்றியமையாத அடிப்படை நூலாகும். அதனடிப்படையில் இந்நூல் கண்டிப்பாக தமிழில் இருக்கவேண்டும் என்று கருதி தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அன்றைய இயக்குநர் முனைவர் இரா. நாகசாமி அவர்கள் தமிழில் கொண்டுவர எண்ணினார். இந்நூலினை தமிழாக்கம் செய்தவர் இத்துறையின் அன்றைய கல்வெட்டாய்வாளர் முனைவர் நா. மார்க்சியகாந்தி அவர்கள் ஆவார். சிறந்த முறையில் தமிழாக்கம் செய்து சிறப்பாக வெளிக் கொணரப்பட்டது. எனவே

இந்நூல் தமிழ்மொழி மூலம் இந்தியக் கல்வெட்டுகளை அறிய விரும்பும் கல்வெட்டுத் துறையின்பால் ஈடுபாடுள்ள அறிஞர்கள், மாணவர்களுக்கு உதவியாக இருக்கும் என்பதின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை மறுபதிப்பாக வெளிக்கொணர்கிறது.

இந்நூலினை எழுதிய திரு. சி. சிவராமமூர்த்தி அவர்களுக்கும், இந்நூலினை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட அனுமதி அளித்த அரசு அருங்காட்சியகத் துறைக்கும், தமிழில் வெளிவர முயற்சி செய்த தொல்லியல் துறை அன்றைய இயக்குநர் முனைவர் நா. நாகசாமி அவர்களுக்கும், தமிழாக்கம் செய்த முனைவர் நா. மார்க்சியகாந்தி அவர்களுக்கும் எனது நன்றியினை உரித்தாக்குகிறேன்.

இந்நூலின் மறுபதிப்பு பணியினை மேற்கொண்ட இத்துறை கல்வெட்டாய்வாளர்கள் திரு. கி. சு. சம்பத், திரு. இரா. சிவானந்தம் ஆகிய இருவருக்கும் மனமார்ந்த பாராட்டுகள்.

இந்நூல் சிறப்பாக வெளியிட நிதியுதவி அளித்துள்ள தமிழ்நாடு அரசுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் கல்வெட்டுத் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளும் அறிஞர்கள், மாணவர்கள் மற்றும் ஆர்வலர்களுக்கும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

நாள் : 1-11-2010
சென்னை — 600 008

தி. ஸ்ரீ. ஸ்ரீதர்
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

இந்தியக் கல்வெட்டுக்களும், தென்னிந்திய எழுத்துக்களும்

இந்தியக் கல்வெட்டுக்கள்

முன்னுரை :

இந்திய வரலாற்றினை மீண்டும் எழுதுவதற்கு மிகத் தேவையான அடிப்படைச் சான்றுகள் கல்வெட்டுக்களே. அவற்றின் உதவியால்தான்-அவற்றினின்று நாம் பெறும் உண்மைகளால்தான்-வரலாற்றை எழுத முடியும். மிகுந்த அளவில் கல்வெட்டுக்களை உடைய நாடு இந்தியநாடு. குறிப்பிடத்தக்க அளவில் இதுவரை வெளிவந்துள்ள கல்வெட்டுக்கள், பல வகையாலும் சிறப்புடையன. இவ்வளவு கல்வெட்டுக்கள் இருப்பினும், சரியான வகையில் பொதுமக்கள் அறிந்து கொள்ளாமையாலும், ஒவ்வொரு சிற்றூரிலும் உள்ள தனிப்பட்ட மனிதரின் அறியாமையாலும் பெருமளவில் இவை அழிந்துகொண்டிருக்கின்றன. இவற்றைக் காக்க வேண்டும் என்று பெரும்பாடுபடும் கல்வெட்டு ஆய்வாளர்களின் முயற்சிகள் அனைத்தும் தோல்வியையே தழுவுகின்றன. ஒவ்வொரு நாளும்-ஏன்-ஒவ்வொரு மணி நேரமும், சிற்றூர்களின் ஏதோ ஒரு மூலையில் மதிப்பிடற்கரிய செப்பேடுகள் அழிக்கப்படுகின்றன. ஏன் தெரியுமா? அந்த உலோகத்தின் உபயோகத்திற்காக! அதுவும் தனிப்பட்ட மனிதரின் சொந்த உபயோகத்திற்காக. சிறந்த மதிப்புடைய கல்வெட்டுக்கள் பல அழிக்கப்பட வேண்டுமென்ற தவறான எண்ணத்திலும் அழிக்கப்படுகின்றன. சான்றாக, அமராவதியில் இருந்த கல்வெட்டுகள் அழிக்கப்பட்டன; சிற்பங்கள் சிதைக்கப்பட்டன. முகமதியர்களுக்கு அதில்தான் நிம்மதி போலும்! எழுத்துக்களை உடைய ஸ்தூபங்கள் கூட ஓங்கியுயர்ந்த கட்டிடங்களில் மறைந்தன. இது போல, தாராவில் உள்ள போஜனின் பல்கலைக்கழகத்தில், இந்துக் கோயில்களின் கல்வெட்டிருந்த கற்கள் மசூதிகளின் சுவர்களாக மாற்றி மறைக்கப்பட்டன. இவை உடனே காக்கப்படவேண்டும். சிறந்த மன்னர் பெருமக்களின் அருமையான வேலைத்திறன் படைத்தோர், எழுதி வைத்துத் தந்த வரலாறு, இன்றைய பக்தி மிகுந்தோரின் திருப்

பணிகளால் அழிக்கப்படுகின்றது. சிக்கனத்தை எண்ணி பழைய கற்களில் உள்ள கல்வெட்டுக்களை மாற்றியும், புதிதாக்கியும் மீண்டும் பயன்படுத்து கின்றனர். தென்னிந்தியக் கோயில்களில் நடக்கும் இத்தகைய திருப்பணி கள் உடனே கவனிக்கப்படவேண்டிய ஒன்று. மயூரனின் சூரிய சதகம் எழுதப்பட்ட தூண்கள் கவனிப்பாரின்றிப்போயின. இவை காஞ்சிபுரத்தி லிருந்த சூரிய மண்டபத்தைச் சார்ந்தவை. 10-ஆம் நூற்றுண்டைச்சார்ந்த சோழர் கால எழுத்துக்களால் எழுதப்பட்டவை. இவை அறங்காவலர்க ளின் அறியாமையால் அங்கிருந்து அகற்றப்பட்டு வேறிடத்தில் கட்டடத் திற்கு உபயோகப்படுத்தப்பட்டன. கல்வெட்டு வரலாற்றில் மதிப்பிடத் தக்க அரிய செல்வம் இது. ஒரு குறிப்பிடத்தக்க குறைந்த செலவில் முடிக்கக் கூடிய இந்தப்பணிக்கு, அவ்வரிய செல்வம் பலியிடப்பட்டது.

சில நேரங்களில் பொதுப்பணித்துறையும் (P.W.D.) இந்த அழி விற்கு காரணமாகிவிடுவதுண்டு. மதிப்பிடற்கரிய சிறந்த கட்டிடப்பகுதி களும், சிற்பங்களும், கல்வெட்டுக்களும் அவர்களால் கட்டிடப்பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டுவிடுகின்றன. இத்தகைய நிகழ்ச்சி திருச்சி மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரம் கோயிலில் நடந்தது. கொள்ளிடஅணை கட்டு வதற்காக, கோயிலின் பாதுகாப்பான கட்டிடப் பகுதிகள் எடுத்துச் செல் லப்பட்டன. அதுபோல காவேரிப்பாக்கத்தில் உள்ள தெப்பம் கட்டு வதற்குத் தென் இந்தியாவின் மிகச் சிறந்த கல்வெட்டிருந்த கற்கள் பயன் படுத்தப்பட்டன. வெள்ளி, தங்கக் காசுகளைப் பித்தான்களாகவும், காதணி களாகவும் பயன்படுத்தும் மனப்போக்கும் இத்தகைய அழிவுக்கு மற்றொரு காரணமாகிறது.

எனவே கல்வெட்டு பற்றிய அறிவு மிகவும் இன்றிமையாத ஒன்று கிறது. பெருமன்னர்களின் வாழ்விலும் அவர்களின் ஆட்சியில் வாழ்ந்த மக்களின் வாழ்விலும், ஒளி கூட்டும் தன்மையன கல்வெட்டுக்கள். குறிப் பிடத்தக்க நிகழ்ச்சிகளையும் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. சிலநேரங் களில், பிற இலக்கியச் சான்றுகளின்றும் நாம் அறியும் அரசைப் பற்றிய செய்திகளை வலியுறுத்தவும், புதிய செய்திகளைத் தரவும் கல்வெட்டுக்கள் உதவுகின்றன. அவை தரும் நாட்டுப் பிரிவுகளின் மூலம், பண்டைய நகரங்களையும், ஊர்களையும் அறிந்து கொள்ள முடிகிறது. அக்காலத்து இருந்த பல்வகை நிறுவனங்களையும் அவை தெரிவிக்கின்றன. பல்வேறு அரசு அதிகாரிகளின் பதவிகளையும், அவ்வவர்தம் பணிகளையும் கல்வெட்டுக்கள் அளிக்கின்றன. கடல்வழி வாணிகமும், அதன் வழிவந்த செல்வமும், வணி கர்தம் தனிச்சலுகைகளும் காட்டப்படுகின்றன. சமய அடிப்படையிலான

நம்பிக்கைகள், கோயில்களில் உள்ள அறத் தொண்டுகள், மக்களின் பெருந்தன்மை, துறவியர்கள், பல்கலைக்கழகங்கள் பற்றிய எல்லாச் செய்திகளும் உள்ளன. கல்லூரிகள் மருத்துவமனைகள், அறநிலையங்கள் இவை நடத்தப்பெற்ற முறையையும் காட்டுகின்றன.

அரச பரம்பரையினையும், அரசனின் வெற்றிகளையும் விரிவான முறையில் தருவன, பிரசஸ்தி அல்லது மெய்க்கீர்த்தி எனப்படும் கல்வெட்டுப்பகுதிகளே. நிலக்கொடையினைக் குறிக்கும் கல்வெட்டுக்களில் எல்லைகள், ஊர்களின் பெயர்கள் ஆகிய நிலப்பிரிவுகள் குறிக்கப்படுகின்றன. இவற்றின் மூலமாக இன்றைய இடங்கள் பலவற்றினைக் கண்டு கொள்ள முடிகின்றது. ஹர்ஷ வர்த்தனரின் பனஸ்காரா செப்பேடு, இன்றைய அஹிச்சத்திராவை, 'அஹிச்சத்திரபுத்தி' என்று குறிக்கிறது. இதுபோலவே, கல்யாணி, கல்யாணபுரம் என்றும்; எல்லோரா, எலாப்புரம் என்றும்; தாலகுண்டா, ஸ்தானகுண்டுரா என்றும் வழங்கப்பட்டன. அசோகனின், ரும்மென்டை என்ற இடத்துக் கிடைத்த தூண் கல்வெட்டின் மூலமே, 'லும்பினி' கிராமத்தைச் சரியாகக் கண்டுகொள்ள முடிந்தது. அமராவதியில் கிடைத்த கல்வெட்டொன்று, கொடுரில் வாழ்ந்த ஒருவனை 'குடூர நிவாசிகஸ' என்றுக் குறிப்பிடுகிறது. இன்றைய கொட்டூரு இதுவே என்பர். 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கீழைச் சாளுக்கியரின் தெலுங்குக் கல்வெட்டொன்றில், கொண்டுகூர், பெஜவாடா இவை குறிக்கப்படுகின்றன. பண்டைக் கல்வெட்டுக்களில் பிஸ்தாபுரம் என்று குறிக்கப்படுவதே, இன்றைய பித்தாபுரம் ஆகும்.

கோயில்களின் சுவர்களிலும், அதிட்டானங்களிலும், தூண்களிலும் அதிக அளவில்,பிரசஸ்திகளும், மெய்க்கீர்த்திகளும் இடம் பெறுகின்றன. தஞ்சைப்பெருவுடையார் கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் இதற்கு மிகச்சிறந்த சான்றுகளாம். மாமன்னன் இராஜராஜன் கோயில் எடுத்ததையும், ராஜராஜீஸ்வரமுடையாரை எழுந்தருளுவித்ததையும் இவை கூறும். அவனாலும், அவனது தமக்கை, அரசியர், ஆசிரியர், தானைத் தலைவர்கள் ஆகியோராலும் அளிக்கப்பட்ட கொடைகள் அனைத்தும் குறிக்கப்படுகின்றன. நிறைந்த அளவில், பெரும் எண்கள், எடைகள், அணிகளின் மதிப்பு, கோயிலுக்களிக்கப்பட்ட அழகிய செப்புத் திருமேனிகள் ஆகிய அனைத்தும் இங்கு பொறித்து வைக்கப்பட்டுள்ளன. சோழர்களின் கலைத்திறனுக்கு எடுத்துக் காட்டுகள் இவை. இக்கல்வெட்டுகள் தரும், அக்கால அணிகளின் வகைகளும், அவற்றின் அமைப்பும், வியப்பூட்டுந்தகைமையன. சான்றாக திருமுடி (மகுடம்) பொற்பூ (பொன்

ளுவ் ஆனமலர்) திரள்மணி வடம் (சில இழைகளை இணைத்துச் செய்யப்பட்ட அணி) அன்னம்; கிளி; கைக்காரை (ஒருவகைக் கையணி); வாளி அல்லது வடுகவாளி (காதணி) பத்திரம் (மங்கல அணி) சுட்டி (நெற்றியில் அணியும் அணி) கண்டநாண் அல்லது கண்டத்துடர் (கழுத்தணி) கடகம் (கையணி) மோதிரம் (விரலணி) பட்டிகை (இடையணி) திருப்பட்டம் (மகுடம்) மகுடம (தலையணி) முத்து வளையல், இரத்தின வளையல் (கையணி). இவையனைத்தும் கல்வெட்டு குறிக்கும் மிக நீண்ட பட்டியலில் உள்ள ஒரு சிலவே. வட்டம், அனுவட்டம், ஒப்புமுத்து, குறுமுத்து போன்ற பலவகையான முத்துக்களின் பெயர்களும் குறிக்கப்படுகின்றன.

எடைகளையும், அளவுகளையும் பற்றிய செய்திகளைக் கல்வெட்டுக்கள் நிரம்பத் தருகின்றன; மிகச்சிறிய அளவுகளும் கூட குறிப்பிடப்படுகின்றன. இவற்றின் மூலம் அளவுகள் பற்றிய ஒரு பட்டியலே தயாரிக்கலாம். பொன், வெள்ளி, செம்பு, பிற உலோகங்கள் முதலியவற்றை நிறுக்கும் எடைகளினளவுகளும் உள. நந்தர்கள் காலத்து நந்தோபக்ரமதுரோண என்று குறிக்கப்பட்ட துரோணம் வழங்கத் தொடங்கியது போலவே, பல்லவர் காலத்தும் சோழர் காலத்தும் பல அளவுகள் வழங்கத் தலைப்பட்டன. பல்லவ மன்னன் மகேந்திரனின் பெயரால் விடேல் விடுகு என்றும், இராஜராஜனின் பெயரால் அருமொழிதேவன் என்றும், இவைபோல மன்னர் பெயர்களால் சில இடத்தும், தக்ஷிண மேருவிடங்கன், ஆடவல்லான் இவைபோல இறைவன் பெயரால் சில இடத்தும் அளவுகள் பெயர் பெற்றன. பொருட்களின் விலைகளையும் கல்வெட்டுக்கள் மூலம் அறியலாம். அதன்வழி இன்றைய விலைகளுடன் ஒப்பிட்டுக்காணவும் வழியுண்டு. ஆனால் அவை பெரும்பாலும், நெல், அரிசி, பிற தானியங்கள், நெய், எண்ணெய் ஆகியனவாகக் குறிக்கப்பட்டிருக்கும்

பண்டைக்காலத்து, நீர்ப்பாசன வசதிகள் மிகவும் சிறப்புடன் இருந்தன. அதனையும் கல்வெட்டுக்கள் மூலம் விரிவாக அறிய முடியும் என்பதை, வி. வெங்கய்யா அவர்களின் கட்டுரை (Annual report of the Director General of Archaeology in India for 1903-4) சிறப்பாகக் காட்டுகிறது. மகேந்திர வாடியில் இருந்ததாகக் குறிக்கப்படும் மகேந்திர தடாகம் பல்லவர் காலத்துச் சிறந்திருந்த ஏரிகள் ஒன்று. வைரமேக தடாகம், பரமேஸ்வரதடாகம், சித்திரமேகதடாகம் ஆகியனவும் பல்லவர் காலத்துச் சிறந்திருந்த பாசன வசதிக்கான பிற குளங்களாகும். நந்திவர்மன் காலத்தில் செய்யப்பட்ட திருவெள்ளறைக் கிணறும் குறிப்பிடத்தககதாம். 'காவிரிக்குக் கரைகட்டினான் கரிகாலன்' என்ற கல்வெட்டுச் செய்தி சிறப்

புப் பெறும் ஒன்றாகும். இதுபோலவே, முடிகொண்டான், உய்யக்கொண்டான் போன்ற வாய்க்கால்கள் 10, 11-ஆம் நூற்றாண்டில் சோழர்களால் அமைக்கப்பட்டன. இதுபோன்ற வாய்க்கால்களைப் பாண்டியர் கல்வெட்டுக்களும் குறிக்கின்றன.

இந்தியாவில் இருக்கும் மிகப் பெரிய, புகழ்பெற்ற போஜசாகர் ஏரி, கட்டடக் கலைஞரின் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. அழகும், சுற்றிலும் இயற்கையின் சூழலும் நிறைந்து இவ்வேரி விளங்குவது. சிறந்த ஆட்சியாளனாக, வெற்றியின் மைந்தனாக, புலவனாக, புரவலனாக, பேராசிரியனாக விளங்கிய மன்னன் போஜன், வியாகரணம், அலங்காரம், சாங்கியம், யோகம், சிற்பம் ஆகியவற்றில் தேர்ந்திருந்தது மட்டும் இன்றிக் கட்டிடக் கலையிலும் சிறந்திருந்தான் என்பதற்கு எடுத்துக்காட்டு இவ்வேரி. இதை அறியும்போது நாம் பெருமைப்படுகிறோம்.

ஸ்கந்தகுப்தனின் ஜுனாகத் கல்வெட்டு, மிகப் பெரியதொரு பாசன ஏரியைச் சீர் செய்த பணியைக் குறிக்கின்றது. மிகப் பெரிய இவ்வேரி, பண்டுதொட்டே சிறப்புப் பெற்றது. மௌரியர் ஆட்சிக் காலத்து இருமுறை புதுப்பிக்கப் பெற்றது க்ஷத்ரப மன்னன் ருத்ரதாமனின் ஆட்சியில் மீண்டும் பணிசெய்யப்பட்டது. அதுவே மீண்டும் ஸ்கந்த குப்தன் காலத்தும் திருத்தப்பெற்றது. சுதர்சனம் எனப்படும் ஏரியின் கரைகளும், சிறப்புடன் மீண்டும் கட்டப்பட்டன (Fleet. C. Inser. Ind. III p. 61) மகாக்ஷத்ரபன் ருத்ரதாமனின் கல்வெட்டிலும், இவ்வேரியைப் பற்றியும், இங்கு பாய்ந்த வாய்க்காலில் கரைபுரண்டோடிய நீரைப் பற்றியும் விரிவான காட்சியைக் காண்கிறோம்.

பௌதேயர், அர்ஜுனயனர், ஔதும்பரர், மாளவர், பாஞ்சாலர், வதாஸ்வகர் ஆகிய பண்டைய மக்கள் குடியினரால் வெளியிடப்பட்ட காசுகள் கண்டெடுக்கப்பட்டபோது, இலக்கியம் கூறிய செய்திகளை வரலாற்று ஆசிரியர்கள் முன்னைவிடச் சிறப்பாக அறிந்துகொள்ள முடிந்தது. பண்டைய இந்தியாவில், இருந்த குடி ஆட்சியினை அறியவும், வரலாற்றைத் திரும்பப் பெறவும் இவை உதவின. காசுகளே இவ்வாறு உதவின என்றால் கல்வெட்டுக்கள் அதைவிட ஆயிரம்மடங்கு வரலாற்று ஆசிரியர்கட்கு உதவியுள்ளன. கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தினை அறிந்ததின் மூலம் இந்தியாவின் அரசியல் பற்றிய தெளிவான கருத்துக்கள் கிடைத்தன. அதுபோலவே உத்திரமேரூர்க் கல்வெட்டை அறிந்து கொண்டதன் மூலமாக 10 ஆம் நூற்றாண்டில், குடியரசு முறையிலான

சிற்றூர்களின் ஆட்சிமுறை நன்கு புரிந்தது. ஊராட்சி மன்றங்களில், இடம்பெற வேண்டுமாயின், குறிப்பிட்ட அளவு சொத்துரிமை உடையவர்களாயும், குறிப்பிட்ட வயது வரம்பினை மீறுதவர்களாகவும், நன்னடத்தையும் திறமையும் உடையவர்களாயும் இருத்தல் அவசியம் என்பதை இக்கல்வெட்டின் மூலம் அறிகிறோம். மேலும், ஊர்ச்சபையில், யார் யார் இடம் பெறுதல் முடியாது என்பதையும் அக்கல்வெட்டே காட்டுகிறது. இச்சபைக்குரியாரைத் தேர்ந்தெடுக்கும் முறை சிறப்பான ஒன்று. ஊர் பலபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பிரிவிலும், சிறிய வாயினையுடைய குடங்கள் வைக்கப்பெறும். அவ்வப்பிரிவினைச் சார்ந்தோர் தேர்ந்தெடுக்க விரும்புபவர்களின் பெயர்களைச் சிறிய நறுக்கோலையில் எழுதி அக்குடத்தினுள் போட்டு விட வேண்டும். தேர்தல் நாளன்று ஊர் மக்கள் அனைவரும் ஒன்றுகூடுவர். ஒவ்வொரு குடத்திலும் உள்ள நறுக்கோலைகள் மற்றொரு வெற்றுக் குடத்தினுள் கொட்டப் பெற்று நன்கு கலக்கப் பெறும். எதுவும் அறிய இயலாத சிறுவன் ஒருவன் அதனின்றும் ஓர் ஓலையினை எடுத்துத் தர, அதிலுள்ள பெயர் வாசிக்கப் பெறும். இவையனைத்தும் நியாயத்தார் முன்னிலையில், திருக்கோயிலின் முன்பு நடைபெறும். ஒவ்வொரு பிரிவுக்கும் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். இதனை அடுத்து, தோட்டங்கள் கழனிகள், ஏரிகள், பொன், நீதி போன்றவற்றை கவனிக்க ஒவ்வொன்றுக்கும் தனித் தனியே வாரியங்கள் அமைக்கப்படும்.

சமூகக் குற்றங்கள் புரிந்தோருக்கான தண்டனைகள், அவ்வழக்குகள் நடைபெற்றவிதம் ஆகிய அனைத்தையும் நமக்குக் கல்வெட்டுகள் காட்டுகின்றன. சான்றாக ஒரு மனிதன் இரவில் வேட்டைக்குச் சென்றான். அவன் பன்றி ஒன்றின் மீது வைத்த குறி தவறி, மனிதன் ஒருவனின் உயிரைக் குடித்தது. இறந்த அவனின் நலனுக்காக, இறைவனின் திருமுன்னர் திருவிளக்கிட முப்பத்திரண்டு பசுக்கள் தர வேண்டும் என்ற தண்டனை அவனுக்குத் தரப் பட்டது.

சமுதாய நிலைகளைப் பற்றியும், கல்வெட்டுக்கள் அரிய செய்திகளைத் தருகின்றன. தம்முள் முரண்பட்ட ஒரு வைணவ அடியாரையும், சமண ஆசிரியரையும் சமாதானப்படுத்தி, அவர்களுள் மாறுபாடு வாராவண்ணம் செய்தான் விஜயநகர மன்னன் ஒருவன். கன்யாசுல்கம், வரதட்சிணை இவை பெறக் கூடாது என்றும், அவ்வாறு வாங்குவோர் மன்னரால் தண்டிக்கப் படுவது மட்டும் அன்றி தத்தம் சாதியினின்று விலக்குப் பெறுவர் என்றும், நூல் வல்லார் பலர் கூடி, கையொப்பமிட்டுக் கொடுத்த நிகழ்ச்சியினை

மற்றொரு விஜயநகரக் கல்வெட்டு விரிவாகக் கூறும் (தெ க. தொ. I பக்கம் : 84). அரச அனுமதியுடன், சில இடங்களில் மணப்பெண்ணும், மணமகனும் குதிரை மீதேறி நகர்வலம் வருவதும் உண்டெனப் பல கல்வெட்டுக்கள் மூலம் அறிகிறோம். (எபிகிராபிகா இண்டிகா VI பக்கம்: 346).

இந்தியர் தம் சிறந்த அறிவாண்மையின் பிரதிபலிப்பே கோயில்கள் எனில் மிகையன்று. ஒவ்வொரு ஊர் மக்களின் வாழ்க்கைத்தேருக்கும் அச்சாணியாக விளங்குபவை கோயில்கள். வழிபாட்டிற்குரிய சிறப்பிடமாக, அழகின் இருப்பிடமாக, கலைகளின் வாழ்விடமாக, மக்களின் மகிழ்ச்சிக்குரிய இடமாக, கல்விச் சாலைகளாக அனைத்துமாக விளங்கியவை கோயில்கள். அனைத்திற்கும் தலைமையிடமாகக் கோயில்களைக் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. அவையே சிறந்த அறநிலையங்களாகவும் விளங்கின. கோயிலை நிர்வகிக்கும் சபையினர் நன்னடைத்தையும் சிறந்த அறிவுத்திறனும் கொண்டோராக இருத்தல் அவசியம் சமய இலக்கியங்கள் எழுத்து. பேச்சு வல்லமை, இலக்கணம், தத்துவம் ஆகிய பல்வேறு துறை வகுப்புக்களை நடத்தும் நிறுவனமாகவும் கோயில்கள் விளங்கின. பாரதத்திற்கேயுரிய தனிப்பெரும் தத்துவங்களுக்கும் பண்பாட்டுக்கும் பல நூற்றாண்டுகளாக ஊன்றுகோலாய் விளங்கி அவற்றை உருவாக்கும் தேசிய இதிகாசமான மாபாரதத்தினை விரித்து உரைசெய்வதற்கும் அரசன் நிவந்தங்கள் அளித்துள்ளான். இவ்வுரைகளின் மூலம், சிறுர்களும், முதியோர்களும் சமுதாயத்தில் எண்ணத்தாலும், செயலாலும் உயர்ந்து சிறக்க வாய்ப்புக் கிட்டியது. ஒழுக்கமும், உலகினைப் பற்றிய பொது அறிவும், அரசியல், சமுதாயம், பொருளாதாரம் இவற்றில் பரந்த நோக்கமும் இவ்வழியாகச் சிறப்பாகப் போதிக்கப் பெற்றது.

கோயில்களே மருத்துவமனைகளாகவும் விளங்கின. மல்லிகாபுரத்தில் உள்ள காகதியர் கல்வெட்டொன்று மகப்பேறு மருத்துவமனையொன்றைக் குறிப்பிடுகிறது. சேமித்து வைக்கப்பட்டிருந்த மருந்துகளையும், அவற்றின் அளவுகளையும் குறிக்கும் நீண்ட பட்டியல் ஒன்றைத் தமிழ்க் கல்வெட்டு கூறுகிறது. நிதிமிகுந்த கோயில்கள் பஞ்ச காலங்களில் மக்களுக்கு உணவு அளிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டன.

கோயில்களில் காலையும், மாலையும், குழல், மத்தளம் போன்ற இன்னிசை முழக்குவோருக்குத் தனி நிலங்கள் அளிக்கப்பட்டன. கோயிலில் வீணை வாசிக்க வசதி செய்ததை ஒரு கல்வெட்டு காட்டும். என் சொந்த மாவட்டத்தில், இறைவனின் முன்னர் நடனம் ஆடுவதையும்,

பாடல்கள் பாடுவதையும், பாரதம் படித்து விரித்துரைப்பதையும் நானே பார்த்திருக்கிறேன். ஒரு கோயிலில், இராஜராஜனோ அல்லது இராஜேந்திரனோ நாட்டியத்தினைக் கண்டான் என்பது வியப்பிற்குரிய ஒன்றல்ல. ஆனால் அவரது கலையார்வத்தினையும், அதனால் அவர் தந்த பரிசுகளையும் காணும்போது அவர்தம் சிறப்பு ஓங்குகிறது. இதற்கெனவே நாட்டிய மண்டபங்கள் கோயில்களில் இருந்தன. சமுதாயத்தில் இது பற்றி சிலர் கருத்து மாறுபாடு கொள்ளினும், நாட்டிய மகளிர் கோயில்களில் இன்றியமையாதோராயிருந்தனர். இதுபோலவே நாடகங்களும் நடிக்கப் பெற்றன. ரங்க மண்டபங்கள் திறந்தவெளி அரங்குகளாக விளங்கின. இராஜேந்திரன் காலத்தில் நடைபெற்ற இராஜராஜேஸ்வர நாடகம் இத்தகைய அரங்கிலேயே நடைபெற்றது.

விண்ணகரங்களில், ஆழ்வார் பரசுரங்களைப் படுவார்க்கும், சிவன் கோயில்களில் தேவாரப் பதிகங்கள் பாடுவார்க்கும் கொடை அளிக்கப்பெற்றது. ருக், யஜுர், சாம வேதம் பாடுவார்க்கும் இதுபோன்ற நிவந்தங்கள் இருந்தன. கணக்கர்கள், அடிசில் அட்டுவோர், தண்ணீர் ஊற்றுவோர், குயவர், மாலை தொடுப்போர், தோட்டக்காரர், ஓவியர், சிற்பி, மரத்தச்சர் ஆகிய அனைவர்க்கும் கோயில்கள் பணிகளை அளித்தன. ஆண்டில் பல மாதங்களில் விழாக்கள் கொண்டாடப்பட்டன. வேற்று நாட்டு மக்களும், வேற்றூர் மக்களும் கலந்து, இணைந்து உறவாடும் நாட்டு ஒருமைப்பாட்டின் வாயில்களாக இவை அமைந்தன. கோயிலுக்கு வெளியே அமைந்து பல்துறைக் கல்விகளையும் ஆய்வதற்கென விளங்கிய கல்விச் சாலைகளையும் மன்னர்கள் ஆதரித்தனர். இத்தகைய கல்வி நிறுவனங்கள் மிகச் சிறந்த மதிப்புடன் திகழ்ந்தன. காஞ்சியிலிருந்த இத்தகைய நிறுவனம் ஒன்று, பல்லவ அரசிற்கு இளவரசனுக நந்திவர்ம பல்லவமல்லனைத் தேர்ந்தெடுக்கும் அளவிற்குச் சிறப்புப் பெற்றிருந்தது என்பதை காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயில் கல்வெட்டு காட்டுகிறது. தன் சமயம் மட்டும் அன்றிப் பிற சமயங்களையும் மன்னர்கள் நட்புறவோடு பாராட்டினர் என்பதைக் கல்வெட்டுக்கள் மூலம் அறிகிறோம். சோழர்களால் புத்தமதம் ஆதரிக்கப்பட்டது என்பதை நாகபட்டினத்துச் சூடாமணி விகாரம் காட்டா நிற்கிறது. சோழப் பேரரசன் இராஜராஜனின் தமக்கையார் திருமலையில் ஒரு சமணக்கோயிலையும் எடுப்பித்துள்ளார். தேவராய மன்னனும் ஒரு சமணக்கோயில் எடுத்துள்ளான. பேரரசன் அசோகனும் சமயப் பொறையினைப் பற்றித் தன் கல்வெட்டுகளில் கூறியுள்ளான். அவனது சாசனங்களிலிருந்து புறச்சமயத்தைச் சார்ந்தவர்களைத் துன்புறுத்துவது மிக இழிந்த செயல் என்று அவன் கருதி

யமையை அறியலாம் சமயங்களிடையே சமநோக்கினை வெளிப்படையாகக் கூறியுள்ளான். பிற சமயங்களையும் சிறப்பாகப் போற்ற வேண்டும் என்பதே அவனது கருத்து.

சில இடங்களில் அம்பும் வில்லும் ஏந்திய வீரனும், ஆநிரைகளும் பொறிக்கப்பட்ட கற்களைக் காணலாம். வீரன் புலியுடன் போரிடுவது போலக் காட்டப்படுவதும் உண்டு. குதிரை மீதோ, யானை மீதோ ஏறி வீரன் போரிடும் காட்சியும் சில இடங்களில் காணப்படும். இவை ஆநிரை கவரும் போரில் இறந்து பட்ட வீரனுக்காகவோ அல்லது ஊருக்குத் தொல்லை தந்து கொண்டிருந்த புலியைக் கொன்ற மறவனுக்காகவோ அல்லது தான் கூறிய வஞ்சினத்தின் படி கொற்றவைக்குத் தலையரிந்து பலி கொடுத்த வீரனுக்காகவோ அல்லது கடுஞ்சமர் புரிந்து போர்ப்புறத்தே இறந்து விண்ணுலகு எய்திய பெருவீரனுக்காகவோ எடுக்கப்பட்ட நினைவுக்கற்கள் ஆகும். இலக்கியம் குறிக்கும் நடுகற்கள் என்பன இவையே. வீரனின் உருவத்தோடு, இச்செய்திகளையும் அக்கல்லிலேயே பொறித்து வைத்திருப்பர். கணவன் உயிர் நீத்த இடத்துத் தீப்பாய்ந்து தம்முயிர் துறந்த மனைவியருக்காக எடுக்கப் பெற்ற நினைவுக் கற்களும் உண்டு. இவற்றில் வளையல்கள் அணிந்த பெண்ணின் கரம் உயர்த்திய நிலையில் காட்டப்பட்டிருக்கும். இவை மாசதிக்கற்கள் என்று பெயர் பெறும். பிரபாகரவர்த்தனரின் மனைவி யசோமதி, சுந்தரச் சோழனின் மனைவி வானவன் மகாதேவி ஆகிய புகழ் வாய்ந்த அரசமாதேவியர் தீப்பாய்ந்த செய்தி இடைக்காலத்து வரலாற்றில் காணப்படுகிறது. யசோமதி பெருமன்னன் ஹர்ஷனின் அன்னை; வானவன் மாதேவியோ பேரரசன் இராஜராஜனின் தாய். சிறப்பு வாய்ந்த இராஜராஜனின் தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டு மூலம், இளவரசி குந்தவை தன் தாய் வானவன்மாதேவிக்குச் சிலையெடுத்த செய்தியைத் தெரிந்து கொள்கிறோம்.

சில கல்வெட்டுக்கள் நிலப்பிரிவு, வரிவிகிதம், அளவைகள், பிற நில உரிமை முறைகள் ஆகியவற்றைக் காட்டுகின்றன. அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகள், மக்களின் நில உடைமை பற்றிய விவரங்கள், உழைக்கும் கரங்களின் அனுபவ உரிமை, அதில் அரசின் ஆதிக்கம் ஆகிய அனைத்தையும் கல்வெட்டுக்கள் தெளிவாகச் சுட்டுகின்றன.

அரசியற் பிரிவுகளையும் கல்வெட்டுக்கள் மூலம் நாம் அறிகிறோம் இன்றைய மாநிலங்களுக்குச் சமமாகத் 'தேசம்' என்ற பிரிவைக் கூறலாம். வடநாட்டில் தேசம், 'புக்தி'களாகவும் புக்திகள், 'விஷயங்'களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. வளநாடு, நாடு, கோட்டம், ஊர் என்பவை தென்னகத்துப்

பிரிவுகள் ஆகும். தமிழ், கன்னடக் கல்வெட்டுக்கள் மூலமாக, பரந்த நிலப் பகுதி, மண்டலம், பாடி அல்லது வாடி என்று வழங்கப் பட்டிருந்தமை புலனாகின்றது. சோழ மண்டலம், தொண்டை மண்டலம், கங்கவாடி, இரட்டபாடி, பெரும் பாணப்பாடி, நுளம்பபாடி ஆகியவற்றைச் சான்று களாகக் கூறலாம். பள்ளம் கொண்டா, திருமலை, வெண்குன்றம் ஆகியன போன்று அருகில் உள்ள மலைகளின் பெயராலும் சில பகுதிகள் பெயர் பெற்றிருந்தன. நாட்டில் எல்லைகளாகப் பெருவழிகள் பல அமைந்தன. அவைகளின் பெயராலும் நாடுகள் பெயர் கொண்டிருந்தன என்பதை வட களவழி நாடு, வடவழி நாடு என்பனவற்றால் அறியலாம். இதுபோலவே ஆறுகளும் கரைகளும் கூட நாட்டின் எல்லைகளாக விளங்கின. சோழ நாட்டில், அருமொழி வளநாடு என்பது போல மன்னன் பெயராலும், நித்த விநோத வளநாடு என்பது போல கலை, பண்பாட்டுப் பெயர்களாலும் கூட பல பிரிவுகள் பெயர் பெற்றிருந்தன.

அரசனின் கீழ்ப்பணிபுரிந்த அதிகாரிகள் பலர். சசிவர், அமாத்யர், பிரதான அமாத்யர் ஆகியோர் அமைச்சுப் பணி புரிந்தவர்கள். மகாதண்ட நாயகர், மகாபலாதிகிருதர். மகாசேனாபதி ஆகியோர் தானைத் தலைவர்கள். இவர்களின் கீழே அசுவபதிகள் என்னும் குதிரைப் படைத் தலைவர்களும், பீலுபதிகள் என்னும் யானைப் படைத் தலைவர்களும் பணிபுரிந்தமை அறிகிறோம். புக்திகளை நிர்வகிக்கின்ற பொறுப்பினை, உபரிகர்கள் ஏற்றிருந்தனர்; விஷயங்களை நிர்வாகம் செய்தோர் விஷயபதிகள் அல்லது விஷயமாத்திரர்கள் எனப்பட்டனர். அயுக்தர்கள், வியாபிருதர்கள், அதிகிருதர்கள் ஆகியோர் வருவாய்த்துறை அதிகாரிகள் ஆவர். காவல் பிரிவில் சாரர்கள், படர்கள் ஆகியோர் குறிக்கப்படுகின்றனர். நியாயாதி கரணர்கள். தர்மாதிகரணர்கள் ஆகியோர் நீதித்துறையினைச் சார்ந்த அதி காரிகள். இவர்கள் அனைவரும் பெரும்பாலும் வடஇந்தியக் கல்வெட்டுக்களி லேயே குறிக்கப்படுகின்றனர். சிவகந்தவர்மபல்லவனின் ஹிரஹதஹல்லிச் செப்பேடு அமாத்யர்களைக் குறிக்கிறது. பிற்காலப் பல்லவர் செப்பேடுகள் மாத்ரர்களைக் குறிப்பிடுகின்றன. மௌரியர்தம் மகாமாத்ரர்களோடு இவர்களை ஒப்பு நோக்கலாம். பல்லவர்தம் பிராகிருதச் செப்பேடுகள், வல்லவர், கோவல்லவர், ரகஸ்யாதிகிருதர் ஆகிய அதிகாரிகளைக் குறிப்பிடு கின்றன. காசாக்குடிச் செப்பேட்டில், வாயில் கேட்போரென்னும் அதிகாரிகளும், 'கோசாத்யக்ஷர்கள்' என்னும் கருவூல அதிகாரிகளும் சுட்டப்பட்டுள்ளனர். அதே செப்பேடு அதிகரணதண்டர் என்னும் அதிகாரிகளையும் குறிப்பிடுகின்றது. இவர்கள் நீதித்துறையைச் சார்ந்தவர் களாக இருத்தல் வேண்டும். மன்னனுடன் நெருங்கிய தொடர்பு

கொண்ட திருமந்திர ஓலை என்பாரும், மன்னன் இடும் ஆணைகள் அனைத்தையும் எழுதும் திருவாய்க் கேழ்வி என்பவரும் குறிக்கப்படுகின்றனர்.

ஜாவா, சுமத்ரா, போர்னியோ, அன்னும், பர்மா, ஈழம், லக்ஷத்வீபம் மளத்வீபம் ஆகிய தீவுகளுடன் இந்தியர்கள், பண்பாட்டு தொடர்பும் இராணுவத் தொடர்பும் கொண்டிருந்தனர். இராஜராஜனும், இராஜேந்திரனும் கடல் கடந்து பல வெற்றிகளைப் பெற்றனர். அவர்களின் கல்வெட்டுக்கள் மூலம் அறியப்படும் நாடுகளில் பல, இன்றைய நிலையில் எதுவென அறிய இயலா நிலையில் உள்ளன. இராஜேந்திரனின் மெய்க் கீர்த்தி அவனது கடல்கடந்த வெற்றியினை விரிவாக விளக்குகிறது.

' அலைகடல் நடுவுள் பலகலஞ் செலுத்திச்
சங்கிராம விஜயோத்துங்க வர்மனாகிய
கடாரத்தரையனை வாகையம்
பொருகடல் கும்பக் கரியொடும் அகப்படுத்
துரிமையிற் பிறக்கிய பெருநிதிப் பிறக்கமும்
ஆர்த்தவ னகநகர் போர்த்தொழில் வாசலில்
விச்சாதிரத் தோரணமும் மொய்த்தொளிர்
புனமணிப் புதவமும் கனமணிக் கதவமும்
நிறைசீர் விசயமும் துறைநீர்ப் பண்ணையும்
வண்மலை யூரெயிற் றொன்மலையூரும்
ஆழ் கடல் அகழ்சூழ் மாயிருடிங்கமும்
கலங்கா வல்வினை யிலங்கா சோகமும்
காப்புறு நிறைபுனல் மாப்பப் பாளமும்
காவலம் புரிசை மேவிலிம் பங்கமும்
வளைப்பந் தூருடை விளைப்பந் தூரும்
கலைத்தக்கோர் புகழ் தலைத்தக் கோலமும்
தீதமர் பல்வினை மாதமா லிங்கமும்
கலாமுதிர் கடுந்திறல் இலாமுரி தேசமும்
தேனக்க வார்பொழில் மானக்க வாரமும்
தொடுகடற் காவற் கடுமுரட் கடாரமும் '' (S.I.I. Vol. II p. 109)

என இராஜேந்திரனின் மெய்க்கீர்த்தி கூறும்.

பல ஆண்டுகளுக்கு முன்னரே, ஹுல்ஷ், வெங்கய்யா போன்ற பல அறிஞர்கள் முயற்சி செய்தும் இம்மெய்க்கீர்த்தி குறிக்கும் நாடுகள் பல எதுவெனத் தெரியவில்லை. இதில் உள்ள நக்கவாரம் என்பது இன்றைய நிக்கோபார் தீவுகள் என்றும், பப்பாளம் என்பது இன்றைய பர்மா என்றும் கூறியுள்ளனர். இம்முயற்சியில் திரு. சீதெஸ் (Ceodes) அவர்கள் செய்த பணி சிறப்பானது. மாயிருடிங்கம், இலங்காசோகம், தலைத்தக்கோலம்,

மாதமாலிங்கம், இலாமுரிதேசம் ஆகியவை சுமத்ரா, மலேயா ஆகிய நாடுகளின் சிறு பகுதிகளைக் குறிக்கலாம் என்று இவர் கூறுகிறார். சைலேந்திர வம்சத்தைச் சார்ந்த சங்கிராம விஜயோத்துங்கவர்மன் என்பவன் சோழப் பேரரசின் கீழ்ப்பணிந்தவனாக, ஸ்ரீவிஜயத்தை ஆண்டான் என்று கல்வெட்டு மூலம் அறிகிறோம். ஸ்ரீமாறவிஜயோத்துங்கவர்மன் நாகபட்டினத்தில் சூடாமணி விகாரத்தை எடுப்பித்துள்ளான். இதன் மூலம், ஜாவா, சுமத்திரா ஆகிய நாடுகளுக்கும் இந்தியாவிற்கும் இடையிலிருந்த தொடர்பு புலனாகிறது. இச்செய்தியைப் பெரிய லெய்டன் செப்பேட்டின் மூலமே அறிகிறோம்.

நம் நாடு பிறநாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டதையும், அதன்மூலம் பெருஞ்செல்வம் குவித்ததையும் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. இராஜேந்திர சோழனின் காலத்து வணிகமும் பெருகியிருந்தது. சுமத்ரா போன்ற வெகு தொலைவில் உள்ள தீவுகளில் காணப்படும் கல்வெட்டுக்களே இதற்குச் சான்றாக அமையும் (தெ. க. ஆ. அறிக்கை 92 II) கடல் வாணிகத்திற்கு எடுத்துச் செல்லப்பெறும் பொருள்கள் மீது சுலத்திற்கு இவ்வளவு 'கத்யானம்' (ஒருவகை காசு) என வரிவிதிக்கப்பட்டதை இராஷ்டிரகூடர் கல்வெட்டு ஒன்று குறிக்கிறது. (எபிகிராபிகா இண்டிகா III பக்கம் 301) இதுபோல கடல் வணிகத்திற்கு விதிக்கப்பட்ட 'கூப சுல்கம்'' என்னும் சுங்கவரியினைக் காகதீயரின் கல்வெட்டு குறிக்கிறது (தெ. க ஆ. அ. 10, 45)

இந்தியாவிற்கும், பல்வேறு நாடுகளுக்குமிடையே பழங்காலம் முதலே தொடர்பு இருந்தது என்பதை இலக்கியங்கள் மூலம் நாம் அறிகிறோம். பலவேரு ஜாதகக் கதை குறிப்பிட்டு சொல்லத்தக்கதொன்று. பருகச்சம், சொர்பாரகம், காவிரிப்பூம்பட்டினம் ஆகிய இடங்களில் சிறந்த துறைமுகங்கள் இருந்தன. சங்க இலக்கியங்களில் காவிரிபூம்பட்டினம் மிகச் சிறந்த இடம் பெறுகிறது. ஆழ்வார் பாசுரங்களில் மகாபலிபுரம், 'கடல் மல்லை' என்று குறிக்கப்படுகிறது. கிருஸ்துவின் சமகாலத்தில் மசூலிப்பட்டணம் சிறந்த துறைமுகமாக விளங்கியது. நம் மாலுமிகள் போர் மேற்கொண்டும், வணிகத்திற்காகவும் பல்வேறு நாடுகளுக்குச் சென்றதைக் காட்டுவன கல்வெட்டுக்களே ஆகும்.

கி. பி 6-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ருத்ரவர்மனின் வடமொழிக் கல்வெட்டு காம்போஜ நாட்டில் கிடைத்துள்ளது. பூர்ணவர்மனின் நான்கு கல்வெட்டுக்கள் மேற்கு ஜாவாவில் கிடைத்துள்ளன. இவை மூலம் இந்து மன்னர்களின் ஆட்சி அந்நாடுகளிலும் நிலவியிருந்தது என்பது தெளிவா-

கிறது. இதுபோலவே ஸ்ரீவிஜயத்தின் அரசு சுமத்ராவில் நிறுவப் பட்டது என்பதையும் அறிகிறோம். மூலவர்மன் என்பான் பகுஸ்வர்ண யாகம் செய்தான் என்பதை 5-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வடமொழியில் உள்ள யூபத்தூண்கல்வெட்டு காட்டுகிறது. அவன் யாகத்தின் போது வப்பிரகேஸ்வரத்தில் இருபதினாயிரம் பசுக்களைத் தானமாக அளித்தான் என்றும், பொற்குவியலையும் கொடையாக ஈந்தான் என்றும் அக்கல்வெட்டே காட்டுகிறது. இந்தியப் பண்பும், கலாச்சாரமும் அத்தீவிலும் சிறப்பாகப் பேணிப் போற்றப்பட்டது என்பதை இக்கல்வெட்டு மூலம் அறிகிறோம். திரு மஜூம்தார் அவர்கள் இதனைப் பற்றிக் கூறும் இடத்து, " மொழி, இலக்கியம், அரசியல், சமுதாயம், சமயம் ஆகிய துறைகளில் இந்தியா பிற நாடுகளை வென்றது. தனது கொள்கைகளைப் பெரிதும் பரவ விட்டது. பிற இடங்களிலிருந்து ஏற்றுக் கொள்ள வேண்டியவைகளையும் ஏற்றுக் கொண்டது. ஜாவா, அன்னாம், கம்போடியா, மலேயா ஆகிய இடங்களில் காணப்படும் கல்வெட்டுக்கள் மூலமே இதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம் " என்று குறிப்பிடுகிறார். திரு சாப்ரா அவர்களின் கட்டுரை பல்லவர் காலத்தில் சிறந்திருந்த பண்பாட்டினைத் தெளிவுறக் காட்டும்.

பௌத்தமும், பிற வைதிக சமயங்களும் இந்தியாவிலிருந்து சென்று அந்த மண்ணில் வேரூன்றின. அங்குள்ள பல அழகிய மூர்த்தங்கள் இந்தியச் சாயலுடன் திகழ்கின்றன. மிக அழகிய இராமாயணச் சிற்பங்களை பிராம்பணத்தில் காணலாம். புத்தரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் எழிற் சிற்பங்கள் போராபுதூரில் உள்ளன. ஜாவாவில் இருந்து கொண்டு செல்லப்பட்ட பிரஞ்ஞாபாரமிதாவின் உருவம் ஒன்று லெய்டன் அருங்காட்சி யகத்தில் உள்ளது. அங்குள்ள கல்வெட்டுக்களில் சிறந்த வடமொழி நடை காணப்படுகிறது. எனவே வடமொழியும் அங்கு பெரிதும் பரவியிருந்தது புலனாகிறது. அதன் எழுத்து வடிவங்களும் இங்கிருந்தே சென்றன.

சிறந்த மன்னர்களின் ஒப்புயர்வற்ற குணநலன்களையும் கல்வெட்டுக் களே நமக்கு உணர்த்துகின்றன. நாசிக் கல்வெட்டு மூலம், சாதவாகன மன்னன் கௌதமி புத்த சாதகர்ணியைப் பற்றித் தெளிவாக அறிகிறோம். தனயனை நினைத்துருகும் அவனது தாய் அவனது குணநலன்களை எடுத்துக் கூறுகிறாள். அம்மன்னனைப் பற்றிக் கூறும் உயர்ந்த குணசித்திரமாக இக் கல்வெட்டு அமைகிறது. மதியனைய திருமுகம்; அரவின் தலைவனைப் போன்ற தடக்கைகள்; கதிரவனின் முகம் கண்டலர்ந்த தாமரையொத்த எழில்; அடைக்கலமென்று வந்தோரின் கண்ணீரை மாற்றும் பெருந்தகை அவன்; பெரும் மன்னர்கள் கூட, அவன் ஆணைக்கு அடிபணிவர்; அன்னையிடம் அன்பும், பாசமும் கொண்டவன் அவன்; மக்களின் துன்பம் நீக்கி இன்பம்

பெருக்கும் பண்பாளன் ; பகைவருக்குத் துன்பம் அளிப்பவன் ஆயினும், அவனுடைய அறியாமையால் இரத்தம் சிந்துவதைக் காணப்பொறுக்காத வன் ; அந்தணர்க்கும் அசக்தர்க்கும் ஆதரவளிப்பவன் ; சமயத்தோடு இரண்டறக் கலந்தவன் ; அவனுடைய கல்வெட்டுக்கள் அவனை 'ஏகதனுர்தரன்' என்று புகழ்கின்றன. இதற்கு உருவம் கொடுப்பது போல, அவனுடைய நாணயங்களிலும் நாணேற்றப்பட்ட வில்லின் உருவம் காணப்படுகிறது.

சமுத்திரகுப்தன் சிறந்த வீரனாக, கல்வியாளனாக, இசைக் கலைஞனாக விளங்கினான் என்பதை அலகாபாத் தூண் கல்வெட்டு காட்டுகின்றது. அவனது காசுகளும், அவனுடைய இசைப் புலமையை எடுத்துரைப்பவை யாக அமைந்துள்ளன. மன்னன் ஓர் அணை மீது அமர்ந்து, வீணையினை மடியில் ஏந்தி மீட்டுவதாக அதில் பொறிக்கப்பட்டுள்ளது.

மகாக்ஷத்ரப மன்னன் ருத்ரதாமனின் கல்வெட்டு ஒன்று ஜூனாகத் என்ற இடத்தில் காணப்படுகிறது. அக்கல்வெட்டு அவனைப் பற்றி விரி வாகக் கூறுகிறது. நிறைந்தச் செல்வத்திற்கும் சிறப்பிற்கும் உரியனாய் பிறந்தவன் ; எழிலான தோற்றம் கொண்டவன் ; போர்த்திறத்தில் வல்லவன். ஆட்சிபுரிவதில் சிறந்த பயிற்சி பெற்றவன் ; பல் துறை களிலும் ஆர்வம் மிகுந்தவன்; இலக்கணம், தருக்கம், இசை பிறகலைகள் இவற்றில் சிறந்தவன் ; அவனுடைய பண்டாரத்தில் நல்வழியில் பெற்ற தங்கமும், வெள்ளியும், மணிகளும், இரத்தினங்களும் நிறைந்து வழிந்தன. இவையனைத்தும், அவனுடைய ஓங்கு புகழுக்குக் காரணம் ஆயின. பல் வேறு சுயம்வரங்களில் பன்னாட்டு அரசிளங்குமரியர் மாலையணிந்து மணந்து கொள்ள விழைந்தனர் என அவனுடைய கல்வெட்டுக்கள், அவனுடைய எழிலையும், குரலின் இனிமையையும் அன்பான இயல்பையும் பெரிதும் புகழ்ந்துரைக்கின்றன.

பெருமன்னன் அசோகனின் குணநலன்களை அவனது கல்வெட்டுகள் எடுத்துரைக்கின்றன. அவை மிகவும் எளிமையாக அமைந்தவை. அவனைப் பற்றித் தெளிவாகக் காட்டும் கண்ணாடியாக அவை மிளிர்கின்றன. மிகப் பெரிய மன்னனாகிய அசோகன் தன் மக்கள் எல்லோரிடத்தும், தன் குழந்தை களிடம் போல் பேசுவதைக் காண்கிறோம். மீண்டும், மீண்டும் இதையே கூறுகின்றான். அதைத் தவிர வேறு எண்ணமே அவன் மனதில் இல்லையோ ! அவனுடைய அருள் மனப்பாங்கும், தெளிந்த சிந்தனையும், அமைந்த எண்ணமும், எளிய பண்பும், செறிந்த திறனும் கல்வெட்டுக்களில் வெளிப் படுகின்றன. கலிங்கப் போரில் சிந்திய இரத்தமும் படுகொலையும் அவன்

மனத்தில் எந்த அளவு வருத்தத்தைத் தோற்றுவித்தன என்பதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. தன் சொந்த இன்பங்களைக் கூட மறந்துவிட்டவன் அசோகன். தன் மக்களின் நலனே தனது குறிக்கோளாகக் கொண்டவன். உண்மையில் அவன் ஆட்சியில் மக்கள் 'பிரஜை'களாக விளங்கினர். அவன் 'பிரகிருதிரஞ்சன'னாக விளங்கினான். மக்கள் அவனை வந்து காண்பதற்கெனத் தனி நேரம் கிடையாது. அவன் உணவு கொள்ளும் நேரமானாலும் சரி; அந்தப்புரத்தில் இருந்தாலும் சரி; நந்தவனத்தில் இருந்தாலும் சரி; பல்லக்கில் இருந்தாலும் சரி. எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் நாட்டுப் பிரச்சினை பற்றி அவனிடம் மக்கள் சென்று பேசலாம். இவை அனைத்தையும் அவனது கல்வெட்டுக்களே நமக்குக் காட்டுகின்றன. சோழப் பேரரசன் இராஜேந்திரனும் உணவு வேளையில் கூட அரசுப் பணிகளைக் கவனித்து ஆணை பிறப்பித்துள்ளான் என்பது நினைவு கூரத் தக்கது. சமையலறையில் உணவு பற்றி அசோகன் வெளிப்படையாக குறித்துள்ள கட்டுப்பாடு அவனது குழந்தை போன்ற எளிய உள்ளத்தை வெளிப்படுத்துகிறது. இதோ அக்கல்வெட்டு. "அரண்மனைச் சமையலறையில் உணவுக்காக விலங்குகளும் பறவைகளும் முன்னர் ஏராளமாகக் கொல்லப்பட்டன. ஆனால் தற்போது ஒரு மான் மட்டுமே வெட்டப்படுகிறது; மயில்கள் கூட இரண்டாகக் குறைந்து விட்டன. இதுகூட இல்லாது ஒழித்து விட வேண்டும் என்பதே மன்னனின் விருப்பம்" அரண்மனைகளில், உண்பதற்கும் குடிப்பதற்கும் எவ்வளவு இருக்கும் என்பதை இராமாயண சுந்தர காண்டத்தைப் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம். இராவணனின் அரண்மனை அட்டிற்சாலை பற்றிய விரிவான விளக்கம் அங்கு உள்ளது. அவ்வுணவை ருசிப்பவர்கள் அந்த விவரத்தை படித்தால் கூட போதும். நாக்கில் நீர் ஊறும். அப்படி இருக்க மிகப் பெரிய மன்னன் ஒருவன் அவ்வளவு ஆடம்பரங்களையும் விடுத்து, எளிய வாழ்க்கை மேற்கொண்டான் என அறியும் போது அவனது உயர்வையும், பண்பையும் புரிந்து கொள்ளலாம். நாட்டின் நடப்பைச் சீராக்க அப்பெரு மன்னன் மேற்கொண்ட பல புதிய திட்டங்களை அவனது கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

அறத்தைப் போதிப்பதற்காக, இதற்கு முன்னிராத தர்மமகாமாத்திரர்கள் என்னும் அதிகாரிகளை அசோகன் நியமித்தான். அறத்திற்காக அதிகாரிகள் (மகாமாத்திரர்கள்) இதற்கு முன் எப்பொழுதுமே இருந்ததில்லை. ஆனால் இப்பொழுது அசோகன் அவர்களை நியமித்தான். ஏனென்றால் ஒழுக்கம் பின்பற்றப்படவேண்டும் என்பது அவனது விருப்பமாகும். குழந்தை பிறப்பு, மணவினை ஆகிய காலங்களில் செய்யப் பெறும் பல மங்கலச் சடங்குகளை அம்மன்னன் அறிந்திருந்தான். ஆயினும் அவை பெறும்

பாலும் பயனற்றவை என்றும், அடிமைகளிடம் அன்போடிருத்தல். பெரியோரிடத்தில் மரியாதை, விலங்குகளிடம் பரிவு, சிரமணர்கள், பிராம்மணர்கள் ஆகியோருக்கு வழங்குதல் ஆகியவையே நற்பயன் பயக்கும் எனக் கருதினான். மக்கள் தங்களது நல்ல செயல்களையே எப்பொழுதும் எடுத்துரைக்கின்றனர். தங்களது தவறுகளைக் கணக்கில் கொள்வதில்லை என அசோகன் வருந்தினான். ஆதலின் பாவங்களைத் தவிர்த்தல் வேண்டும். புண்ணியங்களைச் சேமித்தல் வேண்டும் என அவன் மிகவும் சிறப்பாக வேண்டிக் கொண்டான். முன்னர் அரசர்கள் இன்பம் துய்ப்பதற்காக யாத்திரை மேற்கொண்டனர். ஆனால் இப்பொழுது அசோகன் அறத்திற்காக யாத்திரைகளை மேற்கொண்டான். அவன் மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் மருத்துவமனைகளையும் தங்கும் விடுதிகளையும் அமைத்தான். சாலையெங்கும் குறிப்பிட்ட தூரங்களில் கிணறுகளைப் படிகளோடு அமைத்தான். வழிப்போக்கர்களுக்கு நிழல் அளிக்க ஆங்காங்கே ஆலமரங்களையும் மாமரங்களையும் நட்டான். இவற்றிலிருந்து அவனுக்கு மக்கள் நலத்திலும் விலங்குகள் நலத்திலும் இருந்த கனிவு தெளிவாகும். அவனது சமயத்தொண்டும், அறத்தைப் போதிக்க அவன் எடுத்துக் கொண்ட முயற்சிகளும், சமூகப் பணிகளும் இந்திய நாட்டிற்குள் மட்டும் அன்றி இதன் எல்லைகளுக்கு அப்பாலும் நிலவியதை அவனது கல்வெட்டுக்கள் கூறுகின்றன, எடுத்துக்காட்டாக இரண்டாவது தாலமியின் அரசு, எகிப்து நாட்டில் பிலடெல்பஸ், அண்டோகனஸ், மாஸிடோனிய நாட்டு கொனடஸ், சிரியின் மகஸ், இபிரீஸ் அல்லது கொரிந்தியின், அலெக்ஸாண்டர் ஆகியோர் நாட்டிலும் இவனது பணிகள் நிலவின. (கல்வெட்டில் துலமயன், அந்தேகிதஸ், மகஸ், அளிகசுந்தரன்) வெறிநிறைந்த தத்துவவாதி என்று பிறர் அவனைத் தவறாக எடைபோடும் அளவுக்குக் கூட அசோகனது பணிகள் இருந்தன எனலாம். மக்களுடைய துன்பங்களிலும் இன்பங்களிலும் தான் நேர்முகமாகப் பங்கு கொண்டதாக பேரரசன் கௌதமிபுத்ரசாதகர்ணி தன் கல்வெட்டில் குறித்துள்ளான். கொடை, பெருமிதம், ஆதரவு, புன்சிரிப்பு, இனிய பேச்சுக்கள் ஆகியவற்றால் தனது மக்களை ஸ்கந்தகுப்தன் மகிழ்வித்தான் என அவனது ஜூனகத் கல்வெட்டு கூறுகிறது. அசோகன் தன் சொந்த குழந்தைகளின் நலனிலும் இன்பத்திலும் எவ்வாறு விருப்பமுடையவனாயிருந்தானோ அதே போல தன் குடி மக்கள் இவ்வுலகிலும் மேல் உலகிலும் நலனோடும் இன்பத்தோடும் இருக்க வேண்டும் என தந்தையாய் திகழ்ந்தான் என்று அவனது கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது. தன் நாட்டின் எல்லைக்கு அப்பால் வாழும் மக்களையும் தனது குழந்தைகளாகப் பாவித்தான் என்றும் அவர்களது நலன் வளர்வதில் நாட்டமுடையவனாயிருந்தான் என்றும் குறிப்பு உண்டு. இதற்காகத் தான் அங்கும் தனது சாஸனங்களைப் பொறித்து வைத்தான். ஆதலின் எல்லைவாசிகள் எல்லாம் அறச் செயல்களை ஒழுகவும், நம்பிக்கையை ஊக்கு

விக்சவும் தனது மகாமாத்திரர்கள் முயற்சிக்க வேண்டும் என்று ஆணை யிட்டான்.

சுங்கப் பேரரசன் புஷ்யமித்ரன், சாதவாகனப் பேரரசன் சாதகர்ணி இவர்களது சமகாலத்தவன் கலிங்கத்தின் மாபெரும் மன்னனாகிய காரவேலன். இம்மன்னனைப் பற்றிய முழு வரலாறும் அவனது ஹாதிகும்பா (யானைக் குகை) கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. ஆண்டு வாரியாக அவனது வெற்றிகளும் செயற்கரிய செயல்களும் பட்டியல் போட்டு இக்கல் வெட்டில் குறிக்கப்பட்டுள்ளன. அவனது ஆற்றலும், கலைகள், விஞ்ஞானம் ஆகிய பல்வேறு துறைகளிலும் அவன் பெற்றிருந்த திறமையும் அக்கல்வெட் டில் குறிக்கப்பட்டுள்ளன. அவன் பெரும் பொருட்செலவில் தன் கோட்டை அரணையும், வாயில்களையும் புதுப்பித்ததையும், திவிரா போன்ற பல குளங்களுக்குக் கரைகள் கட்டியதையும், மகதம் அங்கம் ஆகிய நாடுகளை வெற்றிகண்டு கொண்டு வந்த செல்வத்தால் 'மகாவிஜயபிராஸாதம்' என் னும் பெரும் 'அரண்மனை' கட்டியதையும் அக்கல்வெட்டிலிருந்து அறிகிறோம். சிற்பங்களாலும் ஓவியங்களாலும் எழில் கொஞ்சும் மாடங்களை அவன் அமைத்தான். அவன் குடி மக்களுக்கு அளித்த வாய்ப்புக்களும் வசதிகளும் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளன. தன் மக்கள் இயல், இசை, நாடகங் களால் மகிழும் படி விழாக்களையும் சமாஜக் கூட்டங்களையும் ஏற்படுத்தினான். ஏராளமான தங்கும் சாலைகள் (சத்திரங்கள்) அமைத்தான். பல வரிகளை நீக்கினான். ஊராட்சி மன்றங்களுக்கும் நகராட்சி மன்றங்களுக்கும் ஏராள மான சலுகைகளை அளித்தான். தன் படைவலியைப் புலப்படுத்த ராஜ சூயயாகம் செய்தான். அருஹனின் அறத்தைப் பின்பற்றும் முனிவர்களுக் கும், துறவிகளுக்கும் இவன் செய்த வழிபாடும், குமரிக் குன்றில் அவர்களுக்கு இவன் செய்தளித்த வசதிகளும் இவன் சமண சமயத்தின் பால் கொண்டி ருந்த மிகுந்தபற்றை வெளிப்படுத்துகின்றன. இருப்பினும் பிராம்மணர் இடத்துக் கொண்டிருந்த அன்பிலிருந்து இவன் சமநோக்குடைய மன்னன் என்பது வெளிப்படை. அனைத்துக் கல்யாணங்களையும் கண்டு, கேட்டு, அனுபவித்த மாமன்னன் இவன். சமயங்களின் அரசன்; துறவிகளின் அரசன்; செல்வசெழுமையின் மன்னன்; அமைதியின் அன்பன் இவன்.

கிருஷ்ணதேவராயன் காலத்தில் பலவெளி நாட்டுப் பயணிகள் வந்த னர். அவனது அரிய அரண்மனை பற்றியும், மயிர்க்கூச்செரியும் அரசவை பற்றியும், ஒப்பருங்கோயில்களைப் பற்றியும் அப்பயணிகள் குறிப்புகள் எழுதி வைத்துள்ளனர். ஆனால் மாப்பெரும் மன்னன் இராஜராஜசோழனைப் பற்றியோ. அவனது அருமை மைந்தன் இராஜேந்திரனைப் பற்றியோ,

அது போன்று எழுதி வைத்த பயணிகள் யாரும் இல்லை. அச்சோழப் பெரு மன்னர்களைப் பற்றி நாம் அறிவதெல்லாம் அவர்களது கல்வெட்டுக்களில் இருந்துதான். ஆயினும் அவர்களது தனிச் சிறப்பை அறிந்து கொள்ள அவை ஏராளமான செய்திகளைத் தருகின்றன. கண்டராதித்த சோழரின் தேவி செம்பியன் மாதேவியைப் போன்ற பக்தியிலே திளைத்த ஓர் பெரும் பேரரசியை வரலாறு கண்டதே இல்லை. கரத்திலே சிறு குழந்தையைத் தாங்கிய இளம் வயதிலேயே கணவனை அவள் இழந்தாள். பெரும் பொருள்களைத் தானமாக அளித்து இத்தேவி வணங்கிய கோயில்கள் சோழ மண்டலத்தில் ஏராளம். இவளது ஒவ்வொரு விருப்பத்தையும் மாமன்னன் இராஜராஜன் பூர்த்தி செய்வித்தான். தனது குடி மக்கள் தன்னையே முடி சூட்டிக் கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொண்ட போதிலும் இராஜராஜன் தன் சிறியதாதை உத்தமசோழரே அரசாள வேண்டும். அதன் பின்னரே தான் அதை அனுபவிப்பேன் என்று கூறியதாகத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன. தஞ்சைப் பெருங் கோயிலில் உள்ள நீண்ட கல்வெட்டுகள், இராஜராஜனின் ஆற்றல், அவனது வெற்றிச் சிறப்புகள், அரசியலமைப்பு, எண்ணற்கரிய செல்வம், ஈடு இணையற்ற வள்ளல்தன்மை சுருக்கமாகக் கூறப் போனால் மாபெரும் சோழப் பேரரசைத் தோற்றுவித்த அவனது ஒப்பரும் சிறப்புக்களை எடுத்துரைக்கின்றன. அவனது மகன் இராஜேந்திரன் இதை இன்னும் தன்புயவலியால் விரிவு படுத்தினான். இராஜேந்திரசோழன் பெற்ற திகைப்பூட்டும் வெற்றிகள் எல்லாம் ஒன்று விடாமல் அவனது மெய்க்கீர்த்தியிலே இடம் பெற்றுள்ளன. அவற்றிற்கு முடிபுனைந்தது போல் கங்கை நீரைக் கொண்டு வந்து ஜல ஸ்தம்பமாக புதியதொரு வெற்றித்தூணை, அமைத்துப் புகழ் கொண்டான். கங்கைக்கரைவரை வெற்றி கண்ட அவன் புனிதமான கங்கை நீரைத்தான் அங்கிருந்த மாற்றரசர்களிடம் இருந்து திறையாகக் கொண்டான். அதைக் கொண்டு வந்து தன் வெற்றியின் சின்னமாக அமைத்த கங்கைகொண்டசோழபுரத்தில், தோற்றுவித்த பேரேரியில் ஊற்றிப் புனிதமாக்கினான். இவ்வாறு செய்ததிலே பகீரதனை ஒத்தான். ராஜேந்திரன் அடைந்த வெற்றிகளும், அதன் முடிவுகளும் கங்கைகொண்ட சோழபுரத்தில் உள்ள ஒரு காஹடவாலர் கல்வெட்டால் உறுதி செய்யப்படுகின்றன. அக்கல்வெட்டின் தொடக்கத்தில் சோழர் புகழ் பாடப் பெற்றிருப்பதிலிருந்து காஹடவாலர்கள் சோழர்களுக்கு அடங்கியவர்களாய் இருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது. தாராசுரம் கோயிலிலிருந்த (இப்பொழுது தஞ்சைக் கலைக் கூடத்தில் உள்ளது). கல்யாணபுரத்திலிருந்து கொண்டு வரப்பட்ட துவாரபாலர் சிலையும் இக்கோயிலின் அருகே கிடக்கும் கலிங்கர் பாலர் சிலைகளும் சோழப் படை கண்ட பெரும்

வெற்றிகளுக்கு எடுத்துக் காட்டுக்களாகும். ஆயினும் அவர்களது வெற்றிகளைத் தெளிவாக எடுத்துரைப்பவை அவர்களது கல்வெட்டுக்களே.

அரசனது தனிச் சிறப்புக்களைத் தான் கல்வெட்டுக்கள் எடுத்துரைக்கின்றன எனக் கருதிவிடக் கூடாது. சமுதாயச் செய்திகளையும் அவை ஆங்காங்கே எடுத்துரைக்கின்றன. அந்தணன் போர் வீரனாக மாறியது போன்ற செய்திகள் உண்டு. கதம்ப மன்னன் காகுஸ்தவர்மனின் தாலகுண்டாக்கல்வெட்டு இது போன்ற ஒரு செய்தியை மிக அழகாக விவரிக்கிறது. கதம்பகுலத்தை நிறுவிய மயூரசர்மன், காஞ்சிபுரத்திற்கு வேதம் கற்க வந்தான். பல்லவ மன்னனின் குதிரை வீரன் ஒருவன் அவனை இழிவாகப் பேசினன். தருப்பைப்புல்லையும் வேள்வியிலே நெய்யை வார்க்கும் மரக்கரண்டிகளையுமே ஏற்கும் அவனது கரங்கள் தீச்சுடர் போன்ற வாளை ஏந்தின, உலகை வெற்றி காண. வேள்வி வேட்டு எப்பொழுதும் புனித நீரிலே மூழ்கி நனைந்த கேசத்தை உடையவர்களும், வேதவேதாந்த தத்துவங்களை நன்கு கற்றுத் தேர்ந்தவர்களும், வேள்வித் தீயை ஓம்பியவர்களும், சோமபானம் செய்தவர்களும் மலர் சொரியும் கதம்ப மரத்தைத் தங்கள் வீட்டில் பேணியவர்களுமான அவனது குலத்துப் பின்னோர்கள் வீரம் செறிந்த க்ஷத்திரியர்களாக மாறினர். அவர்களது குலத்துதித்த பெண்கள், குப்தப் பேரரசர்களை மணந்தனர்.

மண்டகப்பட்டுக் கல்வெட்டு மற்றுமொரு புதுமையானது. இது காறும் இல்லாத ஒன்றைப் புதியதாகக் கண்டு பிடித்த அரசன் பல்லவ மகேந்திரனின் மகிழ்ச்சியை எடுத்துரைப்பதாக அக்கல்வெட்டு உள்ளது. அதுவரையிலும் கட்டிடங்கள் செங்கல், சுதை, உலோகம், மரம் ஆகியவற்றைக் கொண்டு கட்டப்பட்டன. ஆனல் புதுமையில் மோகம் கொண்ட மன்னன், விசித்ரசித்தன் எனத் தன்னைக் கூறிக் கொள்பவன், நிலையான பாறைகளில், குடைவரைகளை அமைத்து எழிலார்ந்த சிற்பங்களை அமைக்கத் தலைப்படுகிறான். தமிழ்நாட்டில் கி. பி. 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல்லவர் கோயில்களின் தோற்றத்திற்குக் காரணமாக அமைந்தது இது.

வாழ்க்கை மிகவும் குறுகியது, நிலையற்றது. செல்வம் பறந்துவிடும் தன்மையுடையது. இன்றைய அரசன் நாளை ஆண்டியாகிறான். வாழ்க்கை என்றும் தெளிவாகவே இருப்பதில்லை. உயர்ந்த மனிதர்கள் கூட துன்பத்துக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். ஸ்கந்தகுப்தனின் பிதாரி தூண் கல்வெட்டில் சிறந்த செய்தி ஒன்று குறிக்கப்பட்டுள்ளது. வீழ்ச்சியடைந்த தனது குடியின் கீர்த்தியை உயர்த்துவதை எண்ணியே அரசன் ஓர்

இரவு முழுவதும் படுத்திருந்தான். பஞ்சணைப் படுக்கையில் அல்ல; கட்டாந் தரையிலே என அவன் கல்வெட்டு கூறுவது குறிப்பிடத்தக்கது.

சில கல்வெட்டுக்கள் நாடகம் போன்று எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். பிதாரித் தூண் கல்வெட்டையே சான்றாக எடுத்துக் கொள்ளலாம். குமாரகுப்தன் "வெற்றி பெற்று விட்டேன்" என்று முழக்கமிட்டவாறு தன் தாயிடம் செல்கிறான். அவனுடைய கண்களின் ஆனந்தக் கண்ணீர் சொரிகிறது. 'எதிரிகளை அழித்துவிட்ட கண்ணன் தன் தாயிடம் சென்று கூறியது போல' என்று இதனைக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. வெற்றிமகளை மணந்து கொண்ட ஈசானவர்மன், நல்ல வாய்ப்புகளைத் தான் பெற்றிருந்த போதிலும், பிரயாகைக்குச் சென்று தன்னுயிரை மாய்த்துக் கொண்டான். காய்ந்தசாணத்தினால் வளர்க்கப்பட்டு மலர்களால் அலங்கரிக்கப்பட்ட தீயினுள், 'குளிப்பதற்காக நீரில் மூழ்குவது போல , மூழ்கினான்' என்று கல்வெட்டு கூறுகிறது. பிரயாகையில் தம் வாழ்க்கையை முடித்துக் கொண்டால் சொர்க்கத்திற்குச் செல்வது உறுதி என்ற நம்பிக்கை இருந்தது. காளிதாசன் கூட இதனை, 'தனுஸ்யாஜாம் நாஸ்தி சரீரபந்தா' என்று கூறுகின்றான். இதுபோலவே சாளுக்கிய மன்னன் இரண்டாம் ஆகவமல்ல சோமேஸ்வரன் துங்கபத்திரை கடலோடு கலக்குமிடத்தில் தன்னுயிரை மாய்த்துக் கொண்டான் என்று கல்வெட்டுக்கள் மூலம் அறிகிறோம். இவன் 6-ஆம் விக்கிரமாதித்தனின் தந்தை. இவனோடு இவன் தேவியரும் உயிர் துறந்தனர். இதனைத் தடுக்க இவனது நாட்டு மக்கள் பலர் சென்றிருந்தும் கூட உயிர் துறந்தான் என்று தெரிவிக்கிறது அக்கல்வெட்டு.

கற்பனையிலும் எண்ண முடியாத அளவு செல்வமும், கொடைகளும், அறச்செயல்களும் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளன. அநாதபிண்டன் என்ற மன்னன் புதிதாக மடம் ஒன்றினைக் கட்டுவித்தான். ஜடவனம் என்ற தோட்டம் முழுவதிலும் பொற் காசுகளைப் பரப்பினான். இவ்விரண்டையும் பரிசாக அளித்தான் என்பதைச் சதகர்ணியின் நாநாகாட் கல்வெட்டு குறிக்கின்றது. நாசிக்கில் உள்ள உசவதாதனின் கல்வெட்டு மனிதனின் சிறந்த கொடைப் பண்பினைக் காட்டவல்லது. செல்வத்தைச் சேர்க்கும் மனிதப் பண்பு ஒரு புறம்; பகிர்ந்தளித்து மகிழும் கொடைப் பண்பு மற்றொரு புறம். நந்தர்கள் பெருஞ்செல்வம் படைத்தவர்களாக விளங்கியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பெரும் கொடைகளை அளித்தார்கள் என்பதற்கு எங்கும் குறிப்புக் காணப்படவில்லை. சதகர்ணி இருமுறை அசுவமேதயாகம் செய்தான். கவாமயனம், அஞ்ஞோதேயம், ராஜசூயம், அப்தோர்யாமம் போன்ற வேறுபல வேள்விகளையும் புரிந்துள்ளான். அவ்வேள்

விகளின் போது, காணங்களையும், வெள்ளிகளையும், பசுக்களையும், யானைகளையும், குதிரைகளையும், ரதங்களையும், ஆடைகளையும் தட்சிணையாக அளித்தான். இதே காலத்தைச் சார்ந்த கலிங்க மன்னன் காரவேலனும் சிறந்த கொடையுள்ளம் கொண்டவன் ஆவன். பொன்னாலான கற்பகத் தருவொன்றை அவன் தானமாகக் கொடுத்தான். இவையனைத்தும் வேள்வியின் போது கொடுக்கப்பட்ட கொடைகள். உசவதாதரின் கொடையினைக் குறிப்பிடும் நீண்ட பட்டியல் மிகவும் சிறப்பான ஒன்று. 300 ஆயிரம் பசுக்களை அளித்தான்; பார்நாச நதிக்கரையில் மிகுந்த பொன்னைக் கொடுத்தான். தேவதானமாகவும், பிரம்மதேயமாகவும், 16 ஊர்களைத் தானமாகக் கொடுத்தான். நூறாயிரம் அந்தணர்களை ஆதரித்தான்; புண்ணியத்தலமான பிரபாசத்தில் பிராம்மணர்கள் எண்மருக்கு மண முடித்து வைத்தான். பாருகச்சம், தசபுரம், கோவர்த்தனம், சொர்பாரகம் ஆகிய இடங்களில் தவமுனிவர்களுக்கு உறைவிடங்களையும் சாலைகளையும் அமைத்துக் கொடுத்தான். கிணறுகளையும் குளங்களையும் தோண்டுவித்தான். ஈபா, பாரதா, தமண, தாபி, கரபெண, தஹநுகா ஆகிய நதிகளைக் கடக்க இலவசமாக படகு வசதிகளையும் செய்து கொடுத்தான்.

சில இடங்களில் பெரும் மன்னர்களின் உருவச் சிலைகளையும் நாம் காணலாம். சில தம் தேவியருடன் இருப்பதாகவும் காணப்படுகின்றன. பல்லவமன்னர்களின் உருவச் சிலைகள் பெயர் பெற்றவை. சித்தன்ன வாசலில் உள்ள ஓவியத்தில் பாண்டியனின் உருவமும், அருகில் தேவியின் முகமும் மிக அழகாக வரையப்பட்டுள்ளது. இவை மன்னனும், அரசியுமே என்பதை இங்குள்ள கல்வெட்டு உறுதிப்படுத்துகின்றது. இது வரை மன்னர்களைப் பற்றிக் கண்டோம். தேவியரைப் பற்றிய குறிப்புக்களும் உள்ளன. ஓரேயொரு எடுத்துக் காட்டு போதுமானது. பல்லவ மன்னன் இராஜசிம்மனின் மனைவி இரங்கபதாகை பெண்களில் 'பதாகம்' (கொடி) போன்றவள் என்று கைலாசநாதர் கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டு குறிப்பிடுகின்றது. மேலும் அக்கல்வெட்டு, அவளது அன்பையும், அழகையும், அறிவையும் பற்றிச் சிறப்பாகப் பின் வருமாறு குறிப்பிடுகிறது.

> ஶ்ருங்கார ஸாரஸ்ரவிஸ்ரமவதீ ஸஹஸ்ர
>
> ஸத்வப்ரபஞ்ச விர[ஸம்ஸ்க்ருத கொ]ஶமுஸ்தி |
>
> ஶ்ராவண்ய ஸா(ஷ்)வ விஶாலஸ்ம்ருஜாலஸம்ஶ்ரா
>
> நிஷ்ஶாண விஷ்ரிவ யா ப்ருயஸஸ யாதா: ||

பண்டைய நாட்டியம், இசை போன்ற கலைகளைப் புரிந்து கொள்

வதற்கும் கல்வெட்டுக்கள் பெருந்துணை புரிகின்றன. பல்லவர்களின் இசைக் கல்வெட்டுக்களும், சிதம்பரத்தில் கோபுரத்தில் உள்ள நாட்டிய கரணங் களின் கீழே எழுதப்பட்டுள்ள பரதமுனிவரின் சூத்திரங்களும் சிறப்பாகச் சொல்லத்தக்கவை. குடுமியாமலையிலும், திருமெய்யத்திலும், உள்ள இசைக் கல்வெட்டுக்கள் பல்லவர் காலத்து வழக்கில் இருந்த இசையினைப் பற்றித் தெளிவாகக் காட்டுகின்றன. இங்குள்ள கல்வெட்டில் ' பரிவாதினி ' என்ற சொல் காணப்படுகிறது. இதிலிருந்து பழைய காலத்தில் இருந்த வீணை, ஏழாம் நூற்றுண்டிலும் வழக்கில் இருந்தது என்று தெரிகிறது. விஷ்ணு வின் தேவியாகிய சரஸ்வதி கருடனின் மீதமர்ந்து வீணை மீட்டுவது போன்று அமைந்த ஒரு சிற்பம் டாக்கா அருங்காட்சியகத்தில் உள்ளது. இச்சிற்பம் இச்செய்தியினை உறுதிசெய்கின்றது. சிதம்பரத்தில் பரதனின் நாட்டிய ஸ்தானங்களும், கரணங்களும் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளன. அதன் கீழே, அவருடைய செய்யுட்கள் எழுதப்பட்டுள்ளன. அபிநவகுப்தரின் உரையினை விட மிகவும் தெளிவாகவும், விரிவாகவும் இவை உள்ளன என்று கூறலாம். சிற்பமாக அமைக்கப்பட்டுள்ள இந்த ஸ்தானங்களின் கீழே, உரிய விளக்கத்தினைக் கல்வெட்டுக்களாக நாம் காணலாம். நடனக் கலையின் பொற்காலமாகச் சோழர் காலம் விளங்கியது: சோழப் பெருமன்னர்கள் இக்கலையில் பெரிதும் ஈடுபாடு கொண்டு ஆதரித்தார்கள். கல்வெட்டுக்கள் மூலம் இது ஐயத்திற்கிடமின்றி உறுதியாகின்றது.

சிற்பங்களோடு சேர்ந்து கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. அச்சிற்பம் தோற்றுவிக்கப்பட்டதை விளக்குவதாக அவை இருக்கலாம். அல்லது, கொடையைப்பற்றியும், கொடையளித்தவரைப் பற்றியும் தெரி விப்பதாக இருக்கலாம். அவை அச்சிற்பத்தின் காலத்தினை அறிய பேரு தவியாக இருக்கும். அக்கொடை நடைபெறக் காரணம் கூறுவதாகவோ, அச்சிற்பம் அங்கு செய்யப் பெறுவதன் காரணம் கூறுவதாகவோ அவை அமையும்.

பார்குத்தில் சிற்பங்களின் கீழ் எழுதப்பட்டுள்ள கல்வெட்டுக்கள், அந்த சிறப்பான கலைச் சின்னங்களைப் பற்றி தெளிவாகத் தெரிந்து கொள்ள உதவுகின்றன. இக்கல்வெட்டுக்கள் இல்லாவிட்டால் இவை எதனைக் குறிக்கின்றன என்றே நம்மால் அறிய இயலாது. அமராவதியில் உள்ள பழைய சிற்பத்தில், ஒரே வரியில் அமைந்த கல்வெட்டொன்று உள்ளது. இதன் மூலமாகவே வடஇந்தியாவை போலவே தென்னகத்திலும் கிருஷ்ணை யாற்றங்கரையில் யக்ஷ வழிபாடு இருந்தது என்று அறிந்து கொள்கிறோம். உருவ அமைதியை வைத்துக் கணிக்கப்படும் காலம், அதனடியில் எழுதப் பட்டிருக்கும் காலத்தினைக் கொண்டு உறுதிப்படுகின்றது. கல்வெட்டுக்களில்

காலம் குறிக்கப்படாவிட்டாலும் கூட, கல்வெட்டு உள்ள எழுத்தமைதியினைக் கொண்டு, காலத்தினைக் கண்டுபிடிக்க முடிகிறது. புத்த ஜாதகக் கதைகள் புத்தஅவதானக் கதைகளைக் குறிப்பதாக அமையும் சிற்பங்களில் கூட, அதனைச்சரியாக அறிந்து கொள்வதற்குக் கல்வெட்டுக்களே உதவுகின்றன. சிலநேரங்களில், சித்திரிக்கப்பட்டுள்ள காட்சியினைக் குறிக்கும் சரியான இலக்கியம் கிடைக்காமல் போய்விடுவதுண்டு. அத்தகைய இடங்களில், அடியில் உள்ள கல்வெட்டுக் குறிப்பு மிகமிகப் பயனுடையதாகும். காஞ்சிபுரம் வைகுந்தப் பெருமாள் கோயிலில் உள்ள சிற்பங்கள், பல்லவர் வம்சத்தினைப் பற்றிய விரிவான செய்திகளைத் தருகின்றன. இங்கும் சிற்சில இடங்களில் காணப்படும் கல்வெட்டுக் குறிப்புக்களே, பல்லவர்களின் வரலாற்றினை சரியாக அறிந்து கொண்டு மேலும் ஆராய்ச்சி செய்ய உதவுகின்றன.

கல்வெட்டுக்களின் துணையின்றி, ஒரு சிற்பம். யாரால், எப்போது எதற்காகச் செய்யப்பட்டது என்று அறிந்துகொள்ள முடியாது. பெரும்பாலும் கொடையளித்தவரின் பெயர் காணப்படும். சமயத் தொடர்புள்ளதாயின், அது குறிக்கப்பட்டிருக்கும். சில இடங்களில் சிற்பியின் பெயரும் காணப்படும். முழு கலைப் பொருளும் மட்டுமின்றி, அதிலுள்ள சிறு பகுதியை அளித்தவரின் பெயர் கூடச் சில இடங்களில் குறிக்கப்படும். இத்தகைய கொடைகளைப் பழைய ஸ்தூபங்களில் உள்ள கல்வெட்டுகளில் காணலாம். ஓரிரு குறுக்குச் சட்டங்களையோ கூரையிலுள்ள விட்டங்களையோ அல்லது குறிப்பிட்ட பலகைகளையோ, தர்ம சக்கரத்தையோ அல்லது பூரண கடத்தையோ சிலர் அளித்திருப்பர். இதனை வணிகரோ அல்லது பாடகரோ. வணிகர் தலைவரோ, பெண் துறவியோ அல்லது முனிவரோ அல்லது பெரும் சுற்றம் கொண்ட குடும்பத்தலைவரோ, யாராயினும் கொடுத்திருக்கலாம், அவர்களின் பெயரும் பொறித்து வைக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட பகுதியினை ஒரு தொழிலாளர் குழு செய்து முடிப்பது உண்டு. சான்றாக, விதிசாவிலிருந்து வந்த தந்த வேலைப்பாட்டில் மிகவும் சிறந்திருந்த ஒரு குழு சாஞ்சியிலுள்ள தோரணவாயில் ஒன்றினைச் செய்தது என்று அங்குள்ள ஒரு கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இதிலிருந்து மற்றொரு செய்தியும் நமக்குத் தெரிகின்றது. பல்வேறு இடங்களில் இருந்தும் புனிதப் பயணிகள் வந்து உள்ளனர். சான்றாக அமராவதிக்கு, பாடலிபுத்திரம், இராஜகிரி, சிம்மகிரி ஆகிய இடங்களில் இருந்து புண்ணிய யாத்திரை வந்தனர். நாகார்ஜுன கொண்டாவில் உள்ள பௌத்த பள்ளிகளுக்கும் ஸ்தூபங்களுக்கும் அருகில் உள்ள சிற்பங்களின் மூலமும், அங்குள்ள கல்வெட்டுக்கள் மூலமும், ஈழத்தவர் வந்து சென்றனர் என்று தெரிகிறது.

பல்லவ பரமேஸ்வரவர்மனின் கூரம் செப்பேடு போர் நடந்த முறை

யினை-போர்க்காட்சியை மிகவும் விரிவாகக் காட்டுகின்றது. தோற்ற மன்னனின் நகரத்திலும், அவனுடைய தோல்வியைக் குறிக்கின்ற கல்வெட்டு காணப்படுகின்றது. பல்லவர் தலைநகரான காஞ்சிபுரத்தில் கைலாசநாதர் கோயிலில் மேலைச் சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தனின் வெற்றியைக் குறிக்கும் கல்வெட்டைக் காணலாம். அதுபோலவே மேலைச் சாளுக்கியரின் தலைநகரமான வாதாபியில் நரசிம்மவர்மனின் வெற்றியினைக் காட்டும் கல்வெட்டும் காணப்படுகிறது. எனவே இருவரும் தம்தம் வெற்றிகளை வெற்றி கொண்ட நாட்டில் பொறித்து வைத்தனர் என்று தெரிகிறது. இத்தகைய நேரங்களில் கல்வெட்டினை எழுதுகின்ற சிற்பி, தன்னாட்டில் வழக்கில் உள்ள மொழியையும் எழுத்தையுமே பயன்படுத்துகிறான். அப்போது, அக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள இடத்தில் வழங்கும் மொழியையோ எழுத்தையோ ஒத்திராமல் தனித்தன்மையுடன் விளங்குகின்றது. கலிங்கத்திலும், சாளுக்கிய நாட்டிலும் உள்ள இராஜேந்திரனின் மெய்க்கீர்த்திகளும், வாதாபியில் உள்ள நரசிம்மவர்மன் கல்வெட்டும் இதற்குச் சான்றுகளாக அமைந்துள்ளன. இதுபோலவே, தமிழ்க் கல்வெட்டுக்கள் சுமத்ரா போன்ற தீவுகளில் காணப்படுகின்றன. காஹடவாலரின் கல்வெட்டு கங்கைகொண்ட சோழபுரத்தில் காணப்படுகிறது. மொழியறியாத நாட்டில், அவரவர் பெருமையினைச் சாற்றும் சிறப்புடையன இக்கல்வெட்டுக்கள்.

காசுகள் ஒரு நாட்டின் உண்மையான வரலாற்றுக்குப் பெருந்துணை செய்பவை. ஆனால் அதைப் புரிந்து கொள்வதற்கும், கல்வெட்டு அறிவு மிகமிக இன்றியமையாதது. காசுகளில் எழுதப்பட்டிருக்கும் வாசகங்கள் சில நேரத்து மிகவும் நீண்டதாக அமையும். அதை வாசிக்கும் போது பல்வேறு வகையான எழுத்துக்களின் அறிவு அவசியமானது. காசுகளில் உள்ள வாசகங்கள், பல்வகைப்பட்டதாக, பல்வகை எழுத்துக்களில் எழுதியவையாக இருக்கும். பொதுவாகக் கல்வெட்டுக்களில் எழுதப்படும் எழுத்து ஒன்றாக அமைய, காசுகளில் மட்டும், அப்பொது எழுத்து முறையினை விடுத்து, புதிய தனி எழுத்துக்களில் வாசகங்கள் அமைவது உண்டு. சான்றாக சோழ மன்னர்களான உத்தமசோழன், இராஜராஜன், இராஜேந்திரன் ஆகியோரும், கேரளமன்னன் ஸ்ரீவீரகேரளனும் தம் கல்வெட்டுக்களில் நாகரி எழுத்தைக் கையாளவே இல்லை. அவர்கள் கல்வெட்டுக்கள் அனைத்தும், கிரந்தம், தமிழ், வட்டெழுத்து ஆகிய எழுத்துக்களில்தான் அமைந்துள்ளன. ஆனால் அவர்கள் காசுகளிலோ, நாகரி எழுத்துக்களில் அமைந்த வாசகங்களைக் காண்கிறோம்.

இதுவரை கல்வெட்டெழுத்துக்களை அறிந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தையும், கல்வெட்டுக்கள் தரும் அரிய செய்திகளையும் பற்றிக் கண்டோம். கல்வெட்டுக்களைப் பற்றி அறியும் போது, எல்லாத் துறைகளையும் பற்றிய அறிவு தேவையான ஒன்றாகி விடுகிறது. கல்வெட்டுக்கள். மன்னனைப் பற்றியும், மக்களோடு அவன் கொண்டிருந்த தொடர்பு பற்றியும், அக்கால நிகழ்ச்சிகள், வாழ்க்கை முறை ஆகியன பற்றியும் எழுதி வைக்கப்பட்டுள்ள அழியாத சான்றுகள் ஆகும். அக்கல்வெட்டுக்களைப் படித்துப் புரிந்து கொள்ள, இடத்திற்கு இடம், காலத்திற்குக் காலம் மாறுபடுகின்ற அதில் உள்ள பண்டைய எழுத்துக்களை அறிகின்ற அறிவு இன்றியமையாதது. இவ்வறிவினைத் தரும் இயலைத் 'தொல்லெழுத்தியல்' (palaeography) என்று கூறலாம். முதன்முதலாக எழுத்துக்கள் எவ்வாறு தோன்றின என்பதையும், காலந்தோறும் அவை எவ்வாறு வளர்ச்சி பெற்றும், மாற்றம் பெற்றும் வந்துள்ளன என்பதையும் அறிகின்ற அறிவே 'தொல்லெழுத்தியல்' ஆகும். கல்வெட்டுக்களைப் பற்றி அறியும் போது. அதில் தொல்லெழுத்தியல் மிகச் சிறந்த இடம் பெறுகிறது. கல்வெட்டின் காலம், மொழியின் வளர்ச்சி, மொழிகளில் உள்ள இலக்கியங்களின் சிறப்பு ஆகியன இரண்டாவதாக இடம் பெறுகின்றன எனலாம். பின்வரும் பகுதிகளில் தென்னிந்தியாவில் உள்ள கல்வெட்டுக்களையும். அதிலுள்ள எழுத்துக்களையும் துணையாகக் கொண்டு, இந்தியக் கல்வெட்டுக்களின் சிறப்பான அம்சங்களை விரிவாகக் காணலாம்.

ஆவணங்கள்
(DOCUMENTS)

பொதுவாகப் பத்திரங்கள், சுவடி வடிவத்தில் அமைந்த நீண்ட சதுரமான பலகைகளிலோ அல்லது செப்புத் தகடுகளிலோ எழுதப்படும். எழுதப்பட்ட சுவடிகள் ஏந்தியிருக்கும் அமைப்பினைச் சிற்பங்களிலும். நாம் காணலாம். ஞானத்தின் உருவகமாக அல்லது ஆசானைக் அமைக்கப்படும் இறைவன் திருவுருவங்களில் இவ்வடிவம் இடம் பெறும். ஞானத்தின் தலைவனாகிய பிரும்மாவின் உருவம் இடக்கரத்தில் புத்தகம் ஏந்திய நிலையிலேயே அமையும். பம்பாய்க்கு இருகில் உள்ள எலிபெண்டாக் குகையில் காணப்படும் குப்தமைத்ரகர் கலைப்படைப்பான அர்த்தநாரீஸ்வரர் சிற்பம் சிறந்த எடுத்துக்காட்டாகும். ஐஹொளே, பாதாமி ஆகிய இடங்களில் காணப்படும் பிரும்மாவின் உருவங்களும் பிற எடுத்துக்காட்டுகள் ஆகும். இதனைப் பியூலர் சிறப்பாகக் குறிப்பிடுகிறார். (Ind. Ant. XXXIII P. 1) *(படம் 1)*. நால் வேதங்களையே மூச்சாகக் கொண்டு தன்

படம். 1

நான்கு நாவினாலும் உரைக்கின்ற பிரும்மனின் தேவியாகிய சரஸ்வதியின் உருவம் கையில் புத்தகம் ஏந்திய நிலையில் சிறப்பாகக் காட்சியளிக்கிறது. இந்தியாவில் கிடைத்துள்ளவற்றில் பழமையான சரஸ்வதியின் உருவம் மதுராவில் உள்ளது. இவ்வுருவம் தலையின்றிக் காணப்படுகிறது. இதன் பீடத்தில் வாசகங்களும் உள்ளன. இச்சிற்பம் கிறிஸ்து அப்தத்தின் தொடக்கக் காலத்தைச் சார்ந்தது. இச்சிற்பத்தின் இடக் கரத்தில் புத்தகம் காணப்படுகிறது. அது சுவடிகள் அல்லது சிறிய பட்டைகளாக அமைந்து ஒரு நூலினால் கட்டப்பட்டது போன்ற அமைப்பில் உள்ளது (படம் 2). உலகிற்கே ஆசிரியராக விளங்குபவர் சிவன். மிகச் சிறந்த ஞானம் கொண்ட முனிவர்களே இவரது மாணவர்கள். சிவனுடைய இந்த உருவத்திலும் கையில் புத்தகத்தினைக் காணலாம். தேவ்காரில் உள்ள குப்தர்காலக் கோயிலில் உள்ள விஷ்ணுவின் சிலையொன்றும் இத்தகைய அமைப்பில் காணப்படுகிறது (படம் 3). அவரது வலக்கரம் வியாக்யான முத்திரையில் விளங்குகிறது. இவ்விரு கரங்களும் குறிப்பிடத்தக்க சிறப்புடையன. இவ்வியாக்யான முத்திரையினை, ஞானத் திருவுருவாகிய புத்தரின் சிற்பங்களிலும் காணலாம். தர்மச் சக்கரத்தின் சிறப்பினையும், புத்த தர்மத்தையும் குறிப்பதாக அமைந்த புத்தரின் கரத்தினைத் 'தர்மச்சக்கரப்பிரவர்த்தன முத்திரை' என்று குறிப்பர். பெரும்பாலும் புத்தரின் ஒரு கரம் உயர்த்திய நிலையில் அமைந்திருக்க, மற்றொரு கரம் நீண்ட ஆடையின் நுனியினைப்பிடித்திருப்பது போலக் காட்டப்படும். அந்த நுனி சிறிய புத்தகம் போன்ற அமைப்பில் விளங்குவதைப் பார்க்கலாம் (படம் 4). சிறந்த சிவனடியாராகிய மாணிக்கவாசகரின்

படம். 2

உருவம் தென்னகத்தில் மிகுதியாக உள்ளது. இவ்வுருவத்தின், ஒரு கரம் புத்தகம் ஒன்றை ஏந்திய நிலையிலேயே காட்டப்படும். பிற்காலச் சோழர் காலத்தைச் சார்ந்த இவரது செப்புத் திருமேனி ஒன்றில் அவரது பாடலிலிருந்தே ஒருவரி பொறிக்கப்பட்டுள்ளது (படம் 5). ஈழத்தில் உள்ள மிக அழகிய சிற்பங்களில் ஒன்று, ஒரு முனிவர் தன்னிரு கரங்களாலும் புத்தகம் ஒன்றினை ஏந்திய நிலையில் காணப்படுவதாகும் (படம் 6). இவ்வுருவம் அகத்தியரைக் குறிப்பது என்றும், திருவள்ளுவரைக் குறிப்பது என்றும், ஈழத்தரசன் பராக்கிரமபாகுவைக் குறிப்பது என்றும், பல்வேறு கருத்துகள் அறிஞர்களிடையே நிலவுகின்றன. எவ்வாறாயினும், இது சிறந்த அறிஞர் ஒருவரின் உருவம் என்பது தெளிவு. சோழர் காலத்து ஓவியத்தில், சுந்தரமூர்த்தி நாயனாரைத் தடுத்தாட்கொள்ளச் சிவன் முதியவராக வருகிறார். ஒரு கையில் குடையினை ஏந்தி, மற்றொரு கையில் பத்திரமாகிய ஓலைச்சுவடி ஏந்தி வருவதாகவே அவ்வோவியம் தீட்டப்பட்டு உள்ளது.

படம். 3

ஆவணத்தைக் குறிக்கின்ற 'பத்ரம்' என்ற சொல்லே இதன் தொடக்கத்தினைக் காட்டவல்லதாக உள்ளது. எழுதுவதற்கு முதன்முதலில் ஓலையினையே பயன்படுத்தினர். இவ்வோலைகள் குறிப்பிட்ட அளவில் நறுக்கப்பெற்றவை. தக்காணத்தில், 'தாலபத்ரம்' என்றும், வடஇந்தியாவில் 'பூர்ஜபத்ரம்' என்றும் இது வழங்கப் பெற்றது. பக்கத்தினைக் குறிக்கவும் இதே சொல்லே பயன் படுத்தப்பட்டது. பௌத்த இலக்கியங்களில் 'பண்ண' என்ற சொல் காணப்படுகிறது. ஜாதகக் கதைகளில் சுவடியில் எழுதுவதைப்

பற்றிய குறிப்புக்கள் அதிகமாகக் காணப்படு கின்றன (II p. 122: IV p. 35; VI 204). பனையோலையில் எழுதும் பழக்கத்தினைப்பற்றி பியூலர் சிறப்பாக ஆய்வு செய்துள்ளார். கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் வந்து அப்பழக்கத்தை நேரில்கண்டு எழுதிய யுவான்சுவாங் குறிப்புக்களையும், காட்பிரே (Godfrey) தொகுப்பில் காணப்படும் கி. பி. 4-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சில சிதைந்த சுவடிகளையும், கிறிஸ்து அப்தத் தொடக்கத் தில் சுவடிகளைப் போலவே செய்து பயன்

படம். 4

படுத்தப்பட்ட பழைய செப்பேடுகளையும், புத்தரின் மறைவுக்குப் பின்னர் முதற் கூட் டத்தில் பௌத்தக் கொள்கைகள் எழுதப் பட்ட ஓலைச்சுவடிகளையும் தன்னுடைய ஆய் வில் சிறப்பாகக் குறிப்பிடுகிறார் (பியூலர் பிற்சேர்க்கை Ind. Ant. XXIII p. 94). ஒழுங்காக இணைத்துக் கட்டப்பட்டிருந்த ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்ட புத்தகங் களையே 'கிரந்தம்' 'பிரபந்தம்' என்ற சொற் கள் குறிப்பிடுகின்றன. காண்டம், சருக்கம், படலம் என்பவை கூட இம்முறையிலமைந்த பகுப்புக்களே ஆகும்.

படம். 5

தமிழில் உள்ள ஓலை என்ற சொல் எழுதுவதற்குப் பயன்படுத்தப் படும் பனையோலையினையே சிறப்பாகக் குறிப்பிடுகிறது. கோயில்களில் நாள், நேரம் இவற்றை வானவியல் முறையில் பகுத்துக் கூறுபவர் 'நாளோலை' என்று பெயர்பெறுகிறார் (S. I. I. III pp. 321). பத்ரங்களைக் குறிக்கும் அறையோலை (Ibid pp. 163 and 275). மன்னனின் ஆணைகளை எழுதுகின்ற மந்திரவோலை, ஓலைநாயகம் ஆகிய பெயர்கள் எல்லாம், எழுதுவதற்குப் பயன்படுத்தப்படும் ஓலையின் அடிப்படையில் வந்த பெயர்களே ஆகும். மன்னனின் ஆணைகள் மந்திரவோலை என்பவரால் பொத்தகத்தில் எழுதப்பட்டு ஓலைநாயக அதிகாரிகளின் கையொப்பத்துடன் வெளியிடப்பட வேண்டும் என்று மன்னனே கூறுவதாக ஒரு கல்வெட்டு குறிக்கிறது (Ibid p. 312). இவ்வாறு எழுதுவதனை 'வரியிலிடுதல்' என்று குறிப்பிட்டனர். அரசனின் ஆணை முதலில் ஓலைகளில் எழுதப்பட்டது. பின்னர் அழியாத பொருட்களான கல் போன்றவற்றில் எழுதப்பட்டது. இதனை இராஜேந்திர சோழனின் திருவாலங்காட்டுச் செப்பேடு விரிவாகக் காட்டுகிறது. இவனும் பெரு மன்னன் அசோகனைப் போல, நாட்டுக் கடமைகளை எந்த நேரத்திலும் கவனித்தவன் என்பதை இச்செப்பேட்டின் மூலம் அறிகிறோம். சிவபுரியில் உள்ள நாளிருக்கையில், உணவருந்திக் கொண்டிருக்கையில், அவரது அதிகாரி ஒருவன், இராசேந்திரசோழப் பாடியில் இருபத்தைந்து குடும்பத்தவர் குடியேறவும். அவர்கள் திருவாலங்காட்டு இறைவனுக்கு நெய்யளிக்கவும் அனுமதி வேண்டினான். அதனை மன்னன் அனுமதித்தான். அவ்வாணையினைத் திருமந்திரவோலை எழுதி கையொப்பமிடுகிறான் பின் அதனைத் தொடர்ந்து நடைபெறும் பொருட்டு நியாயத்தார் கல்லில் வெட்டுவித்தனர் (Ibid p. 136).

படம் 6

இப்பத்திரங்களைக் குறிக்க 'லேகா' (लेखा) என்ற சொல்லும் வழங்கப்படுகிறது. இது எழுதுதல் என்னும் பொருள் கொண்ட 'லிக்' (लिख) என்றதன் அடியாகத் தோன்றியது. 'லிபி' என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டது. அசோகனின் கல்வெட்டுகளில் 'தம்மலிபி' என குறிக்கப்படுகிறது. इयं धम्मलिपि लिखापिता-இந்த தர்ம பத்திரம் எழுதப்பட்டது என்பது இதன் பொருள். லிகாபிதா என்ற சொல் எழுத்துக்களைப்பொறிப்பதையும், லிபி என்ற சொல், எழுத்துக்களை எழுதுவதையும் (வண்ணத்தால் எழுதுதல்) குறிக்கிறது. 'லேகா' என்ற சொல், முதலில் மை அல்லது மசியினல் அழியத் தக்க பொருள்களில் எழுதப்பட்டவற்றை அழியாத கல் போன்றவற்றில் மாற்றி எழுதுவதைக் குறிக்கும்.

இந்தியாவெங்கும் காணப்படும் செப்பேடுகள் அனைத்தும் முதலில் எழுதப்பட்ட மூலத்தின் பிரதிகளே ஆகும். கொடையினைப் பெற்றவர்கள் தம் உரிமையினை நிலைநாட்டும் பொருட்டு இச்செப்பேடுகளைப் பாதுகாத்தனர். மன்னன் கொடையளித்தமுறை மிக விரிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. மன்னன் பசுவின் காதினையும், தருப்பைப் புல்லையும் தொட்டு கரத்தைப் புனிதப்படுத்திக்கொண்டு, (நீர் ஊற்றி) தாரை வார்த்துக் கொடுத்தான். 'இது என்றென்றும் நிலைத்து நிற்பதாக' என்று கூறிக்கொண்டே அளித்தான் என்று குறிக்கப்படுகிறது (எபிகிராபிகா இண்டிகா XIII p. 297). கொடை அளிக்கும் முறையினை இவ்வாறு மிகத் தெளிவாகக் குறித்தனர். சில இடங்களில் அச்செப்பேட்டுக்குரிய தகடு செய்ததைக் கூட குறித்துள்ளனர் (Ibid VIII p. 142; XV p. 148; III p. 353). இச்செப்பேடுகளைக் காட்டுவதன் மூலம் உரிமை நிலைநாட்டப்படும் என்பதையும் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. (Ibid p. 142). இவ்வாணை அளித்தலையே குறிப்பிடும் செப்பேடுகளும் உண்டு. இதனை மயிதவோலு செப்பேட்டில் காணலாம் (Ibid VI p 88).

தூதர்களாகவும் அமைச்சர்களாகவும் விளங்கும் பிரமாத்ரர் அல்லது மகாசாதிவிக்ரஹிகர் அல்லது ரகசிகர் ஆகியோரின் மூலம் அரச ஆணைகள் வரும். அவை பத்திரங்களைக் காக்கும் அதிகாரிகளான ஆக்ஷபடலிகர் அல்லது திவிரபதிகளால் முதலில் பனையோலையில் எழுதப்படும் (Ibid I. 318; p. 73; p. 88; p. 9). பின்னரே அதனைக் கல்லிலோ செம்பிலோ எழுதுவர்.

கையொப்பம்

பத்திரங்களின் முடிவில் அமைவன கையொப்பமும், முத்திரையும் ஆகும். கையொப்பத்தில் பொதுவாக மன்னனின் பெயருக்கு முன்னால் 'ஸ்வஹஸ்தோ மம' என்ற தொடர் இணைத்து எழுதப்பெறும். இதற்குச் மிகச் சிறந்த சான்றாக ஸ்ரீஹர்ஷவர்த்தனரின் கையெழுத்தைக் கூறலாம் (படம் 7). மிகவும் கலைநுணுக்கத்துடனும், அரசர்க்குரிய கம்பீரத்துடனும்



படம் 7

எழுதப்பட்ட இவ்வழகிய எழுத்து இன்று வரையிலும் பாதுகாக்கப்பட்டு வரும் ஒன்று. போர்களுக்கும், வெற்றிகட்கும், அரசியல் நிர்வாகத்திற்கும், இலக்கியப் பணிகட்கும் நடுவேயும் கூட, தன் கல்வெட்டுக்களில் இத்தகைய அழகிய தன் கையெழுத்தையும் இணைக்கச் செய்துள்ளான். எப்படித்தான் முடிந்ததோ! கல்வெட்டாய்வாளர்களால் வியக்காதிருக்க இயலவில்லை. தெலுங்குக் கல்வெட்டுக்களில் மன்னன் பெயரினைத் தொடர்ந்து, 'வ்ராலு' (Vralu) என்ற சொல் எழுதப்படுகிறது. இதற்குக் கையெழுத்து என்பது பொருள். சான்றாகச் 'சிங்கர நாயானி வ்ராலு' (படம் 8) என்று இருப்



படம். 8

பதைக் காணலாம். சில இடங்களில் இச்சொல் இன்றி, மன்னன் பெயர் மட்டும் காணப்படுவதும் உண்டு. விஜயநகர மன்னர்களின் ஆணைகளில் மன்னன் பெயர் மட்டுமே உள்ளன (படம் 9). இவ்வாறு தன் பெயர்மட்டும்



படம். 9

குறிப்பதோடு, வேறொரு முறையினையும் விஜயநகரர் மன்னர்கள் கடைப் பிடித்தனர். அதாவது, ஒரு கோயிலில் உள்ள இறைவனின் பெயரையே இறுதியில் கையெழுத்தாக இடுவது உண்டு. சான்றாக, ஹம்பி ஸ்ரீவிருபாக்ஷர் கோயிலில், இறுதியில் அவ்விறைவனின் பெயரே இடப்பட்டுள்ளது. இங்கு மன்னனே கடவுளின் பிரதிநிதியாக இருந்து ஆண்டான் என்பது குறிப்பாக காட்டப்படுகிறது போலும்! மன்னனின் பெயருடன் 'ஸ்வஹஸ்தோமம' என்ற தொடர் குறிக்கப்படுவது போல, மன்னன் போஜனின் கல்வெட்டுக்களில், 'ஸ்வஹஸ்தோயம் ஸ்ரீ போஜதேவஸ்ய' என்ற தொடர் வழங்கப்படுகிறது (Ibid XI p. 182). வேறு சில இடங்களில் மன்னனின் பெயரே 'ஸ்ரீ மூலராஜஸ்ய' என்று குறிக்கப்படுதலும் (Ibid X p 79), மன்னன் பெயரே இன்றி தனியாக 'ஸ்வஹஸ்தோ மம' என்று குறிக்கப்பட்டு (Ibid I p. 88), மன்னனின் முத்திரை காணப்படுவதும் உண்டு.

இலச்சினை

ஆணைகள் எழுதப்பட்ட பின்னர், இடப்படும் இலச்சினை (முத்திரை) மதிப்பு வாய்ந்த ஒன்று. முத்திரையின் மூலமே அவ்வாணை நிறுவப்படுகிறது. தர்ம சாஸ்திரங்கள் கூட இதனை மிகவும் வலியுறுத்திக் கூறுகின்றன. 'முத்ராராக்ஷஸம்' என்றொரு நாடக நூல் உள்ளது. அதில் நந்தர்களின் அமைச்சனான ராக்ஷஸன் ஓரிடத்தில் ஆணையொன்றினை மறுக்க இயலாது தவிக்கிறான். காரணம் அதில் அவனுடைய முத்திரையே காணப்படுகிறது. அந்த நாடகத்தில் அவனுக்கே தெரியாமல் இடப்பட்ட முத்திரை அது. ஆனாலும் அம்முத்திரை இருப்பதால் அவனால் மறுக்க இயலவில்லை. लेखोऽयं न ममेति नोत्तरमिदं मुद्रा मदीया यतः (Mudrarakshasa, V. 18). இராமாயணத்தில் கூட, இராமனின் முத்திரை பொறித்த மோதிரத்தைப் பார்த்த பிறகே, சீதை அனுமனை நம்புகிறாள். இராமனின் தூதுவனாக வந்த அவன், இராமன் பெயர் பொறித்த மோதிரத்தைக் காட்டுகிறான் विश्वासार्थं तवानीतः तेन दत्तं ह्यनिन्दिते। रामनामाङ्कितं चेदं पश्य देव्यङ्गुलीयकम् (Ramayana V. 36·2) முத்திரைகளே அடையாள மோதிரங்களாக வழங்கின. தனியாகப் பெரிய முத்திரைகளும் வழக்கிலிருந்தன. இந்தியாவில் பல்வேறு இடங்களிலும் வகை வகையாகப் பல முத்திரைகள் கிடைக்கின்றன. தனிப்பட்டோரின் முத்திரைகள், குறிப்பிட்ட வணிகக் குழுவினரின் முத்திரைகள், அரசாங்க உயர் அதிகாரிகளின் முத்திரைகள், பெரியோர்கட்கென முத்திரைகள், படைத்தளபதிகளுக்கான முத்திரைகள், அமைச்சர்களுக்கான முத்திரைகள், இளவரசர்க்கான முத்திரைகள், நாளந்தா

விகாரம் போன்ற பெரிய நிறுவனங்களுக்கான முத்திரைகள் மதத் தொடர்பான முத்திரைகள் என்று நிறைய வகைகளில் முத்திரைகள் வழங்கின. அம்முத்திரைகளிலேயே வாசகங்கள் அமைவதும் உண்டு. பௌத்த மத முத்திரைகளில் ‘யெ தம்மா... ’ என்று குறிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் கிடைத்துள்ளவற்றுள் மிகவும் பழமையான முத்திரை மொஹஞ்சதாரோவில் கிடைத்ததே ஆகும். அதில் உள்ள வாசகம் இன்னும் படிக்க இயலாத நிலையிலேயே உள்ளது. ஏதாவது சின்னங்கள் முத்திரைகளில் இடம் பெறும். அவை ஏதாவதொரு விலங்கினத்தின் உருவமாகவோ அல்லது சிறப்பான பொருளின் உருவமாகவோ அமையலாம். அதனுடன் வாசகமும் பொறிக்கப்பட்டிருக்கும். பிற்காலம் வரையிலும் கூட இம்முறையே பின்பற்றப்பட்டது. காசுகளிலும் இம்முறையே இடம் பெற்றது.



படம். 10

பல அமைச்சர்களும் தத்தமக்குரிய கருடன் உருவம் பொறித்த முத்திரைகளுடன் அரசனுக்கு அளித்ததாக அலகாபாத் தூண் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. குப்தர்களின் அரச முத்திரை மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்று ஆகும் (Fleet C. Inscription Ind. III pl. XXXVII). பொதுவாக அரசின் முத்திரைகள் சிறந்த வேலைப்பாடுடையனவாக இருக்கும். சர்வ வர்மன் மௌகரியின் முத்திரை மிகச் சிறப்பான கலைப்படைப்பாகும் (Ibid pl. XXX). இதிலுள்ள அவர்களின் குடும்பச் சின்னமான காளையின் உருவம், மைத்ரக பட்டாரகர்களின் முத்திரையிலும் (Ibid XXIV), ஹர்ஷவர்த்தனரின் சேரன்பட் முத்திரையிலும் காணப்படுகிறது (Ibid pl. XXXII). பல அரச பரம்பரையினரால், வராகம் சின்னமாகப் பயன்படுத்தப்பட்டது. மேலைச் சாளுக்கியர்கள், காகதீயர், விஜயநகரர் ஆகியோரின் சின்னம் வராகமே ஆகும். மேலைக்கங்கர்கள் தம் முத்திரைகளில் யானை உருவத்தைப் பொறித்தனர். கீழைக்கங்கர்களுக்கு காளை சின்னம் ஆகியது. பல்லவர்களின் முத்திரையிலும் காளையே இடம் கொண்டது. சோழர்களின் சின்னம் புலி. இவர்கள் பாண்டியர்களையும்,

சேரர்களையும் வென்று தலைமையேற்ற போது முறையே அவர்களுக்கு உரிய மீனையும், வில்லையும் கீழே இட்டு, அதற்கு மேல் வெண்கொற்றக் குடையினையும், சாமரைகளையும் கொண்டதாக முத்திரையினை அமைத்தனர். சாளுக்கியர்கள், வராகத்தினைச் சின்னமாகப் பயன்படுத்தினர். அதனோடு, சிறிய குடை, சாமரம், விளக்கு, சங்கு, தாமரை ஆகியவையும் அரசசின்னங்களாக இடப்பட்டன. சங்கமும், தாமரையும், நிதியைக் குறித்தன. அதுபோல சாமரையும், குடையும் மன்னர்களின் செல்வாக்கையும், அங்குசமும், யானைத் தந்தமும் படைவலிமையையும், விளக்கு மன்னரின் அறிவாற்றலையும், சந்திரனும் சூரியனும் அப்பரம்பரையின் எல்லையற்ற கீர்த்தியையும் குறிப்பதாக அமைந்தன. கீழைக் கங்கர்களின் செப்பேடுகளிலும், இதுபோலச் சங்கு, பொன்சாமரை, வெண்கொற்றக் குடை, காளைச் சின்னம் ஆகியவை காணப்படுகின்றன. गोकर्णस्वामिन: प्रसादादसमादितैकशाङ्खभेरीपञ्चमहाशब्दधवलच्छत्रहेमचामरवरवृषभलाञ्छनसमुज्ज्वलसमस्तसाम्राज्यमहिम्ना (E. I. VI p. 189) வங்காளத்து பாலர் பரம்பரையினர்களின் முத்திரை இருபுறமும் மானும் நடுவில் தர்மச்சக்கரமும் பொறித்ததாக விளங்கியது. இச்சின்னங்கள் தவிர, வாசகங்களும், முத்திரைகளில் காணப்படும். அவை சிறியதாகவோ, நீண்டதாகவோ அமையும். மன்னனின் பெயர், அரசின் பெயர் ஆகியவையும், சிலவிடங்களில் அரசபரம்பரையும் குறிக்கப்படும். வாகாடகர் முத்திரை ஒன்றில் காணப்படும் வாசகம் 10-ஆம் படத்தில் தரப்பட்டுள்ளது. இராஜராஜனின் கல்வெட்டில் காணப்படும்-வாசகம் 11-ஆம்



படம். 11

படத்தில் காட்டப்பட்டுள்ளது. இராஜேந்திரனின் திருவாலங்காட்டுச் செப்பேட்டில் இது போன்றதொரு வாசகமே காணப்படுகிறது (pl. II-a). கலிங்கர் முத்திரையில் காணப்படும் வாசகமும் மற்றொரு எடுத்துக் காட்டு ஆகும் (படம் 12).



படம். 12

திருவாலங்காட்டுச் செப்பேட்டில் காணப்படும் இராஜேந்திரனின் முத்திரை அவனது வெற்றிச் சிறப்பினைக் காட்டுவது ஆகும் (pl. II a). இது ஒரு வளையத்தினுள் கோர்க்கப்பட்டது. கிடைத்துள்ள செப்பேடுகளுள் சிறந்த ஒன்ருக மதிக்கப் பெறுவது. பைத்தான் செப்பேடுகளை விட சிறப்பாகக் கருதப்படுவது. தண்டந்தோட்டம் செப்பேட்டில் காணப்படும் காளையின் உருவமும் மிகச் சிறப்பாக அமைந்த ஒன்று. விஷ்ணு குண்டின்* மன்னர்களின் செப்பேட்டிலுள்ள முத்திரையில் (pl. III b.) சிங்கம் ஒன்று முன் காலைத் தூக்கி, வாலைத் தூக்கிச் சுருட்டிய நிலையில், வாயைத் திறந்து கொண்டு பாய்ந்து வருவதுபோலச் சிறப்பாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. மேலைக் கங்க மன்னன் இரண்டாம் மாதவனின் பெனுகொண்டாச் செப்பேட்டில் அழகிய யானையின் உருவம் காணப்படுகிறது. கி. பி. ஐந்தாம் நூற்றுண்டைச் சார்ந்தது இது இதிலுள்ள இவ்வழகிய யானையின் உருவத்தினை ‘ஐயா’ என்பவன் செய்துள்ளான். அதிலுள்ள வாசகங்களை, அவனது மகன் அபாபன் பொறித்தான் என்பது குறிப்பிடத்தக்கது (Ibid. XIV p. 335). பன்றியின் உருவமும் ஸ்ரீபுவனங்குசன் என்ற வாசகமும் பொறிக்கப்பட்ட முத்திரை (pl. III c) யுடன் கூடிய கீழைச் சாளுக்கியரின் செப்பேடும் (pl. IV) அருமையான கலைப்படைப்பே.

பொதுவாக இம்முத்திரைகள் உலோகத்தால் செய்யப்படும். சில முத்திரைகள் பொன்னிலேயே செய்யப்படுவதும் உண்டு. இவை களிமண்ணால் செய்யப்படும் என்பதைப் பல இலக்கியங்களின் வாயிலாக நாமறிகிரோம் (தம்மபத-அத்த-கதை-புத்தர் கதைகள் I p. 165). இப்போதும் ஓலைச்சுவடிகள் போன்ற சாயலையும், அச்சுவடிகளைக் கட்டிய துளையும், சுற்றிய கயிறு போன்ற அமைப்பினையும் செப்பேடுகளில் காணலாம். களிமண்ணால் செய்து முத்திரை பொறிப்பதை ஹர்ஷசரிதம் விளக்கமாகக் கூறுகிறது. அதுவருமாறு :

ஹர்ஷன் ஓரூரில் சென்று தங்கினான். அங்கு ஊர் அதிகாரிகளும் பிற கணக்கர்களும் அவனிடம் வந்தனர். 'தங்களது ஆணைகள் ஏற்றுப் பின்பற்றப்படுகின்றன; இப்போது தங்கள் ஆணைகட்குக் காத்திருக்கிறோம்' என்று கூறினர். அதோடு காளை உருவம் பொறிக்கப்பட்ட பொன்னால் ஆன முத்திரை ஒன்றையும் அளித்தனர். மன்னன் அதனை எடுத்தான். அப்போது தவறி அது கீழே விழுந்து விட்டது. முத்திரையின் முன்பகுதி தரையில் படுமாறு விழுந்தது. எனவே, களிமண்ணால் ஆன மென்மை யான சரஸ்வதி ஆற்றங்கரையில் அதில் உள்ள உருவங்கள் அவ்வாறே பதிந்தன. அதை ஒரு அபசகுனமாக எண்ணி, அங்குள்ளவர்கள் கவலை கொண்டனர். ஆனால் மன்னனோ, 'கோழை மனமே உண்மையினை ஏற்க மறுக்கும். இந்நிலம் முழுவதிலும் என்னுடைய ஒரே ஆணையே நிலவ வேண்டும் என்பதையே இந்நிகழ்ச்சி உணர்த்துகிறது. இவர்கட்கு அது தோன்றவில்லை' என்று மனதினுள் நினைத்துக் கொண்டானாம். மனதில் இந்நிகழ்ச்சியால் ஊக்கம் பெற்ற இம்மன்னன், அந்தணர்களுக்கு நூறு கிராமங்களையும், உழுவதற்கு ஆயிரம் கலப்பைகளையும் அளித்தான் என்று அந்நூல் குறிப்பிடுகிறது (ஹர்ஷசரிதம் - மொழிபெயர்ப்பு கோவல் p. 198). முதலில் எழுதப்படும் ஓலையில் அமைந்த ஆணை, பத்ரங்களைப் பாதுகாக்கும் அக்ஷபடலிகரால் பாதுகாக்கப் பெற்றது.

முடிவில் உலோகத்தால் செய்யப்பட்டு, முத்திரையுடன் கூடிய வளையத்தில் கோர்க்கப்பட்ட பிரதி, உரியவரிடம் சேர்க்கப்பட்டது. இம் முத்திரைகள், இச்செப்பேடுகளுக்கே அழகூட்டின என்கிறார் பாணர் (ஹர்ஷசரிதம் p. 284). இதனை உரியவரிடம் சேர்ப்பிக்கும் முன்னர், மீண்டும் உண்மையான மூலத்துடன் ஒப்பிட்டு சரிபார்த்தல் உண்டு. இதனை ' த்ருஷ்டம் ' என்று கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

கல்வெட்டுச் செய்திகளும் அமைப்பும்

எந்தச் செயலையும் மங்கல நிகழ்ச்சியோடு தொடங்குவது இந்திய மரபு.

இலக்கியமாயினும் சரி, அறிவியலாயினும் சரி, தத்துவமாயினும் சரி எத்துறையிலும் மங்கல வாழ்த்தே முதலில் இடம் பெறும். சமஸ்கிருதத்தில் இதனை மங்கல ஸ்லோகம் என்றும், மங்கல வசனம் என்றும் கூறுவர். மங்கல வாசகங்கள் மூன்று வகைப்படும், ஆசிகூறுதல், தெய்வ வணக்கத்துடன் தொடங்குதல், அல்லது கருப்பொருளைக் குறியிட்டுச்

சொல்லுதல் என்பன அம் மூன்றுவகை (आशी, नमस्क्रिया, वस्तुनिर्देश). இம்முறை எழுதும் போதும் கடைப்பிடிக்கப் படுகிறது. எனவே கல்லிலும், செம்பிலும் பிறவற்றிலும் எழுதப்படும் கல்வெட்டுக்களிலும் இம்முறை மாறுது இடம் பெறும்.

பண்டைய கல்வெட்டுக்களில் மங்கல வாழ்த்துடன் மங்கலச் சின்னங் களும் பொறிக்கப்படுவது உண்டு. முதன்முதலில் வாழ்த்து சிறிய அளவில் உரைநடையாக எழுதப் பட்டது. ஆனல் பின்னர் இவையே இறைவனைப் போற்றும் பாடல்களாக மலர்ந்து விட்டன. காரவேலனின் ஹாதிகும்பாக் கல்வெட்டில் ஸ்வஸ்திகம், ஸ்ரீவத்சம் ஆகிய உருவங்கள் பொறிக்கப் பட்டுள்ளன. சாளுக்கியரின் செப்பேடுகளின் தொடக்கத்தில், 'ஸ்வஸ்தி ஸ்ரீமதாம்' என்பது காணப்படுகிறது. சமணக் கடவுளர்க்குரிய வணக்கத் தோடு சேர்ந்து இதுவும் இடம் பெறுகிறது. இதே மங்கலச் சின்னங்களும், மங்கல வாழ்த்தும் கல்வெட்டின் முடிவிலும் காலந்தோறும் பயன்படுத்தப் பட்டுள்ளன. அசோகனின் கல்வெட்டுக்களில் 'இறைவன்' என்ற பொருள் படும் 'தேவன்' என்ற சொல் வருமாறு 'தேவனும்பிய' என்ற தொடக்கம் காணப்படுகிறது. இதனை 'வஸ்துநிர்தெச' வகை என்று கூறுவர்.

இந்தியாவின் மேலைப் பகுதிகளில் உள்ள குகைகளில் பலவகையான மங்கலச் சின்னங்கள் காணப்படுகின்றன. சிலவிடங்களில் வணக்கத்தைக் குறிப்பிடத் திரிசூலத்தின் மீதமைந்த சக்கரத்தின் உருவம் காணப்படு கிறது. வேறு சில இடங்களில், உடுக்கையும் போதி மரமும் பொறிக்கப் படுதலையும் காணலாம். இதில் உடுக்கை, பிரணவம் அல்லது ஓங்காரம் அல்லது பகவானைக் குறிப்பதாகும். போதிமரம் அஸ்வத்தாம நாராயண னைக் குறிப்பதாகக் கொள்ளலாம். நானுகாட் குகையில் காணப்படும் சின்னங்கள், சங்கர்ஷணன், வாசுதேவன், இந்திரன், சந்திரன், சூரியன் ஆகியோரையும் பிற தெய்வங்களையும் போற்றும் வகையில் அமைந்துள் ளன. அமராவதியில் புத்தவணக்கத்தோடு இச்சின்னங்கள் காணப்படு கின்றன. சில இடங்களில் 'சித்தம்' என்ற சொல்லும் வழங்குகிறது.

பல்லவர்தம் பிராகிருத மொழிச் செப்பேடுகள், மேலைக்கங்க மன்னன் மாதவவர்மனின் செப்பேடு, விஷ்ணுகுண்டின் மன்னர்களின் செப்பேடுகள், ஆகிய இவைகளில் 'ஸ்வஸ்தி' என்ற சொல் முதல் ஏட்டின் இடப்புற ஓரத் தில் பெரிதாக எழுதப்பட்டுள்ளது. முற்காலக் கதம்பர், நளர் செப்பேடு களிலும், குப்தர்கள், யசோதர்மன் ஆகியோர் செப்பேடுகளிலும் 'சித்தம்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பழைய பல்லவர்தம் பிராகிருதச்

செப்பேடுகளிலும், வாகாடகர் செப்பேடுகளிலும் காணப்படும், 'திருஷ்டம்' என்ற சொல்லும் மங்கலச் சொல்லே போலும்! ஆனால் பொதுவாக மூலத்தோடு ஒப்பிட்டுச் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கவே இச் சொல் பயன்படுத்தப்படுகிறது எனலாம். மேலைச்சாளுக்கியர், இராஷ்டிர கூடர் செப்பேடுகளில், 'ஓம்' என்பதை ஒரு சுருள் வடிவத்தில் எழுதினர். இவையன்றி, பல்லவர், மேலைக்கங்கர் செப்பேடுகளில் 'ஜிதம்பகவதா' என்ற தொடரைக் காணலாம். மேலும் ஓம் நம: சிவாய (E. I. 11. p. 10, 410; VI p. 200; XIX. p. 279), நமோ புத்தாய (ஷை VI p. 287), நமோ பகவதே வாசுதேவாய (ஷை II p. 350; XIII, p. 290), நமோ பிரம்மணே (ஷை II p. 3; XIX. p. 211), நம:சரஸ்வத்யை அல்லது பாரத்யை (ஷை II p. 182, 333) ஆகியனவும் காணப்படுகின்றன. 'ஸ்ரீ கணபதயே நம:' என்று தொடக்கம் அமைவதை எல்லா விஜயநகரச் செப்பேடுகளிலும் காணலாம்.

சிவனையும், திருமாலையும் போற்றும் வகையில் அமைந்த அழகிய பாடல்கள் பல உள்ளன. தேவியைப் போற்றும் பாடல்களும் உண்டு. அரவணையில் உள்ள திருமால் அல்லது நரசிம்மர் (ஷை XIX p. 241), திரிவிக்ரமன், வாசுதேவன், கிருஷ்ணன், முகுந்தன், பத்மநாபன், தேவி ஸரஸ்வதி ஆகியோர்க்கும் வாழ்த்துப் பாடல்கள் காணப்படுகின்றன. கன்னோஜில் உள்ள காஹடவாலரின் கல்வெட்டு சிறப்பானஒன்று. திருமாலை ஆதிவராக மூர்த்தி நிலையில் வைத்துப் போற்றும் பாடல்கள் சிறப்பானவை. அவையே அனைத்துப் பிற்கால சாளுக்கியர் கல்வெட்டுகளிலும், காகதீயர், யாதவர்கள், ரெட்டி மன்னர்கள், விஜயநகர மன்னர்கள் ஆகியோர் கல்வெட்டுக்களிலும் இடம் பெறுகின்றன.

குப்தர் கல்வெட்டுக்களில் சிவனையும், திருமாலையும் போற்றும் பகுதி மிகச் சிறப்பாக உள்ளது. சிவனைப் போற்றும் சிறந்த பகுதிகளை, மெஹ்ரௌலி கல்வெட்டிலும், யசோதர்மன் கல்வெட்டுக்களிலும் காணலாம். சூரியனை ஏத்தும் பாடல்கள் மிகச் சிறந்த இலக்கியங்கள். ரெட்டி மன்னர்கள், விஜயநகரர் கல்வெட்டுக்களில் விநாயகரையும், பிற தெய்வங்களையும் வழுத்தும் பகுதிகளும் இடம்பெறுகின்றன (ஷை II p. 119 276; XIII, p. 200 XIX, p. 49). பிரம்மாவையும், சரஸ்வதியையும் போற்றும் வழக்கமும், பிரம்மாவின் அருவுருவினைப் போற்றும் நெறியும் (ஷை XIX) கூட காணப்படுகிறது. கன்னட நாட்டிலும், குஜராத்தின் வடபகுதியிலும் உள்ள சமணக் கல்வெட்டுக்களில், அருக வணக்கம் இடம் பெறுகிறது. மஞ்சுகோசர் (ஷை p. 296), வசுதாரர், மஞ்சுஸ்ரீ ஆகிய பிற பௌத்தத் தெய்வங்களின் வணக்கமும் சிலவற்றில் இடம் பெறுகின்

றன. இத்தகைய பாடல்கள் உருவ அமைதிகளைத் தெரிந்து கொள்வதற்குப் பெரிதும் உதவுகின்றன (சிவராமமூர்த்தி 4).

இம்மங்கல வாழ்த்தினை அடுத்து, மன்னனின் அதாவது கொடையளிப்பவரின் பரம்பரையினைப் பற்றிய செய்திகள் கூறப்பட்டிருக்கும். குறைந்தது மூன்று தலைமுறை பற்றிய குறிப்பாவது இடம் பெறும். மேற்கு கங்க மன்னன் இரண்டாம் மாதவவர்மனின் செப்பேடு, அவனது தந்தை அய்யவர்மன், பாட்டன் மாதவன், முப்பாட்டன் ஸ்ரீகொங்கணிவர்மன் ஆகியோரைக் குறிப்பிடுகிறது. கொடையளிக்கும் மன்னனின் வெற்றிச் சிறப்புகளும் காணப்படும். இதுபோலவே பல்லவ மன்னன் சிம்மவர்மனின் செப்பேடு, அவனது தந்தை யுவமகாராஜா விஷ்ணுகோபன், பாட்டன் ஸ்கந்தவர்ம மகாராஜன், முப்பாட்டன் ஸ்ரீவீரவர்ம மகாராஜன் ஆகியோரைக் குறிப்பிடுகிறது. அவர்தம் தவவலிமையும், தீரமும், சாஸ்திரங்களின் அறிவும், நீதித்திறமையும் பிறவும் கூறப்பட்டு உள்ளன. வலைச் செப்பேடு, அவ்வரச பரம்பரையைத் தோற்றுவித்த பட்டாரகரையும், அவரைத் தொடர்ந்து வந்த பரம்பரையினரின் சிறப்புக்களையும் சிறந்த உரைநடையில் தெரிவிக்கிறது. குப்தர் கல்வெட்டுக்களில் அவ்வாணை பிறப்பிக்கப்படும் வரையில் ஆண்ட அனைத்து மன்னர்களையும் பற்றிய செய்திகளைக் காணலாம். மகாராஜாதிராஜ சமுத்திரகுப்தனின் கல்வெட்டு மிகவும் சிறப்புடையது. ஒப்பாரும் மிக்காரும் இன்றி ஏகச் சக்கரவர்த்தியாய் விளங்கியவன் இவன். அவன் புகழ் நாற்கடலளவும் பரவியது. வருணனுக்கும், இந்திரனுக்கும், காமனுக்கும், குபேரனுக்கும் ஒப்பானவன். அஸ்வமேத யாகம் புரிந்தவன்; குப்த மகாராஜனுக்கும், அவன் மகன் கடோத்கஜ மகாராஜனுக்கும் பெயரன். சந்திரகுப்த மகாராஜாதிராஜனின் மகன். லிச்சாவி மன்னனின் மகள் வயிற்றுப் பெயரன். சந்திரகுப்த மகாராஜாதிராஜனுக்கு அரசி தத்ததேவியின் வழிப் பிறந்தவன். துருவதேவியின் வழிப் பிறந்த இவனது மகனே குமாரகுப்த மகாராஜாதிராஜன் ஆவான். மற்றொரு மகனாகிய ஸ்கந்தகுப்தன் தன் தந்தையிடம் மாறாத அன்பு கொண்டவன். இவன் தந்தையிடம் கொண்ட அன்பை, 'தாமரையினைச் சுற்றி வட்டமிடும் தேனீபோல' என்று அக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. இதனைக் குறிக்கும் 'மாதா பித்ருபாதானுத்யாத' என்ற தொடரை வட இந்தியக் கல்வெட்டுக்கள் பலவற்றில் காணலாம். தாய்தந்தையரின் பெயரைக் குறிப்பிட்டு இவ்வாறு எழுதும் முறை குப்தர் கல்வெட்டுக்களிலும் உள்ளது. இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக ஹர்ஷவர்த்தனரின் கல்வெட்டைக் கூறலாம். முதலில் ஸ்ரீதரவர்த்தன மகாராஜன் குறிக்கப்படுகிறான். இவனிடம் பக்தி கொண்டவனாக இவனது மகன் ஸ்ரீராஜ்யவர்த்தன மகாராஜன் விளங்குகிறான்.

வஜ்ரினிதேவியின் மகனாகிய இவன் சூரிய பக்தன் ஆவான். இவனிடம் பக்திபூண்ட இவனது மகனே ஆதித்யவர்த்தனன். அப்சராதேவியின் மகனாகிய இவனும் சூரிய பக்தனே ஆவான். இவனுடைய மகன் பரமபட்டாரகன் ஆகிய ஸ்ரீபிரபாகரவர்த்தன மகாராஜாதிராஜன் ஆவான். மகாசேனகுப்ததேவியின் மகனாகிய இவனும் சூரியபக்தனே. இவனுக்கு அரசி யசோமதியின் வழிப் பிறந்த பரமபட்டாரகன் ஆகிய ஸ்ரீராஜ்யவர்த்தன மகாராஜாதிராஜன் பௌத்த சமயத்தைக் கடைப்பிடிப்பவன். இவனது சகோதரனே பரமபட்டாரகனும், பரமமஹேஸ்வரனும் ஆகிய ஸ்ரீஹர்ஷ வர்த்தன மகாராஜாதிராஜன் ஆவான். இக்கல்வெட்டுக் குறிப்பில் இருந்து, ஒரே குடும்பத்தில் உள்ள பலரும், பரமஆதித்ய பக்தர்களாகவும், பரமசௌகதர்களாகவும், பரமமாஹேஸ்வரர்களாகவும், பரமபாகவதர்களாகவும் விளங்கினர் என்று அறிய முடிகிறது. குப்தர் பரம்பரையில் பலரும் விஷ்ணுவை வணங்கும் பரமபாகவதர்களே ஆவர். இவ்வாறு பரம்பரை கூறும் பகுதி வரலாற்றாசிரியர்களுக்கு மிகவும் துணை செய்வது. மன்னன் முடிசூடிய காலத்தையும், ஆணைகள் பிறப்பித்த காலத்தையும் இதன் வழி அறிகிறோம். ஒரே வரலாற்றில் மூன்று நரசிம்மவர்மர்களும், இரண்டு, மூன்று மாதவவர்மர்களும் வந்தாலும் கூட முன்னோரை வைத்து அம்மன்னனின் காலத்தினைத் தெளிவாக அறிய வாய்ப்புக் கிடைக்கிறது.

சிலநேரங்களில் கொடையளிக்கும் மன்னனின் பரம்பரை பற்றிய புராண வரலாறுகளும் கூறப்படுவது உண்டு. அப்பரம்பரை சூரிய குலம் என்றோ அல்லது சந்திர குலம் என்றோ குறிக்கும் போது, அவர்களைப் போற்றும் பாடல்கள் சிறப்பிடம் பெறும். சந்திரகுலம் பற்றிக் குறிக்கையில் சில இடங்களில், இலக்குமியோடு அவர் பாற்கடலில் தோன்றிய வரலாறு, 'அத்ரி'யில் இருந்து தோன்றிய வரலாறு, சிவனின் தலையில் அணியாக விளங்கும் அழகு ஆகியவை கூறப்படும். அற்புத மலையில் இருந்து 'வசிஷ்ட' தீயினின்று அப்பரம்பரைதோன்றியதாகப் புராண வரலாறு கூறப்படுதலும் உண்டு.

சில நேரங்களில், ஒரு குறிப்பிட்ட கடவுளோ அல்லது முனிவரோ இக்குலத்தவருக்கு நன்மை செய்ததாகச் சொல்லப்படும். இம்முறையினைச் சாளுக்கிய செப்பேடுகளில் காணலாம். கௌசிகி ஆகிய சிவனே அவர்கட்கு அரசினை நல்கியதாகவும், மகாசேனரிடம் இவர்கள் மாறாத அன்புடையவர்கள் என்றும் கூறப்படுகின்றனர். சப்தமாதர்களே அவர்களை காப்பதாகவும், பன்றிச் சின்னத்தை நாராயணனே தந்ததாகவும் அதனாலேயே வெற்றி மிகப் பெற்றதாகவும் குறிக்கின்றனர். மகேந்திர

மலையில் உள்ள கோகர்ண இறைவனின் பாதகமலங்களை வணங்குவதால் தமது குற்றங்கள் அனைத்தும் நீங்குவதாகக் கீழைக்கங்கர் தம் செப்பேடுகளில் எழுதி உள்ளனர். சிவலிங்கத்தை எப்போதும் தம் புயத்தில் ஏற்று இருத்தலால் பாரசிவர்கள் சிவனின் அன்பைப் பெரிதும் பெற்றுள்ளனர் என்று வாகாடகர் செப்பேடுகளில் குறிப்பு உள்ளது.

புராணத் தலைவர்களையே தம் குலமுன்னோராகக் கூறும் வழக்கமும் உள்ளது. சான்றாக இராஜேந்திரசோழனின் திருவாலங்காட்டுச் செப்பேட்டில் கரிகாற்சோழன் குறிக்கப்படுவதைக் கூறலாம். பெரும்முனிவர்கள், ஒரு குலத்தைப் புகழ்ந்து கூறுவதாகவும் குறிப்பு உண்டு. அவ்வழி அமைந்ததே பாண்டியரின் சின்னமனூர்ச் செப்பேடு ஆகும். இதில் அகத்திய முனிவரே பாண்டிய குலத்தைப் போற்றியதாகக் குறிப்புள்ளது. அவரே அக்குலத்தின் குருவாகவும் சுட்டப்படுகிறார். தமிழில் மன்னர்களின் வெற்றிகளைக் கூறும் பகுதி 'மெய்க்கீர்த்தி' என்று பெயர் பெறும். சோழ பாண்டிய மன்னர்களில் ஒவ்வொருவருக்கும் மெய்க்கீர்த்தி தனித்தனியே காணப்படுகிறது. ஒவ்வொரு வெற்றியை அடுத்தும் அவ்வெற்றி மெய்க்கீர்த்தியில் இணைக்கப் பெறும். இதுபோல வெற்றிகளை விரிவாக விளக்கும் சமஸ்கிருத அல்லது பிராகிருதப் பகுதி 'பிரசஸ்தி' என்று பெயர் பெறும். கௌதமிபுத்ர சாதகர்ணியின் நாசிக் கல்வெட்டிலும் காரவேலனின் ஹாதிகும்பாக் கல்வெட்டிலும் ருத்ரதாமனின் கிர்நார் கல்வெட்டிலும் சமுத்திரகுப்தனின் அலகாபாத் தூண் கல்வெட்டிலும் யசோதர்மனின் மாண்டசோர் கல்வெட்டிலும் உள்ள பிரசஸ்திகள் மிகவும் புகழ் பெற்றவை. இவற்றுள் முதலிரண்டும் பிராகிருதத்திலும், ஏனையவை சமஸ்கிருதத்திலும் அமைந்துள்ளன.

இதனை அடுத்துக் கல்வெட்டுப் பொறிப்பதன் காரணம் எழுதப்படும். கொடையினைப் பெறுபவரின் பெயரும் இடம்பெறும். கீழைச்சாளுக்கிய மன்னன் முதலாம் அம்மன், தனது படைத்தளபதிக்குத் தானம் கொடுத்ததை அவனது செப்பேடு கூறுகிறது. பண்டரங்கன் ஆன குண்டாதித்யன் என்னும் அத்தானைத் தலைவனை மன்னன் பாராட்டிச் சில ஊர்களுக்குத் தலைவனாக நியமித்ததை அது கூறுகிறது (S.I.I I p. 38). பலி, சரு போன்றவைகளை இறைவனுக்கு அளித்தல், தூபம், தீபம் போன்ற வழிபாடுகள் செய்தல், பூஜைகளை நடத்தல், நந்தவனங்களைப் பராமரித்தல், போன்ற திருப்பணிகளுக்காகக் கோயிலுக்கு நிலங்களைத் தானமாக அளிப்பதும் உண்டு. இசை வல்லவர்களைப் பாராட்டி, பெருமைப் படுத்தும் வகையில் பரிசாக நிலம் அளிப்பதையும் கல்வெட்டு மூலம் அறியலாம். வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் வல்லவர்களுக்கு பட்டவிருத்தி

அளிக்கும் செய்திகள் பரவலாகக் காணப்படுகின்றன. இவைகளில் பரிசு பெறுவோரின் பெயரும், அவரது கோத்ரமும், சாகையும், அவரது சிறப்பு இயல்புகளும் தவறாமல் எழுதப்படும். சில இடங்களில் அவருடைய பரம்பரை கூறப்படுவதும் உண்டு. கிரமபாடி, கனபாடி, யாஞ்ஞிகர், அக்னிஹோத்ரி, யஜ்வா, பவ்ருசசரணர், சதுர்வேதி, திரிவேதி, தீக்ஷிதர், த்விவேதி, ஸ்ரோத்ரியர், உபாத்யாயர் ஆகியன அவர் தம் சிறப்புக்களைக் குறிக்கும் அடைமொழிகளுள் சிலவாகும். பரிசிலைப் பெறுபவர் மாணாக்கராயின், ருக், யஜுர், சாமவேதம் இவற்றுள் எதைக் கற்பவர் என்பதும் தவறாமல் குறிப்பிடப்படும். வாஜசனேயம், தைத்ரியம், மாத்யந்தினம், கடம், கௌதமம் ஆகியன அவ்வாறு குறிக்கப்படும் சில சாகைகளாகும். வசிஷ்டம், பார்கவம், கௌதமம், வத்ஸம், பாரத்வாஜம், முட்கலம், சாண்டில்யம், கௌத்சம், காஸ்யபம், ஆகியவை அங்கு குறிக்கப்பட்ட சில கோத்திரங்களின் பெயர்கள் ஆகும். வேதத்தில் இப்பிரிவுகளை விரிவாக ஆய்வு செய்வோர்க்கு, இக்கல்வெட்டுக்கள் மதிப்பிடற்கரிய அருஞ்செல்வங்கள் எனலாம்.

மடம், கடிகை, கோயில் போன்ற குறிப்பிட்ட நிறுவனங்களுக்குக் கொடை அளிக்கப்பட்டதாக இருப்பின், அந்தந்த நிறுவனங்களுக்குப் பொறுப்புடைய ஊரார், சபையார், ஆகியோரைப் பற்றிய குறிப்பையும் காணலாம். கொடை அறக்கட்டளையாகவும் நிறுவப்படலாம். அந்நிறுவனத்தைப் பற்றிய விரிவான செய்திகள் அனைத்தும் அதில் இடம் பெறும்.

கொடைகள், சூரியகிரஹணம் சந்திரகிரஹணம் முதலிய புனித நாட்களில் அளிக்கப்படுகின்றன. எனவே அந்நாளைப் பற்றிய செய்தியும் குறிப்பிடப்படும். இக்குறிப்புக்கள், அவைகட்குச் சரியான கிறிஸ்தவாப்தத்தின் ஆண்டினையும், மாதத்தினையும் அறிய பெருந்துணையாக அமைகின்றன. மன்னனின் ஆட்சி ஆண்டு, பக்ஷம், திதி, நாள் ஆகிய அனைத்தும் பழைய பிராகிருதக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. கலிங்க மன்னன் காரவேலனின் கல்வெட்டில் நந்தர் ஆண்டு குறிக்கப்படுகிறது. அதுபோலவே குப்தர் கல்வெட்டுக்களில் குப்த ஆண்டும், மேலைச் சாளுக்கிய மன்னன் மங்களேசனின் பாதாமிக் கல்வெட்டில் சக ஆண்டும் உள்ளன. இடைக்காலத்துக் கல்வெட்டுக்கள் விக்ரம ஆண்டையோ அல்லது சாலிவாகன சகாப்தத்தையோ குறிக்கின்றன. கீழைக்கங்க மன்னர்கள் கங்க ஆண்டினைக் குறித்தனர். கங்க ஆண்டின் தொடக்கம் கி. பி. 5-ஆம் நூற்றாண்டாகும் என்று திரு வேப ராமேசம் (Vepa Ramesam) அவர்கள் நிறுவியுள்ளார். (Cedi) சேடி ஆண்டு, ஹர்ஷ ஆண்டு

போன்ற ஆண்டுகளும் குறிக்கப்படுவது உண்டு. இடைக் காலத்துக் கல்வெட்டுக்களில் இக்குறிப்பு மிக விரிந்த அளவில் இடம் பெறுகிறது. ருது, நாள் இவைகளுக்குப் பதிலாக, அயனம், மாசம், பக்ஷம், திதி, வாரம், நட்சத்திரம் ஆகியனவும், குறிப்பாக அந்நாளில் இருந்த கோள் நிலை பற்றிய குறிப்பும் குறிக்கப்பட்டது. இவையெல்லாம் வானியலார்க்கும் வரலாற்றாய்வாளர்க்கும் காலத்தை அறுதியிடப் பெரிதும் உதவுகின்றன.

இதற்குப் பின்னர் கொடைக்குரிய காரணம் எழுதப்படும். நிலத்தின் அளவுகளும், எல்லைகளும், நிலத்தைப் பற்றிய பிறகுறிப்புகளும் குறிக்கப் பட்டு உள்ளன. இந்த விளக்கத்தின் போது, அருகில் உள்ள சிற்றூர்கள், ஒட்டியுள்ள மரங்கள், கிணறுகள், ஏரிகள், கரைகள் ஆகியவற்றையெல்லாம் அறிய வாய்ப்புக் கிட்டும். கல்வெட்டு சமஸ்கிருதத்தில் இருந்தாலும் கூட, அந்தப் பெயர்கள் மட்டும் அங்கங்கு வழங்கும் மொழியிலேயே குறிக்கப் படும். மலையபூண்டி என்ற ஊரினைத் தானமாக அளிப்பதை ஒரு சாஸனம் குறிக்கிறது. அந்த ஊருக்குக் கிழக்கில் 'முன்சுன்யூரும்', தெற்கில் 'இனிமிலியும்' மேற்கில் 'கலவ கூரும்', வடக்கில் 'தருமவுரமும்' இருப்பதைத் தெலுங்கு மொழியில் எழுதியுள்ளனர். அவ்வூரில் உள்ள எல்லைகளையும் அவ்வாறே தெலுங்கிலேயே குறித்துள்ளனர். கிழக்கில் கொல்லங்கிகுண்டா குட்டையும், தென்கிழக்கில் ரவியபெரிய செரு என்னும் குளமும், தெற்கிலும், தென்மேற்கிலும் எல்லைக் கற்களும், மேற்கில் மல்கப் பற்றும் கொரபொயுதடாகமும், வடமேற்கில் எல்லைக் கல்லும், வடக்கில் தூரபச்செறுவு குளமும், வடகிழக்கில் கலவகூரைச் சார்ந்த எவ்வொக்கசெரு என்னும் நிலமும் இருப்பதாக அக்கல்வெட்டு மூலம் அறிகிறோம் (E. I. IX p. 56). இது போலவே, எடைகள், அளவுகள், பல்வகை வழிபாட்டு முறைகள், ஆகியவற்றையும் அந்தந்தப் பிராந்திய மொழியிலேயே எழுதியுள்ளனர். இடைக்காலக் கல்வெட்டுக்களில் குஜராத்தி (Ibid I. p. 271); மராத்தி (Ibid I p. 338) மொழிகளில் கூட இவ்வாறு எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். பியூலரும், கீல்ஹார்னும் இதனை அட்டவணைப்படுத்தித் தந்துள்ளனர் (Ibid I p 163).

கல்வெட்டுக்களின் இறுதியில், தானத்தை அழிப்பவர் அடையும் பாவம் ஒன்று அல்லது பல செய்யுட்களில் கொடுக்கப்பட்டிருக்கும். பிராகிருதக் கல்வெட்டுக்களில் இப்பகுதி மட்டும் சில நேரங்களில் சமஸ்கிருதத்தில் அமைவது உண்டு. பிறவற்றில் இவை சமஸ்கிருதத்திலும், தமிழ், தெலுங்கு, கன்னட மொழிக் கல்வெட்டுக்களில் அந்தந்த மொழி களிலும் சிறிய உரைநடையாகவே அமைந்திருக்கும்.

பழைய கல்வெட்டுக்களில் இப்பகுதி மிக எளிமையானது. 'இத்தர்மத்தை அழிப்பவன், பசுவையும் பிராமணனையும் கொன்ற பாவத்திலும், பஞ்சமாபாதகங்களிலும் போகக் கடவன்' என்று கூறப்பட்டுள்ளது.

य अच्छिन्धात्स गोबुहाहत्यया सयुक्तो भवेत पञ्चभिश्चचानन्तर्यैः (Fleet, C. I I. III p. 32). यश्चैनं धर्मस्कन्धं व्युच्छिन्द्यात् स पञ्चमहापातकैः संयुक्तः स्यादिति (Ibid p. 38-40). குப்தர் கல்வெட்டு ஒன்றில் பசு, பிராம்மணன் ஆகியோருடன் குருவினைக் கொன்ற பாவமும் இணைத்துக் கூறப்படுகிறது. (Ibid p. 71).

பல்லவ சிவஸ்கந்தவர்மனின் மயிதவோலு செப்பேடு, அத்தர்மத்திற்குக் கேடு நினைப்பவர், நரகத்தைச் சென்றடைவர் என்று கூறுகிறது. जो अम्ह सासनं अतिच्छितुना पीला वाधा करेज्जा वात कारापेज्ज वा तस अम्हो सारीरं सासनं करेजामो I. (E. I. VI p. 87; also Ibid VIII, p. 162 Simhavarman's Chorter Ibid VIII p. 235 in Kunaravishnu's copper plate, and Ibid III p 146 in Nandivarman's copper plate). ஒரு மன்னன் தன்னுட்சிக் காலத்தில் ஆணைகளை இடுவதும் அதைக் கடைப் பிடிக்கச் செய்வதும் மிகவும் எளிது. ஆனால் என்றென்றும் அறம் நிலைத்து நிற்றல் வேண்டும். எனவே அக்கொடையினைக் காக்க, இறைவனை வணங்கி வேண்டினர். பின் ஆளப்போகும் மன்னர்களை அதனைக் காப்பாற்றுங்கள் என்று வேண்டுவதும் கல்வெட்டுக்களில் உள்ளன. வெற்றிச் சிறப்பும், செல்வச் செழிப்பும் மிகுந்திருக்கும் மன்னர்கள் கூட, பின்வரும் மன்னர்களைக் கரம் கூப்பி வேண்டுகின்றனர். அயோத்திய மன்னன் இராமப்பிரபன், தனக்குப் பின் ஆளப் போகும் அனைத்து மன்னர்களையும் முன் ஆண்ட அரசர்கள் அளித்த தானங்களை காப்பாற்றுங்கள் என்று வேண்டிக் கொள்கிறான்.

சிவஸ்கந்தவர்மனைப்போலவே, குப்தமன்னன் பிரவரசேனனும் 'கொடை பெறுபவனுக்கோ, அல்லது கொடைக்கோ ஏதேனும் தீங்கு செய்தாலும் சரி; பிராம்மணர்க்கு துரோகம் செய்தாலும் சரி; தண்டனையும், தண்டமும் விதிக்கப் படுவார்' என்று தன் கல்வெட்டில் எழுதியுள்ளான். மேலும் "எனக்கு முன்னுண்ட மன்னர்கள் கொடுத்த தானத்தை நான் குறிக்கவில்லை ஏனெனில் அது தற்பெருமையாக முடியும்" என்றுங் கூறுகிறான். வருங்கால அரசர்கள் தான் அளித்த தானங்களைப் பாதுகாக்க வேண்டிக் கொள்கிறான். இங்கு வியாசர் தானங்களைக் காக்க வேண்டும் என்று கூறும் செய்யுட்கள் மேற்கோள்களாக குறிக்கப்படுகின்றன.

यश्चास्मच्छासनमगणयमानः स्वल्पामपि परिबाधां कुर्यात्कारयिता वा
तस्य ब्राह्मणैर्वेदितस्य सदण्डनिग्रहं कुर्याम । अस्मिञ्च धर्माधिकरणे-
अतीतानेकराजदत्तसंचिन्तनपरिपालनं कृतपुण्यानुकीर्तनपरिहारार्थं
न कीर्तयामः सकल्पाभियोगपराक्रमोपजातान्वर्तमानानाज्ञापयामः
एष्यत्कालप्रभविष्णुगौरवाद्भविष्यान्विज्ञापयामः—व्यासगीताश्चात्र
श्लोकाः—स्वदत्तां परदत्तां वा यो हरेत वसुन्धराम् । गवां शतसहस्रस्य
हर्तुर्हरति किल्बिषम् ॥

கொடை பெறுபவனுக்கு எவ்விதத் தீங்கும் இழைக்கப்படுதல் கூடாது என்பது மன்னர்களின் எண்ணமாக இருந்தது. அதனை நிறைவேற்றுவதற்காகவே பல நிவந்தங்களையும் கொடுத்துள்ளனர். கொடையளிக்கப்பட்ட சில நிலங்களின் வழியாக எவரும் நடக்கக் கூடாது என்றே விதிக்கப்பட்டிருந்தது (Ep. I XII p. 36, பிளீட், C. Inscr. Ind III, P. 98. and Ep. I XII p. 141) இந்நிலங்கள் अचाटभटप्रवेश्य என்று குறிக்கப் படுகின்றன. தவிர சில இடங்களில் போர்ப்படையினர் கூட அந்நிலத்தில் வழி அமைத்துக் கொள்ளக் கூடாது என்ற விதி அமைக்கப்பட்டது. (Ibid VI p. 87) ஒரு கல்வெட்டில் காற்றைக் கூட அனுமதிக்கக் கூடாது என்று உயர்வு நவிற்சியாக இச்செய்தி கூறப்படுகிறது. இங்கு இராமாயணத்தில் அனுமன் கூறும் இலங்கை வருணனை நினைவு கூரத்தக்கது वायुरप्यत्र नाज्ञातश्चरेदिति मतिर्मम (இராமாயணம் V. pp 2-44).

இதுபோல, தீங்கை ஒடுக்கும் பொருட்டு கூறப்பட்ட பழிச் சொற்கள் அதிகமாகின்றன. பிழை செய்வோருக்கு வரும் பாவங்கள் பல வகையாகக் கூறப்படுகின்றன. வியாசரின் கருத்துக்கள் சிறப்பாகக் குறிக்கப் படுகின்றன. சகரனைப் போன்ற பல மன்னர்கள் கொடையளித்திருக் கின்றனர். பலர் அக்கொடைகளைக் காத்திருக்கின்றனர். அதனால் வரும் புண்ணியங்களையும் அனுபவித்திருக்கின்றனர். பூமிதானம் அளிப்பவருக்கு 60000 ஆண்டுகள் சுவர்க்கத்தில் வாழும் பேறு கிட்டும். அதே நேரத்தில் அழிப்பவனுக்கு நரகம் கிடைப்பது உறுதி. பிரம்மதேயங்களுக்குக் கேடு செய்வார், விந்திய மலைக்காடுகளில் கருநாகங்களாகப் பிறந்து, குடிக்கத் தண்ணீர் கூடக் கிடைக்காமல், உலர்ந்த மரப்பொந்துகளில் மடிய வேண்டிய நிலை வரும்.

बहुभिर्वसुधा दत्ता बहुभिश्चानुपालिता । यस्य यस्य
यदा भूमिस्तस्य तस्य तदा फलम् ॥ षष्टि वर्षसहस्राणि स्वर्गे
मोदति भूमिदः । अच्छेत्ता चानुमन्ता च तान्येव नरके वसेत् ॥—
विन्ध्याटवीष्वतोयासु शुष्ककोटरवासिनः । कृष्णाहयो हि
जायन्ते ब्रह्मदेयापहारकाः ॥ E.I. VI P 211

இறுதியில் இணைகின்ற இத்தொடர்கள் மேலும் மேலும் வளர்ந்து கொண்டேபோயின. அதில், வேதத்தினின்றும், தர்மசாஸ்திரங்களினின்றும் சான்றுகளும் எடுத்தாளப்பட்டன. 'இறைவனால் படைக்கப்பட்ட ஒவ்வொரு பொருளும் நூறுநூறாகவும், ஆயிரமாயிரமாகவும் பெருகும்' என்று வேதம் கூறுதல் போல, கொடைப்பயனும் தொடர்ந்து பரம்பரை தோறும் பெருகும் என்று கூறப்பட்டது. கொடை பெற்றவன் முழுவதுமாக துய்த்தல் வேண்டும். ஆதலின் தர்ம சாஸ்திரங்களின் பெயராலும், மன்னனின் பெயராலும், அவனுக்கு எவராலும் தீமை வாராதிருக்க ஏற்பாடு செய்யப்பெற்றது. கொடையைப் போற்றிக் காப்போருக்கு வீடும், தூற்றி அழிப்போருக்கு நரகமும் கிடைக்கும் என்றும் எழுதி வைக்கப் பெற்றது. தானே கொடையளித்தலை விட, பிறன் கொடுத்த கொடையைப் போற்றிக் காப்பதில் பெரும்பயன் கிடைக்கும். ஆயிரம் அசுவமேத யாகங்களாலும், நூறு வாஜபேயங்கள் செய்வதாலும் எண்ணற்ற பௌண்டரிக வேள்விகளாலும் பெறும் பயன்களையும், கொடையைக் காக்கும் செயலால் பெற்றுவிட முடியும். இவ்வாறு செய்வதால், பதினொரு தலைமுறைகளாக நரகத்தில் வேதனையுறும் முன்னோர்களும் கூட, அதனின்று வீடுபெற்று, எல்லையில்லா இறைவன் அருளுக்குத் தகுதி பெறுவர். மாறாகத் தன்னாலோ, பிறராலோ அளிக்கப்பட்ட கொடையைக் கெடுப்பவன், இம்மண்ணில் புழுவாய்ப் பிறந்து, தன் முன்னோருடன் இணைந்து நொந்து உழல நேரும். கொடைப் பொருளின்று, ஒரு பசுவையோ அல்லது ஒரு காசையோ, ஏன் ஓர் அங்குல நிலத்தைக் கொள்ள எண்ணினால் கூட, ஊழிக்காலம் வரை நரகத்தில் வேதனையுற வேண்டும். அனைத்து வகையிலும் மிகச் சிறந்தது நிலக்கொடையே ஆகும். அது நிறைந்திருக்கும் பாவங்கள் அனைத்தையும் போக்கவல்லது. பதினொரு தலைமுறைகளாக நரகத்தில் உழலும் முன்னோர்களும் கூட, நிலக்கொடையின் பயனால், பாம்பு தன் சட்டையை உரித்துக்கொண்டு வெளிப்படுதல் போல, வெளியேறி நிம்மதி பெற இயலும். கொடையளிப்பவரோடு சேர்ந்து இருபத்து நான்கு தலைமுறை முன்னோர்கள் கூட, தாம் சேர்த்த பாவங்களின்றும் விடுபெற்று வீடுபேற்றை அடைவர். காப்பதன் பயன் இவ்வாறாக, கெடுப்பவனே பெற்ற

புண்ணியங்கள் அனைத்தையும் இழக்கிறான். நிலத்தைக் கொள்ளை யடிப்பதனால் வரும் கேட்டினை, தானே முன்னின்று ஆயிரம் அஸ்வமேதங் களையும், நூறு வாஜபேயங்களையும், பன்னூறாயிரம் பசுக் கொடைகளையும் செய்தால் கூடத் துடைக்க இயலாது. கல்லையும், இரும்பையும், நஞ்சையும் உண்டால் கூட பிழைக்கலாம். ஆனால் கொடையைக் கெடுப்பவன் பிழைத் தல் அரிது. பொய்மையான தவத்தாலும், பெருமை காரணமாகவும் செய்யப் பெறும் வேள்விகளால் மட்டும் பயன் பெற இயலாது. நிலக்கொடை யில் மோசம் செய்யும் ஒருவனின் பரம்பரையே கீழுலகம் சென்றுவிடும்.

வாழ்க்கை நிலையற்றது; புல்நுனியில் பனி போன்றது; நீர்மேல் குமிழியொத்தது; இதையுணர்ந்து என்றும் நன்னடத்தையும், நற்செயலும் கொண்டிடல் வேண்டும். முனிவர்களிடமும், தேவர்களிடமும், வேதங்களும் ஸ்மிருதிகளும் சென்று 'கொள்ளையிடும் கொடுமை காணீர்' என்று ஓல மிடும். எனவே கொள்ளையிடாதீர்! கொள்ளையிடாதீர் நிலங்களை!! ஒரு குடம் நீர் முழுதும் ஒரு துளி எண்ணெய் பரவுதல் போல, நிலக் கொடையின் பயன் விரியும். முன்னோர்களின் வெள்ளையுள்ளமும், நல்ல எண்ணங்களும், கொடையுள்ளம் கொண்டோன் பிறக்கக் காரணம் ஆகிறது. அவனே அக்குலவிளக்கு. ஆதித்தன், வருணன், திருமால், பிரம்மா, சோமன், அக்னி, சிவன் ஆகிய அனைத்துத் தெய்வங்களும் போற்றும் தலைமகன் அவன். நிலத்தை அளிப்போனும், பெறுவோனும் ஆகிய இருவருமே உயர்நிலை பெறுவர். வாழ்க்கையின் நிலையையும். அதில் வரும் வாய்ப்புக்களையும் உணர்ந்து, தாமரையிலைத் தண்ணீராய் வாழப்பழகிக் கொண்டு, மனிதன் என்றும் கொடையினை அழிக்கும் எண்ணம் இன்றி வாழ்தல் வேண்டும் (Ibid XII pp 324-325).

ஹர்ஷவர்த்தனன் போன்ற பண்டைக்கால மன்னர்களின் செப்பேடு கள் சிலவற்றில் ஊழின் இயற்கையைக் குறிக்கும் பாடல்கள் இடம் பெறுகின்றன. அதற்கு முன்னால், மன்னன் தனக்குப்பின்னால் அரசேற்க வருவோரை வேண்டுவதாகச் சிலவரிகள் உள்ளன. 'நம் பரம்பரையின் புகழை யும் நேர்மையையும் மனதில் கொண்டு கொடைகளைப் புரப்பதும், 'நம் முன்னோர் செய்த கொடைகளைப் பெருக்குவதும் உன் கடமை' என்பதாக அவை அமைகின்றன. 'முன்னோரின் பெருமையைத் தனதாக்கிக் கொள் ளும் இலையோன் அவர் தந்த கொடையினையும் காத்தல் வேண்டும்; பிற மன்னர்களும், கொடையினைக் காப்பதால் வரும் பயனே என்றும் நிலைக்கும் என்பதை உணர்ந்தும், வாழ்க்கை மின்னலும், நீர்க்குமிழியும் போல கணத்தில் மறையும் என்பதை மனதிற்கொண்டும் காத்தல் கடன்' என்றும் அவை குறிக்கின்றன (Ibid IV p. 211).

எழுத்தச்சர்
(SCRIBES)

எகிப்தில் கிடைத்த மிகச் சிறப்பான சிற்பங்களில் ஒன்று மரத்தாலானது. இது 'தீப்ஸ்' என்ற இடத்தில் கிடைத்தது. தற்போது கெய்ரோ அருங்காட்சியகத்தில் உள்ளது. இது மிகவும் தொன்மையான ஒரு எழுதுபவனின் சிற்பம் ஆகும். பண்டைய உலகில் எழுத்துக்களை எழுதுவோர் மிகச் சிறந்த இடம் பெற்றிருந்தனர். இவர்கள் மிகவும் கவனத்துடனும், எழிலுடனும் எழுத்துக்களை எழுதினர். சாதாரண மக்கள் நன்கு எழுதப் படிக்கத் தெரிந்திருந்த போதிலும்கூட அவர்களது எழுத்துக்களைக் காட்டிலும் எழுத்தோவியருடைய எழுத்துக்களே அழகாக அமைந்தன. இதற்குச் சாணக்கியரின் உரையே சான்று. அவரைப் போன்ற வேதம் படித்தவர்கள் சிரமப்பட்டு கவனமாக எழுதினாலும் கூட அழகாக இருக்காது.

श्रोत्रियाक्षराणि प्रयत्नलिखितान्यपि नियतमस्फुटानि भवन्ति

முத்ராராக்ஷசம், முதல் அங்கத்தில் இக்குறிப்பு உள்ளது. அவருக்கு எழுத எழுத்தச்சர் ஒருவரின் உதவி தேவைப்பட்டது. இறுதியாக எழுதப் பெற்ற சுவடி அவரிடம் வந்தபோது அந்த எழுத்துக்களின் அழகில் மயங்கினாராம். अहो दर्शनीयान्यक्षराणि (Ibid அங்கம் I). மிகச்சிறந்த கைத்திறன் படைத்தோர் சில இடங்களில் இவ்வெழுதும் பணியை ஏற்பர்.

அலுவலக ஆவணங்கள் பயிற்சி பெற்ற எழுத்தோவியர்களால் விரைவில் அழிந்து போகக்கூடிய ஓலைகளிலும்,பட்டைகளிலும், துணியிலும் எழுதப் பெற்றன. இவர்கள் 'லேக்ககர்' (எழுதுவோர்) என்று அழைக்கப்படுவர். ஆனால் அருமையான வேலைத்திறன் கொண்ட சிலர், அரண்மனைகளில் மன்னனின் சிறப்புப் பணியாளர்களாகவும் பணி செய்வர். அவர்கள் 'இராஜலேக்ககர்' என்னும் பெயர் பெறுவர். அமராவதியில் ஒரு அழகிய சிற்பத்தைக் கொடுத்தவர் இராஜலேக்ககர் என்று குறிக்கப்படுகிறார். இராஜலேக்ககர் (எழுத்தச்சர்) சிற்பம் ஒன்றும் நாகார்ஜுன கொண்டாவில் கிடைத்துள்ளது.

படம் 18

சித்தார்த்தர் பிறந்த போது அவரது எதிர்காலத்தை அறிய ஆவல் கொண்டார் அவரது தந்தை சுத்தோதனர். சோதிடர்கள் வரவழைக்கப்பட்டனர். கணித்து அவர்கள் கூற, குழவியின் ஜாதகத்தையும், பலன்களையும் எழுதினுர் இராஜலேக்ககர். அந்தக் காட்சி கல்லில் வடிக்கப்பட்டுள்ளது. நாகார்ஜுன கொண்டாவில் இடக்கையில் ஓலையினைப் பிடித்து மடிமீது வைத்துக் கொண்டு, வலக்கையில் பெரிய அழகிய இரும்பாலான எழுத்தாணி பிடித்து எழுதும் நிலையில் அவரது உருவம் எழிலுடன் திகழ்கிறது. இவர்கள் 'இராஜலிபிகாரர்' என்றும் அழைக்கப்பட்டனர். சாஞ்சியில் உள்ள கல்வெட்டு ஒன்றில் 'சுபாகித கோதிபுத்தர்' என்ற ஒருவர் இவ்வாறு குறிக்கப்படுகிருர் (எபிகிராபிகா இண்டிகா II பக்கம் 102). 'சபடம்' என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டே இத்தகைய அரண்மனை எழுத்தச்சர்களைப் பற்றிய முதற் குறிப்பைத் தருகிறது. அக்கல்வெட்டு லிபிகாரர் என்றே அவர்களைக் குறிக்கிறது. அந்த எழுத்தச்சரே அசோகரது பிரம்மகிரி, சித்தபுரம் கல்வெட்டுகளை எழுதியவர் ஆவார் ஹுல்ஷ் (Inscri Ind I p. 176).

லிபிகாரர்கள் எழுதிய கல்வெட்டுக்களைக் கொண்டு காணுமிடத்து, அவர்களுடைய ஆற்றல் சிறப்பிடம் பெறுகின்றது. அவ்வெழுத்துக்களை எழுதிய பெருமையும் அவர்களையே சாரும். கௌடதேசத்தில் சூக்ஷ்ம சிவர் என்பார் சிறந்த எழுத்தோவியராகத் திகழ்ந்தார். அவரே ஆதித்ய சேனனின் 'அப்செட்' கல்வெட்டினைப் பொறித்தவர். தன்னுடைய எழுத்துக்களின் அழகினை அவரே சிறப்பித்துக் கூறுகின்முர் विकटाक्षर (Feet c. Inscri Ind. III p. 205). நரேந்திரமிருகராஜன் என்னும் கீழைச் சாளுக்கிய மன்னனின் சாசனத்தை வடித்த எழுத்தச்சன் 'அக்ஷரலலிதாச்சார்யன்' என்ற சிறப்புப் பட்டம் பெற்றவன். அவன் விஜயவாடாவைச் சார்ந்தவன் (S. Ind. Ins. II p. 36). இந்திய மொழிகள் அழகிய தெளிவான எழுத்துக்களை முத்துக்கள் என்றும், வைரங்கள் என்றும் புகழ்ந்து கூறுகின்றன. இவ்வாறு எழுத்துக்களின் சிறப்பைக் கூறும் கல்வெட்டு ஒன்று புவனேஸ்வரில் கிடைத்துள்ளது.

सूत्रकारः शिवकरः सद्वृत्तामक्षरावलीम् ।
निचखान शिलापट्टे मुक्ताफलनिभामिव ॥

(Epi Indica VI p. 202-203)

மகீதரன் என்ற எழுத்தச்சன் தன் எழுத்துக்களை வானத்து விண் மீன்களுக்கு ஒப்பிடுகிருன் (Ibid II p 13). விசாலன் தன்னுடைய

எழுத்துக்களை மிக அழகியவை என்று குறிப்படுகிறான் (Ibid II p. 46). மதுராவைச் சார்ந்த வாசு என்ற எழுத்தோவியன் தன்னுடையவை தெளிவான எழுத்துக்கள் என்பதை माथुरो . . वासू लिलेख विमलाक्षरैः (Ibid IX p. 46) என்றே எழுதி விடுகிறான். சாகிலன் என்ற சூத்ரதாரன் (எழுத்தச்சன்) தன்னுடைய எழுத்துக்களைக் கல்வித் தெய்வமாகிய சரஸ்வதிக்கே ஒப்புமையாக்குகிறான். उत्कीर्णा सूत्रधारेण साहिले न स्फुटाक्षरा । चित्राङ्ग्वायप्रवर्णा सरस्वतीव साभते (Ibid IX p. 254). தன்னுடைய எழுத்துக்கள் மிக மென்மையானவை என்று வசந்தகார் கல்வெட்டைப் பொறித்த நாக முண்டி என்ற எழுத்தச்சர் கூறுகிறார். प्रभाति मृदुभिर्वर्णैः प्रोत्कीर्णानागमुण्डिना (Ibid IX p 192). கன்னோஜி மன்னன் கோவிந்தசந்திரதேவனின் செப்பேட்டை வடித்த ஓவியனாகிய ஜல்ஹனன், தன்னைத்தேவர்தம் எழுத்தோவியனை சித்ரகுப்தனுடன் ஒப்பிட்டு மேலும் தான் அத்தொழிலை மிக எளிதாகவும், மகிழ்ச்சியுடனும் செய்வதாகவும் கூறுகின்றான். करणीकोज्ञतो विद्वान् चित्रगुप्तोपमो मुणैः । यशसे जल्हणः श्रीमानलिखत्ताम्रकं मुदा ॥ (Ibid VIII p. 153). மதனனால் எழுதப்பட்ட பாரிஜாதமஞ்சரி என்ற நாடகத்தின் இரு அங்கங்கள் கல்வெட்டுக்களின் மூலம் கிடைத்தது. மிகத் தெளிவான எழுத்துக்களில் அமைந்த இக்கல்வெட்டு மிகச் சிறந்த சிற்பியாகிய சீகாகரின் மகனாகிய ராமதேவனால் எழுதப்பட்டது. रूपकारप्रकाण्डस्य सीहाकस्याङ्गजन्मना (Ibid VIII. p. 117). மிகச் சிறந்த எழுத்துக்களை எழுதிய கலைஞராகிய கர்ணபத்ரரை, பெரிய அறிஞராகவும், மதிப்பிற்குரியவராகவும், திறனுடையவராகவும் காட்டுகிறது மற்றொரு கல்வெட்டு कर्णभद्रेण भद्रेण शिल्पिनानल्पबुद्धिना । ताम्रं चिनयनभ्रेण निर्मितं साधुकर्मणा ॥ (Ibid 11 p. 354) கன்னட நாட்டைச் சேர்ந்த சோவரசி என்ற சிற்பி, தன் திறமை குறித்து மிகவும் பெருமைப் படுகிறார். "சோவரசி எழுதுகின்ற எழுத்துக்களின் ஊடே யானையும், சிம்மமும், கிளியும் நடமாடும் அழகினைக் கண்ட எவரும் அச்சிற்பியிடம் பொறாமையுடன் போட்டியிட எண்ணுவர்' என்பது அவர் வாக்கு (E. C. XI cd 47). அது நூற்றுக்கு நூறு உண்மையே என்பதை, அதைப் போன்ற வேறு சில கன்னடக் கல்வெட்டுக்களை நாம் காணும் போது உணரலாம் (படம் 14). தனது அருமைக் காதலியை ஒன்றிய



படம் 14

உள்ளத்துடன் பல வண்ணம் கூட்டி அழகுற எழுதிப் பார்க்கும் காதலனுக்குத் தன்னை ஒப்பிடுகிறான், சோமேஸ்வரன் என்னும் சிற்பி. அச்சிற்பி தன் சொந்த அனுபவமாக இறுதியில் இதனையும் எழுதுகின்றான்,

शिल्पविन्मागधः कामी तन्मना वर्णमक्तिभिः ।
सौमेश्वरोऽलिखदिमां प्रशस्तिं स्वामिव प्रियाम् ॥

(E. I. XIII p. 292).

தாளகுண்டாக் கல்வெட்டு மிக அழகிய கல்லெழுத்துக்களுக்குச் சிறந்த எடுத்துக் காட்டு. அதைப் பொறித்த சிற்பியாகிய குப்ஜனே அக் கல்வெட்டு வாசகத்தையும் ஆக்கியவன் ஆவான். कुब्जः स्वकाव्यमिदमश्मतले लिलेख (Ibid VIII p. 33).

எழுத்தச்சர்கள், தாம் பொறிக்கும் கல்வெட்டுக்களில் எழுத்துக் குற்றங்கள் வராதிருக்கப் பெரிதும் விரும்புவர். சொற்கள் விடுபட்டோ அல்லது மிகுந்தோ வந்துவிட்டால் கூட, கல்வெட்டின் சரியான பொருள் அமைதியினை காப்பதில் கவனம் செலுத்துவர். ऊनाक्षरमधिकाक्षरं वा सवमत्रप्रमाणमिति (Ibid XII p. 203). கல்வெட்டினைப் படிப்போரை ஏதேனும் சொற்குற்றம் வரின் அதனைப் பொறுக்குமாறு இவர்கள் வேண்டுவதும் உண்டு భ్రాంత తప్పు పట్టకేడు (S. I. I. IV p. 214).

இந்நிலையில் எழுத்துக்களைப் புரிந்து கொள்ளவே இயலாதவாறு எழுதப்பட்ட கல்வெட்டுக்களும் உண்டு. பில்ஹணரின் விக்ரமாங்க தேவசரிதத்தில் இருந்து ப்யூலர் ஒரு குறிப்பைத் தருகிறார். கிறுக்கலான கோணலான எழுத்துக்களை எழுதுவதால் தன்னை ஏமாற்ற முடியாது என்று ஆரியமதி என்னும் அரசி கூறுவதாக அதில் குறிக்கிறார். कायस्थैः कुटिललिपिभिः (ப்யூலர் I Anti XXXIII p. 50). கிறுக்கலான எழுத்துக்களைப் படிப்பது அரிது. அதனைப் புரிந்து கொள்வதே செயற்கருஞ் செயலாகக் கருதப்பட்டது. कुटिलाक्षराणि विदुषा. பிரின்ஸெப் அவர்களால் 'குடிலலிபி'. என்றே ஒரு எழுத்து குறிக்கப்படுகின்றது. ஆனால் அது குட்டையான தெளிவற்ற எழுத்துக்களால் ஆனது அல்ல, மாறாகச் சிறந்தவையே. சிலவிடங்களில் மிகவும் அலங்காரமாக எழுதப்பட்ட எழுத்துக்கள் மிகுந்த குழப்பத்தை அளிப்பதோடு, கண்ணுக்கும் பெரிதும் வேலையினைக் கொடுக்கும். அதில் உள்ள வளைவுகளும், கோடுகளும் அத்தகைய திறன் படைத்தவை.

கௌடதேசத்தைச் சார்ந்த தக்ஷாதித்தன் என்ற எழுத்தோவியன் இத்தகைய எழுத்துக்களில் மிகுந்த பயிற்சியுடையவன் என்று அறிகிறோம். लिखिता गौडेन करणिकेनैषा । कुटिलाक्षराणि विदुषा तक्षादित्याभिधेयेन ॥ (E. I. I p. 81) அழகிய எழுத்துக்களைக் கொண்ட தேவ்பாராக் கல்வெட்டினைப் பொறித்த சூலபாணி, தன்னை வாரேந்திரத்து எழுத்தோவியர்களில் தலைசிறந்தவன் என்று கூறிக்கொள்ளுகிறான். बृहस्पतेः सूनुरिमां प्रशस्तिम् । चखान वारेन्द्रकशिल्प गोष्ठीचूडामणी राणकशूलपाणिः (Ibid I p. 311) மதனவர்மனின் மௌ கல்வெட்டு, சுவடியில் இருந்த மெய்க்கீர்த்தியினை மீண்டும் கல்லில் தெளிவாக எழுதிய செய்தியினைக் குறிப்பிடுகிறது. (Ibid I p. 197).

பொதுவாக மன்னன் தன் ஆணையினை வாய்மொழியாகக் கூறுவான் அதனை உயர் அரசு அதிகாரிகளான ஆமாத்யர், இரகசிகர், பலாதிக்ருதர், சந்திவிக்ரஹர் முதலியோருள் ஒருவர் எழுதிக் கொள்வர். எடுத்துக் காட்டாக, ஹர்ஷர் கூற அவரது சந்திவிக்ரஹராகிய அவந்தி எழுதிக் கொண்டதையே கூறலாம் (ஹர்ஷசரிதம் p. 217). புலவர் இயற்றிய மெய்க்கீர்த்தியை மன்னர் பார்த்து ஏற்றுக் கொண்ட பின்னர், கரணிகர், காயஸ்தர், லேக்ககர் அல்லது லிபிகாரர் தெளிவாக எழுதிக் கொள்வர். அடுத்து, தேர்ந்த சூத்ரதாரர் அல்லது ரூபகாரர் அல்லது தக்ஷர் அல்லது சிற்பியால் செப்பேட்டிலோ, கல்லிலோ பொறிக்கப்படும். தாளகுண்டாக் கல்வெட்டைச் சிற்பியே எழுதியும், பொறித்தும் வைத்தது போல ஒருவரே இரு செயல்களையும் செய்வதும் சில இடங்களில் உண்டு.

இவ்வாறு கல்வெட்டுக்களைப் பொறிக்கும் சிற்பிக்கு உரிய முறையில் வெகுமதியும் அளிக்கப் பெறும். அப்பரிசைப் பெறுவோர் பொறித்தவரா அல்லது வாசகத்தை இயற்றியவரா என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள இயலவில்லை. பாண்டியன் நெடுஞ்சடையனின் வேள்விக்குடிச் செப்பேடு, யுத்தகேசரி பெரும்பணைக்காரன் என்பவன், ஒரு மனையும் 2 மா நன்செய்யும் ஒரு புன்செய்யும் பரிசாகப் பெற்றான் என்று குறிப்பிடுகிறது (E. I. XVII p. 304).

அணி செய்யப்பெற்ற எழுத்துக்கள்
(Ornamental Characters)

எழுத்தாற்றலில் சிறந்த ஓவியர்கள், ஒவ்வொரு எழுத்திற்கும் அழகிய வடிவங்களை அளித்தனர். ஏழாம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற பல்லவர்தம் நாகரி எழுத்துக்கள் தனித்தன்மை கொண்டவை. அதே

சிறப்பை 12 அல்லது 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த போசளர்களின் கன்னட எழுத்துக்களும் பெறுகின்றன. கீழைச்சாளுக்கியர்களும் பத்தாம் நூற்றாண்டில் மிகஅழகிய எழுத்துக்களைக் கையாண்டனர். எனினும் இவையெல்லாம், அலங்காரமாக எழுதப்பெறவில்லை. இயற்கையான அழகிய எழுத்துக்கள், அவ்வளவே. ஆனால் இந்தியக் கல்வெட்டுக்களில், அலங்காரத்திற்குச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டு இருப்பதையும் பல இடங்களில் நாம் காணலாம். அழகிய அணிசெய்யப்பெற்ற எழுத்துக்களும், எளிமையான எழுத்துக்களும், ஒரே இடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு ஹர்ஷவர்த்தனனின் பன்ஸ்காராச்செப்பேடு ஒரு சான்றாகும். இதில் செய்திகள் அனைத்தும் எளிய தெளிவான எழுத்துக்களால் எழுதப் பட்டிருக்க, அரசனின் கையொப்பம் மட்டும் மிகஅலங்காரமாக எழுதப் பட்டுள்ளது. இதற்கு அடிப்படை அழகுணர்ச்சியே. காஞ்சியில் உள்ளது கைலாசநாதர் கோயில். அங்கு பல்லவமன்னன் இராஜசிம்மனின் பல்வேறு பட்டப்பெயர்கள் இருவகையான எழுத்துக்களில் அடுத்தடுத்து எழுதப் பட்டிருப்பதைக் காண்கிறோம். 15-ஆம் படத்தில் இருவகை எழுத்துக்



படம் 15

படம் 16

களையும் காணலாம். 16-ஆம் படத்திலுள்ளது முன்னால் உள்ளதிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி. ஒரேயொரு பட்டப்பெயர் அதில இடம் பெறுகிறது. அழகிய வளைவுகளும் கோடுகளும் இருப்பதுமட்டு

மின்றி மயிலின் கழுத்தும், தோகையுமாக இணைந்து எழில் கூட்டுவதை இவ்வெழுத்துக்கள் பறைசாற்றுகின்றன. இத்தகைய நிலையில், அரும் திறமை வெளிப்படுவதோடு, கண்ணுக்கு விருந்தாகவும் அமைகிறது. மத்திய இந்தியாவில் இராஜீம் என்ற இடத்தில் இராஜீவலோச்சனர் ஆலயம் உள்ளது. அங்கு ஸ்ரீபூர்ணாதித்தன் என்ற மன்னனின் பெயர் இத்தகைய ஓவியஎழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளது. (படம் 17) வேறுபாடான பல் வேறு கோடுகள் இதில் இருப்பதால் இதனைப் படித்துப் புரிந்துகொள்ள இயலாத நிலையிலுள்ளது. எனினும் அருகிலேயே அதே எழுத்துக்களை எளிய முறையிலும் எழுதிப் பார்த்தல் வேண்டும். அதனோடு ஒப்பிட்டு இவ்வெழுத்துக்களைப் புரிந்து கொள்வது எளிது. இதனை வெற்றி

படம் 17

கரமாகச் செய்து முடித்தவர் திரு கன்னிங்ஹாம் அவர்கள் (Arch. Sur. I. Rep. XVII pl. x p. 19 pl. x). மேலைச்சாளுக்கியர் எழுதிய கன்னட எழுத்துக்களில் இவ்வழகினைப் பருகலாம். நான்காம் சாளுக்கிய சோமேஸ் வரனின் குர்காட் கல்வெட்டு ஒரு நல்விருந்து. இறைவணக்கப் பாடல்களில் வருகின்ற அனுஸ்வரங்களையெல்லாம், எழுத்துக்களின் மேலே நட்சத்திரங் களாகத் தீட்டியுள்ளான். எழுத்துக்களை ஏற்ற இடங்களில் எல்லாம் மிருகங்கள் போலவும், பறவைகள் போலவும் வரைந்துள்ளான். அவற் றுள் ஒன்று அன்னமாகவும், மற்றொன்று மயிலாகவும் மிளிர்கின்றது. இதனைத் திரு. பிளீட் அவர்கள் 'பறவை எழுத்துக்கள்' என்று குறிப்பிடு கின்றார் (Ind. Ant. XV p. 364). இத்தகு கல்வெட்டுக்களை எழுது கின்ற ஓவியன் உண்மையிலேயே பெருமைக்குரியவனன்றோ! மாமல்ல புரத்திலும், பிறவிடங்களிலும் அமைந்த பல்லவகிரந்த அலங்கார எழுத் துக்களின் அருகிலேயே அதன் எளியவடிவமும் எழுதப்பெற்றுள்ளது. இத்தகைய எழுத்துக்கள் புரிந்துகொள்ளக்கூடிய நிலையிலேயே உள்ளன, ஆனால் 'சோழி எழுத்துக்கள்' என்று அறிஞரால் அழைக்கப்படும் வகை இதற்குப் புறனடையாகும். மத்திய இந்தியாவில் உள்ள இவ்வகைக் கல் வெட்டுப் பகுதி ஒன்றைப் படம் 18-இல் காணலாம். இதே முறை எழுத்துக்கள் ஜாவாவிலும் உள்ளன. திரு ஜெயஸ்வால் அவர்கள் அவற்றுள் ஒன்றினைப் 'பூர்ணவர்மன்' என்று படித்துள்ளார் (Ep. I. XXII p. 4).

படம் 18

அயல்நாட்டுக் கல்வெட்டுக்களில் இந்தியச் சாயல்
(Influence of Indian Epigraphy Abroad)

இந்திய நாட்டில் நீண்ட ஆறுகள் உண்டு. உயர்ந்த மலைகள் உண்டு. இவைகளால் பல்வேறு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டதே நம் நாடு. எனினும், அவைகளினூடே மாறாத ஒற்றுமையும் உண்டு. வேற்றுமைகளின் ஊடே இழையாய்ப் பரவி நிற்பது இந்தியக் கலாச்சாரம் என்னும் பண்பு. ஒரே வகையான கருத்துக்கள், உயர்ந்த எண்ணங்கள், ஆன்றமைந்தடங்கிய நம்பிக்கைகள். இவைகளே இந்தியாவை இணைக்கும் இரும்புத் தண்டவாளங்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், போக்கு வரத்து வசதிகள் இல்லை. எனினும் பொதுமை எண்ணங்கள் இணைத்தன. பிற்காலத்துவேறுபாடுகள் வந்தன. பெரிய மலைகளும், நீண்ட ஆறுகளும் தராத பிளவை, வேறுபட்டஉள்ளங்களும், மாறுபட்ட மன்னர்களும் உண்டாக்கினர். அசோகன் இந்தத் தடைகளையெல்லாம் கடந்து பெரு நிலப்பரப்பை ஒன்றாக இணைத்தான். ஆனால் பின்வந்த சுங்க, சாதவாகன, கலிங்க மன்னர்கள் நாட்டைத் துண்டு படுத்தினர். மீண்டும் குப்தர் காலத்தில் பெரும்பரப்பு பெருவலையாய் இணைந்தது. மேலை இந்தியாவில் உள்ள எலிபெண்டா சிற்பங்களிலும் தக்காணத்தில் உள்ள அஜந்தாவின் சிற்பங்களிலும் ஒரே சாயல்! இரண்டும் குப்தர்களின் கலை படைப்பே. இவ்வளவு தொலைவிலும் ஒரேசாயல் எப்படி வந்தது?

வலபையைச் சார்ந்த மைத்ரகர்கள், மேலேஇந்தியாவில் குப்தர்களின் சாமந்தர்களாக அமர்ந்தனர். வாகாடகர்கள் குப்தர்களின் அவையிலும், வாழ்விலும் பெரும்பங்கு கொண்டிருந்தனர். இந்த இணைப்பின் எதிரொலியே அக்கலைச்சாயலுக்கு அடிப்படை. மேலை இந்தியாவிலும், தக்காணத்திலும் மட்டுமல்ல; இவர்களது எழுத்துக்களின் சாயலை மிகத் தொலைவில் விளங்கிய கதம்பர் எழுத்துக்களிலும், பல்லவர் கல்வெட்டுகளிலும் கூட காணலாம். இவர்களது எழுத்துக்களில் பெட்டித்தலை முறை ஒன்றுபோல இடம் பெற்றது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிலேயே இத்தகு நெருக்கம்! இது ஒருபுறம். மற்றொருபுறம் தாம் எழும் இடத்து வாசனை அவர்தம் சொற்களில் வீசியது. அசோகன் என்ற ஒரே மன்னனின் கல்வெட்டுக்கள் இடத்திற்கு இடம் வேறுபட்டது. குப்தர் கல்வெட்டுக்களிலும் அதே நிலைதான். செம்மண் நிலத்து விழும் மழைநீரும் அந்நிறம் பெறல் இயல்பன்றோ? இடைக்காலத்துச் சிற்பங்கள், பழங்காலத்துக் குப்தர் சிற்பங்களினின்றும் வேறுபட்டன. அவ்விடங்களில் திகழ்ந்த கலைப் பண்புகளோடு கலந்து தனியாக முகிழ்த்த தனி மலர்கள் அவை. தனி வெண்குடை பல வண்ணவிளக்குகளால், பலவகையான தோற்றமளிப்பது போல, ஒரே மரபின் கலைப்படைப்புக்கள் பல்வேறு சாயல்களைப் பெற்றன. இந்தியக் கலாச்சாரத்தின் தனிப்பண்பாக அமைந்தது இத்தன்மை. இத்தகு வேற்றுமையில் ஒற்றுமை கண்ட பண்பு, தாய்நாட்டில் மட்டும் அல்லாது, அயல்நாடுகளுக்கும் பரவியது. ஜாவா, கம்போடியா, அன்னம் இன்னும், தென்கிழக்காசிய நாடுகளில் இது பெரிதும் பரவியது பராபுதூர் ஸ்தூபமும், பிரம்பனத்துச் சிவன்கோயிலில் உள்ள இராமாயணச் சிற்பங்களும், நாகம், கருடன் ஆகிய சிற்பங்களாலேயே அழகு செய்து கட்டப் பெற்ற ஆஸ்கர்தோமில் உள்ள கலைப்படைப்புக்களும் இதற்கு அருமையான சான்றுகள். அவை குப்தர், பல்லவர் கலைப்பாணியை அப்படியே பெற்றுத் திகழ்வன ஜாவாவிலுள்ள கலைப்படைப்புக்களும் வாயங்கில் (Wayang) உள்ள சிற்பங்களும், இடைக்கால கம்போடியக் கலைச்சின்னங்களும் இப்பண்பு பரவி நிலைபெற்றமையை நன்கு காட்டி நிற்கின்றன. பெருமன்னன் இராஜேந்திரனின் கிழக்காசிய வெற்றியின் மூலம் அங்கு இக்கலை வேரூன்றியது. நாகப்பட்டினத்துச் செப்புத் திருமேனிகள் ஜாவாவின் கலைச்சாயல் பெற்றுத் திகழ்கின்றன. நாளாந்தாவில் உள்ள தர்மபாலரின் செப்பேடும் ஜாவாவின் தொடர்பினை உறுதிசெய்யும் வகையில் அமைந்துள்ளது.

திரு ஸ்டெயின் அவர்கள் மத்திய ஆசியாவிலும், திபெத்திலும் மண்ணுள் புதைந்த பல ஆவணங்களைக் கண்டுபிடித்தார். இவைகளில் உள்ள எழுத்துக்கள் குப்தரின் எழுத்துக்களைப் போலவே இருந்தமை

வியப்பிற்குரியது. பின்னர் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இதே எழுத்து திபெத்தில் வழக்கில் இருந்தது.

பர்மாவில் 5-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த மௌன்கன் (Maunggun) செப்பேட்டில் காணப்படும் எழுத்துக்களும் கிருஷ்ணை ஆற்றங்கரையில் இருந்த சாலங்காயனர்களின் எழுத்துக்களும் பெரிதும் ஒப்புமையுடையவை. இருநூற்றுண்டுகளுக்குப் பின்னர் ப்யூ (Pyu) கல்வெட்டுக்கள் இதன் வளர்ச்சி பெற்ற எழுத்துக்களில் எழுதப்பட்டன. இங்கும் இந்தியாவைப் போலவே, ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக எழுத்துக்கள் பல மாற்றங்களைப் பெற்றன. இன்றைய பர்மீய எழுத்துக்களும் கூட பழைய வடிவத்தின் வளர்ச்சியே ஆகும். சில எழுத்துக்களில் தமிழ் கிரந்த எழுத்துக்களின் சாயலைக் காணமுடிகிறது. ஏகரத்தைக் குறிக்க, இம்மொழி முதலில் கிரந்த உயிர்மெய் வடிவைப் பெற்றிருந்தது. இன்று எகர உயிர் வடிவத்தைப் பயன்படுத்துகிறது.

திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டக் குகைக் கல்வெட்டுக்களில் காணப்படும் எழுத்துருவம், அதே காலத்தில் ஈழத்திலும் வழங்கியது. கிருஷ்ணைச் சமவெளியிலும், மகரத் மலா (Maharatmala) என்னும் இடத்திலும் வழங்கிய எழுத்துக்கள் கி.பி. இரண்டாம் நூற்றுண்டின் வளர்ச்சியை விளக்கும் வகையினதாக அமராவதி எழுத்துக்களைப் போன்றே உள்ளன. அமராவதியில் உள்ள சிற்பங்களைப் போலவே ஈழத்திலும் சிற்பங்கள் காணப்படுகின்றன நாகார்ஜுன கொண்டாவில் இருக்கும் நிலைக்கற்களில் அமைந்த சில யாளி, யானை வரிக்கற்கள் ஈழப்பாணியினின்று பெறப்பட்டவையே என்பது உறுதி. நாகார்ஜுனகொண்டாவில் உள்ள கல்வெட்டுக்கள் ஈழத்திற்கும் ஆந்திர நாட்டிற்குமிடையே இருந்த சமய, பண்பாட்டுத் தொடர்பினைக் காட்டுகின்றன. சில நூற்றுண்டுகளுக்குப் பின்னர் ஈழத்து மன்னன், பல்லவ நரசிம்மவர்மனின் படையுதவியுடன் அரசுரிமையைப் பெற்றதும், அவர்களிருவரும் சிறந்த நண்பர்களாய் நிலவினர் என்பதும் வரலாற்று உண்மை. ஈழத்து வரலாற்று நூலான மகாவம்சம் இருபெரிய கப்பல்களைப் பற்றிய செய்திகளை விவரமாகக் குறிக்கின்றது. பராபுதூரில் உள்ள சிற்பங்களில் இடம் பெறும் கப்பல்களின் உருவம் இந்த விளக்கத்திற்குப் பெரிதும் பொருத்தமாக உள்ளது. அதே காலத்து தென்னிந்தியாவிலும், ஜாவாவிலும் இதை ஒத்த சிற்பங்கள் காணப்படுகின்றன. 7-ஆம் நூற்றுண்டில் கிரந்த எழுத்துக்கள் ஈழத்திலும், தென்னிந்தியாவிலும் ஒன்றுகவே எழுதப்பட்டன. கிரந்தம், வட்டெழுத்து ஆகிய இரண்டின்

சாயலையும் ஈழத்துக் கல்வெட்டுக்களில் காண்கிறோம். அருகருகே அமைந்த நாடு என்பது மட்டும் இதற்குக் காரணம் அல்ல; தமிழக மன்னர்கள், குறிப்பாக இராஜராஜன் போன்ற சோழப் பெருமன்னர்கள் அந்நாட்டை வெற்றி கொண்டதும் காரணம் ஆகும். 'த'கர, 'ந'கரங்களின் சிறிது சாய்ந்த வட்டெழுத்து வடிவங்களே தற்காலச் சிங்களத்தில் பயன்படுத்தப்படுகின்றன. இடைக்காலம் வரை இவ்வெழுத்துக்களில் எவ்வித மாற்றமும் இல்லை.

கம்போடியா, அன்னம் ஆகிய நாடுகளில் வழங்கிய வளர்ச்சிப்படிகளும் கூட ஒற்றுமையுடையதாகவே உள்ளது. கி.பி. 2, 3-ஆம் நூற்றுண்டுகளில் இந்தியா, கம்போடியா ஆகிய இரு இடங்களிலும் ஒரே எழுத்துக்களே வழங்கின. 4, 5-ஆம் நூற்றுண்டுகளில், சில வளர்ச்சிகள் காணப்படினும், பழைய அமைதியை எளிதில் உணரலாம். 8-ஆம் நூற்றுண்டில், எழுத்துக்கள் மாற்றம் பெறினும் அவை வேங்கி அல்லது ஆந்திர மாநிலத்து எழுத்துக்களை ஒத்தே காணப்படுகின்றன. 10-ஆம் நூற்றுண்டில் பல்லவர்களின் எழுத்துச் சாயலையும், பிற்காலத்தில் தமிழ் எழுத்துக்களின் சாயலையும் கொண்டு திகழ்கிறது. 'க' கரத்தில் தமிழ் எழுத்தின் ஒப்புமையையும், 'ப' (Fa) கரத்தில் கன்னட, தெலுங்கு எழுத்தின் ஒப்புமையையும் காணலாம். அதேபோல 'ச'கரம் தமிழ் எழுத்துச் சாயல் பெற்றிருக்க, 'ய'கரம் தெலுங்கு, கன்னடச் சாயலுடன் திகழ்கிறது. இவை அனைத்திலும் காணப்படும் பெட்டித்தலை முறையும், அரைவட்ட அழகுக் கோடும், தென்னிந்திய எழுத்துக்களோடு பெரிதும் ஒத்துள்ளவை.

மலேசிய எழுத்துக்களிலும் ஒப்புமை இருந்தது. புதகுப்தம் என்னும் தலைமை மாலுமியைக் குறிக்கும் மலேசியக் கல்வெட்டின் மூலம் இதனைத் தெரிந்து கொள்ளலாம் எழுத்தமைதி கொண்டு இதனை 5-ஆம் நூற்றுண்டைச் சார்ந்ததாகக் கொள்வர். இக்கல்வெட்டில் குறிக்கப்படும் 'ரக்தமிருத்திகா என்னும் இடம், வங்காளத்தில் உள்ள 'ரங்மதி'யே ஆகும். கிருஷ்ணா நதிப் பிரதேசத்தின் தென்பகுதியில் உள்ள எழுத்துக்களுக்கும் இக்கல்வெட்டு எழுத்துக்களுக்கும் உள்ள ஒற்றுமை, இவ்விரு பகுதிகளுக்கிடையே இருந்த பண்பாட்டு ஒற்றுமைக்குச் சிறந்த சான்று.

போர்னியோவில் குட்டி (Kutei) என்னும் இடத்தில் உள்ள யூபத்தில் மூலவர்மனின் கல்வெட்டு உள்ளது. இதன் மூலம், தொலைவில் உள்ள தீவுகளிலும் இந்தியமன்னர்களின் ஆட்சி பரவி இருந்ததையும், இந்திய வைதிக சமயங்கள் வேரூன்றி இருந்ததையும் அறிகிறோம். இக்

கல்வெட்டு எழுத்துக்கள் 4, 5-ஆம் நூற்றாண்டுகளில் இருந்த பல்லவர் எழுத்துக்களைப் போன்றே உள்ளன.

5, 6-ஆம் நூற்றாண்டுப் பல்லவர் எழுத்துக்களில் அமைந்த பூர்ண வர்மனின் கல்வெட்டு ஜாவாவில் உள்ளது. இத்தகைய தீவுகளில் பல சமஸ்கிருதக் கல்வெட்டுக்கள் உள்ளன. இங்கெல்லாம், இந்தியப் பண்பாடு வேரூன்றியிருந்தது. எனவே அது சிற்பங்களிலும் கட்டிடங் களிலும் பரிணமித்தது.

இன்று சமயம் மாறிவிட்ட போதிலும் கூட, இந்தியப் பண்பாடு அங்கு வேரூன்றி இருந்தமையை இன்றும் அங்குள்ள சில சான்றுகள் மூலம் உணரலாம். வாயங்கில் இராமயணக்கதை இன்றும் நடிக்கப்படு கிறது. ஆனால் அதை நடிப்போரும் கண்டு களிப்போரும் முகமதியர்கள்!

இந்தியக் கல்வெட்டுக்களும், அதில் தென்னிந்தியாவின் பங்கும்

பிராகிருதத்தில் அமைந்த அசோகனின் கல்வெட்டுக்களே இந்தியாவில் கிடைத்துள்ள மிகப் பழைய கல்வெட்டுக்கள் ஆகும். சமஸ்கிருதக் கல்வெட்டுக்கள் இதனினும் பிற்காலத்தனவே. சமஸ்கிருதக் கல்வெட்டுகளுள் பழமையானது ருத்ரதாமனின் கிர்நார் கல்வெட்டே ஆகும். ஏறக்குறைய இதே காலத்தைச் சேர்ந்ததே, நாசிக் குகையில் காணப்படும் நாகபாணனின் மருகன் உசவதத்தனின் கல்வெட்டு. அரசு ஆவணங்கள் அனைத்தையும், பிராகிருத்தில் எழுதுவதே மரபு. அதற்காகச் சமஸ்கிருதம் அரசவையில் இடம் பெறவே இல்லை என்று கூறுவதும் தவறு. சுங்கமன்னன் புஷ்யமித்ரனால் ஆதரிக்கப்பட்டவர் பதஞ்சலி. அவர் பெரும் இலக்கண ஆசிரியர். சரியான உச்சரிப்பு, எழுத்து முறை, சொல் வழக்கு இவைகளைத் தேவலோக யாகப் பசுக்கள் போன்றவை என்று கூறுகிறார்.

பிற்காலத்து மாக்கவிஞன் பவபூதி. சமஸ்கிருத மொழியினைத் தேவ மொழி என்றும், பெரும் முனிவர்களால் உலகிற்கு வெளிப்படுத்தப் பட்டதென்றும் கூறுவான். இம்மொழி அனைத்து மொழிகளிலும் முதன்மையிடம் பெற்றுத் திகழ்ந்தது. संस्कृतं नाम दैवी वागन्वाख्याता महर्षिभिः : சமஸ்கிருதத்தைவிட பிராகிருதத்தை, மக்கள் எளிதில் புரிந்துகொண்டனர். நாடகங்களிலும் மன்னன், முனிவர், மதகுரு இவர்கள் பேசும்பகுதி சமஸ் கிருதத்திலும், அரசி, பிற பாத்திரங்கள் பேசும் பகுதி பிராகிருதத்திலும் அமைந்தது. இவ்வாறு பெரும்பான்மையான மக்களால்வழங்கப்பட்ட பிராகிருதமே கல்வெட்டிலும் பெருவழக்காயிற்று.

சிறிதுசிறிதாக, சமஸ்கிருதம் பிராகிருதத்தின் இடத்தைப்பெற்றது. சமஸ்கிருதத்தில் எழுதுவதே சிறப்பு என்று கருதப்பட்டதே இம்மாற்றத் திற்குக் காரணம். தொடக்கக் காலத்தில், சமஸ்கிருத மொழியும் எளிமை யானதாகவே எழுதப்பட்டது. அதனைப் பழைய பல்லவர் கல்வெட்டுக் களில் காணலாம். இவை பிராகிருதத்திலிருந்து, சமஸ்கிருதமாக மாறிய காலத்தவை. ஆனால் பல்லவரின் பிற்காலச் செப்பேடுகளில் பெருமாற்றம் இடம் பெற்று விட்டது. இதனைத் தண்டந்தோட்டம், காசாக்குடிச் செப்பேடுகளில் காணலாம். திரு கெய்த் போன்றோர் இதனைக் 'கவிதை போல வேண்டுமென்றே புனையப்பட்டவை' என்று கூறுவர். மதனவர்ம னின் மௌ (Mau) கல்வெட்டு, லல்லாவின் தெவால் மெய்க்கீர்த்தி, காஜுராஹோக் கல்வெட்டுக்கள், பரமார்த்திதேவனின் பட்டேஸ்வரம் கல் வெட்டு, பரபாலனின் கல்வெட்டு, விஜயசேனனின் தேவ்பாராக் கல் வெட்டு, ஜெயனின் செப்ரோலு கல்வெட்டு, புவனேஸ்வரத்தில் உள்ள ஸ்வப்னேஸ்வரம் கல்வெட்டு, பந்துவர்மன், குமாரகுப்தன் ஆகியோரின் மாண்டசார் கல்வெட்டு, யசோதர்மனின் மெய்க்கீர்த்தி போன்றவை இம்முறையில் அமைந்த சமஸ்கிருதக் கல்வெட்டுக்கள் ஆகும். இக்கல் வெட்டுக்களின் மொழி மிகக் கடினமானது. இலக்கிய நோக்கத்தோடு இவை எழுதப்பெறவில்லை. இலக்கிய 'பாக'ங்களுக்கு எடுத்துக்காட்டு களாக அமையத்தக்க பகுதிகள் இங்கு இருப்பினும், வால்மீகியும், காளி தாசனும் போல இவர்கள் 'திராக்ஷைபாக'மாக எழுதவில்லை. இங்கு 'ரீதி'க்கோ, 'பாக'த்துக்கோ குறைவில்லை. 'சப்தங்'களையும, 'அர்த்தாலங் கார'ங்களையும் ஆள்வதில் இவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. பழைய சமஸ்கிருதப் புலவர்களை அடியொற்றி, பிரசஸ்தி எழுதும் புலவர் கள் தம் கவிதைகளை அமைத்தனர் இந்த பிரசஸ்திக் கவிதைகளும், சமஸ்கிருத இலக்கிய உலகிற்குப் பெருமை சேர்த்தன சமஸ்கிருத மாண வர்கள் இப்பிரசஸ்திகளையும், இலக்கிய வகையாகக் கற்றனர். 'பிராசீன மாலை' என்ற நூலை பம்பாய் நிர்ணயசாகர அச்சகம் இருதொகுதிகளாக வெளியிட்டது. இந்நூல் உரிய வரவேற்பினைப் பெறவில்லை. இன்று அச்சேறியுள்ள, சமஸ்கிருத இலக்கியங்கள் பல. இதையும் சமஸ்கிருதம் பயிலுவோர், தம் பாடத்தில் ஒரு பகுதியாகக் கொள்ளுதல் வேண்டும்.

பண்பாட்டு ஒற்றுமையே இப்பெரும் பரப்பை இணைத்து நிற்கிறது. வடநாட்டிலிருந்து வரும் புனிதப் பயணிகள் ரத்னாகரமும் மகாநதியும் கூடும் இடத்தில் நீராடுவதும், தென்னகத்திலிருந்து செல்வோர் கங்கை யிலோ, மூன்று நதிகள் கூடும் பிரயாகையிலோ நீராடுவதும் நம்நாட்டு மரபு. இது போலவே துவாரகை, புஷ்கர், ஜகன்னாதபுரி இவை புனிதத்

தலங்களாக இலங்குகின்றன. பண்டைக்காலத்து மாணவர்கள், தக்ஷசீலம், பனாரஸ், நாளந்தா, காஞ்சி ஆகிய பல்கலைக்கழகங்களுக்குச் சென்றனர். சங்கரர் போன்ற தத்துவ மேதைகள் நாடு முழுவதும் பல நிறுவனங்களை நிறுவி, அறிவுவிளக்கம் பெறச் செய்தனர். அவர் பீஹாருக்குச் சென்று குமரிளபட்டரைக் கண்டு பேசினார். இராஜேந்திர சோழன் கங்கைக்கரையிலிருந்து சிவாச்சாரியார்களை அழைத்து வந்து தன் தலைநகரில் குடியேற்றினான். பல்லவ மன்னர்கள் வேதத்தில் வல்லவர்களை நர்மதைக் கரையிலிருந்து தம் நாட்டுக்கு அழைத்து வந்து ஆதரித்தனர். அஷ்டசகஸ்ரர், ப்ருஹத்சரணர், வடமா ஆகிய பெயர்கள் இதனை இன்றும் நினைவூட்டுவனவாய் உள்ளன. காஷ்மீரக் கவிஞர் பில்ஹணர் சாளுக்கிய மன்னன் ஆறும் விக்ரமாதித்தனால் ஆதரிக்கப் பட்டார். கன்னோஜிலிருந்து வங்காளத்திற்குக் குலீனியர் வந்தனர். இத்தகைய ஒற்றுமைக்கு ஸ்ருதி, ஸ்மிருதி, இதிகாசங்கள் அடிப்படையாக அமைந்தன. வேதங்கள் அதிகாரிகள் போலவும், புராணங்கள் நண்பர்கள் போலவும் விளங்க, காவியங்களோ, அன்புக்கட்டளைகள் போன்று இடம் பெற்றன. வேதத்தின் நடை, இலக்கியங்கள் புராணங்களினின்றும் வேறுபட்டதாய் இலங்குகிறது. காவியநடையோ, மக்களின் நடையாக இருந்தது. இந்தியாவின் எப்பகுதியினராலும் இது எளிதில் புரிந்து கொள்ளத்தக்கதாய் இருந்தது. இந்திய நாடு முழுவதிலும் சமஸ்கிருதப் புலமை நிலவியிருந்தது. எனவே டில்லியிலிருந்து ஜெகந்நாதர் எழுதி னாலும், விரிஞ்சிபுரத்திலிருந்து அய்யப்பதீக்ஷிதர் எழுதினாலும், சமஸ்கிருத மாணவர்களும், பண்டிதர்களும் படித்துப் பாராட்டினர். சமஸ்கிருதம் இந்திய நாட்டு மொழியாக விளங்கியது. குப்தர்கள், இடைக்காலத்து வர்த்தனர், மௌகரிகர்கள், பிரதிகாரர்கள், பரமாரர்கள், சந்தேலர்கள், பாலர், சேனர், காகதவாலர், ஹைஹாயர், கங்கர் இன்னும் அனைத்து வடநாட்டு அரசமரபினரும் சமஸ்கிருதத்திலேயே கல்வெட்டுக்களை எழுதினர். தென்னிந்திய அரசுகளும் சமஸ்கிருதத்தையே அரசு மொழியாக ஏற்றிருந்தன. வடஇந்திய கல்வெட்டுக்கள், இடத்திற்கு ஏற்ப சிறிது மாறுபட்டிருப்பினும், நாகரி எழுத்துக்களிலேயே அமைந்தன. தென்னகத் திலும், தக்காணத்திலும் இடத்திற்கிடம் எழுத்து முறை சிறிது மாறு பட்டாலும், அந்தந்த மாநில மொழியும் கூடவே இடம் பெற்றது. இராஷ்டிரகூடர் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் நாகரியில் எழுதப்பட்டன. சமஸ்கிருத மொழி, கன்னட தெலுங்கு எழுத்துக்களிலும் சில இடத்து எழுதப்பட்டது சமஸ்கிருதமும், கன்னடமும் மாறி மாறி இடம் பெறுவதும் உண்டு. கீழைக்கங்கர் கல்வெட்டுக்களில், நாகரி எழுத்து சில இடங்களில் இருந்தாலும், பெரும்பாலும் கன்னட தெலுங்கு

எழுத்திலேயே எழுதப்பட்டுள்ளது. தமிழகத்தில், தமிழ்ப் பகுதிக்குத் தமிழ் எழுத்தும், சமஸ்கிருதப் பகுதிக்குக் கிரந்த எழுத்தும் பயன்படுத்தப் பட்டன. தெலுங்கு நாட்டில், சமஸ்கிருதத் தெலுங்குப் பகுதிகள், தெலுங்கு கன்னட எழுத்துக்களில் எழுதப்பட்டன.

சமஸ்கிருதம் தவிர பிற கல்வெட்டுக்கள் அனைத்தும் மாநில மொழிகளிலேயே அமைந்தன. அவை அனைத்தும் இடைக் காலத்தில் எழுந்தவை: அவையும் தென்னாட்டில் மட்டுமே பரவின. மிகப்பழைய தமிழ்க் கல்வெட்டுக்களும், பழைய பிராகிருதக் கல்வெட்டுக்களும் காலத் தால் ஒத்தவை. ஆனால் அதன் பின்னர் 6-ஆம் நூற்றாண்டில் தான் தனித் தமிழ்க் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன தமிழில் உள்ள முதல் செப்பேடான பள்ளன்கோயில் செப்பேடு ஆறும் நூற்றாண்டினதே. சங்ககாலத்தின் இறுதியான 3-ஆம் நூற்றாண்டு முதல், பல்லவராட்சித் தொடக்கமான 6-ஆம் நூற்றாண்டுவரை தமிழ்க் கல்வெட்டுக்கள் காணப்படாமைக்குக் களப்பிரர் காலத்து நிலையான ஆட்சியில்லாமையே காரணம் ஆகலாம்.

பிராகிருதம் தவிர, தமிழ், கன்னடம், தெலுங்கு ஆகிய மூன்று சிறப்பான தென்னிந்திய மாநில மொழிகளில் மட்டுமே கல்வெட்டுக்கள் இருந்தன. வேறெந்த மாநில மொழிகளிலும் கல்வெட்டுக்கள் இல்லை. இம்மூன்று மொழிக் கல்வெட்டுக்களிலும், சமஸ்கிருதம் இல்லை என்பதால், அம்மொழி இப்பகுதியில் இல்லை என்பது பொருளன்று. அது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசவை மொழியாக வீற்றிருந்தது. வடஇந்தியக் கல்வெட்டுக்களில் சமஸ்கிருதம் சிறப்பிடம் பெற, தென்னிந்தியாவிலோ மாநில மொழியே சிறப்பிடம் பெற்றது சோழ, பாண்டிய அரசுகளின் வரலாற்று மூலங்களாக விளங்கும் கணக்கற்ற மெய்க்கீர்த்திகள் தமக்கெனத் தனிவடிவம் கொண்ட இலக்கியங்கள். தந்திவர்மனின் திருவெள்ளறைப் பாடல் கல்வெட்டு போன்றவை சிறப்புக்குரியன. தமிழ்க் கல்வெட்டுக்களில் ஆளப்பெறும் பொருட் செறிவுடைய சொற்களும், சொல்வளமும், எடுத்துக் கூறும் முறையும், அருமையானவை. சோழர் காலத்துக் கோயில்கள் முழுவதும் மன்னர் கொடுத்த கொடைகளும், பிற அறநிலையங்களைக் குறிக்கும் செய்திகளும் அவன் வெற்றிகளும் அடங்கிய கல்வெட்டுக்கள் நிறைந்து கிடக்கின்றன. தமிழகத்தில் குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் மிக அருகருகாக கோயில்கள் பெருகியிருக்கின்றன ஒவ்வொரு கோயிலிலும், தூண்கள் சுவர்கள் அனைத்தும் கல்வெட்டுக்களாகவே நிறைந்து காணப்படுகின்றன.

மன்னனின் வெற்றிகளைக் குறிக்கும் கல்வெட்டுக்கள், அழகிய நடையும், இனிமையும் கொண்டவை. தமிழ் இலக்கியத்தை வளர்த்த பெரும் புரவலர் களாக சோழர்களும், பாண்டியர்களும் விளங்கினர். தேவாரம் பாடிய அப்பரும், ஞானசம்பந்தரும் பல்லவர் காலத்து வாழ்ந்து, அம்மன்னர் களால் ஆதரிக்கப்பட்டவர்கள். 20 ஆண்டுகளுக்கு முன்னர் தஞ்சை மாவட்டத்தில் உள்ள மதுக்கூரில் மாணிக்கவாசகர் சிலையொன்று பூமி யினின்று கிடைத்தது. அச்செப்புத் திருமேனியின் கையில் உள்ள ஏட்டில், அவரது திருவாசகத்தின் முதல்வரி எழுதப்பட்டுள்ளது. அவ் வுரு, இப்போதும் அக்கோயிலிலேயே வழிபாட்டில் உள்ளது. தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவிடைவாசல் கோயிற்சுவரில், தேவாரப் பாடல்கள் பல 12-ஆம் நூற்றாண்டு சோழர் எழுத்தமைதியில் பொறிக்கப் பட்டுள்ளன.

தெலுங்கிலக்கியத் தந்தை என்று அழைக்கப்படும் நன்னயபட்டரின் இலக்கியம் 11-ஆம் நூற்றாண்டினது. நன்னிசோடரின் குமாரசம்பவம் இதனைவிட ஒரு நூற்றாண்டுக்கும் முந்தியது. பெஜவாடாவில் உள்ள யுத்தமல்லரின் கல்வெட்டுப் பாடலாக அமைந்தது. இது 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கீழைச்சாளுக்கியத் தானைத்தலைவன் பாண்டு ரங்கனின் வெற்றிகளைக் குறிக்கும் கல்வெட்டு இதனினும் நூறு ஆண்டு களுக்கு முந்தியது. பெஜவாடாவிலிருந்து சென்னை அருங்காட்சி யகத்துக்குக் கொண்டுவரப்பட்ட ஒற்றைக் கல்லால் ஆன துவார பாலர் சிற்பத்தின் பின்னால் ‘வெகியின் அடிமை’ என்ற பொருள்படும் ‘வெகிநாது வெலன்து’ என்ற தொடர் எழுதப்பட்டுள்ளது. இதுவே தெலுங்கில் கிடைத்தவற்றுள் பழைய எழுத்தினைக் கொண்டதாகும். சிறிய தெலுங்குக் கல்வெட்டு ஒன்று ஸ்ரீநாதன் என்ற தெலுங்குப் புலவனின் பெயரைக் குறிக்கிறது. அவன் ரெட்டி மன்னர் அரண்மனையில் பொதுத் துறையில் உயர் அதிகாரியாகப் பணி புரிந்தவன் என்று அக் கல்வெட்டே குறிக்கிறது. கீழைச் சாளுக்கிய, ரெட்டி, விஜயநகர மன்னர் கள் தெலுங்கு இலக்கியத்தைப் பெரிதும் ஆதரித்தவர்கள். அவர்களுடைய கல்வெட்டுக்களில், மாநில மொழியாகிய தெலுங்கும், சமஸ்கிருதமும் சிறந்த இடத்தினைப் பெறுகின்றன.

எகிப்திலுள்ள பாபிரஸ்ஸில் கிடைத்துள்ள சிதைந்த துண்டுக் கல்வெட்டுக்கள் மூலம் கன்னடம் கிறிஸ்துவின் சமகால அளவிற்குத் தொன்மையுடையது என்று அறிகிறோம். கன்னட நாட்டில், சமஸ்கிருதத் தோடு இணைந்து இந்த மொழியும் சிறப்பிடம் பெறுகிறது.

இந்தியப் பண்பாட்டினை வெளிநாடுகளிலும் பரப்பியதில் தென்னிந்திய எழுத்துக்களுக்குப் பங்கு உண்டு. முன்னரே கூறியபடி, சிங்கள எழுத்துக்கள் கிரந்த எழுத்துக்களின்றும் வளர்ந்தவை. ஜாவாவில் உள்ள பூர்ணவர்மனின் கல்வெட்டு எழுத்துக்கள் தென்னகத்து எழுத்துக்களைப் பெரிதும் ஒத்துள்ளன. இதே எழுத்துக்கள் அன்னம், கம்போடியாவிலும் காணப்படுகின்றன. பசிபிக்கடல் தீவுகள் அனைத்திற்கும் பரவி, அங்குள்ள எழுத்துக்களின் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டன. தென்கிழக்காசிய நாடுகளுக்கும், தென்னிந்தியாவிற்கும் இடையே இருந்த கலை, பண்பாட்டுத் தொடர்புகளும், இராஜேந்திர சோழனின் மலேசியப் படையெடுப்பும், இவ்விரு பகுதிகளுக்கும் இருந்த மிகச் சிறந்த, மனமொன்றிய தொடர்புக்கு நிலைக்களனாக விளங்கின.



படம் 19

"பூர்ணவர்மன்"

நூற்றாண்டு தோறும் எழுத்துக்களின் மாற்றமும் வளர்ச்சியும்

உயிரெழுத்துக்கள்

அ (A) (படம் 20) வரிவடிவங்களுள் முதல் இடத்தைப் பெறும் இவ்வெழுத்து கி.மு. 2, 3-ஆம் நூற்றாண்டுகளில் மூன்று வகையான வடிவங்களைக் கொண்டிருந்தது. இவ்வெழுத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் அதாவது செங்குத்துக் கோடு நீண்டு பின் சுழியான நிலையை இக்ஷுவாகு எழுத்தில் காணலாம். 5-ஆம் நூற்றாண்டில் சிலவிடத்துப் பெட்டித் தலையும் பெற்றது. 7-ஆம் நூற்றாண்டுப் பல்லவ கிரந்தமும், தமிழ் எழுத்தும் இதன் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கவை. தமிழ் எழுத்தி னின்றும் மிகச்சிறுவேறுபாடு கொண்டது வட்டெழுத்து உருவம்.

ஆ (A) (படம் 21) முன்னைய எழுத்தின் பக்கவாட்டிலோ உச்சி யிலோ இடப்பட்ட கோடே இந்நீட்சியைக் காட்டியது. காலப் போக்கில் இது வளைகோடாகவும், கீழே சுழியாகவும், பக்கவாட்டில் தனிக்கோடாக வும் மாறி விட்டன.

இ (I) (படம் 22) மூன்று புள்ளிகளாகவும், மூன்று கோடுகளாக வும் இரு வேறுமுறையில் எழுதப்பட்ட எழுத்து இது. சில பகுதிகளில் அவற்றுள் ஒரு புள்ளி கோடாக மாற, அதன் அடிப்பாகத்திலோ, அல்லது மேற்புறமோ அல்லது பக்கவாட்டிலோ பிற இரு புள்ளிகள் இடப்பட்டன. கோடு படுக்கைக் கோடாகவும், செங்குத்துக் கோடாகவும் மாறியதையும், சில இடங்களில் அது கொக்கி போன்றும் சுழியாகவும் மாறியதையும் காணலாம். சில மொழிகளில், குறிப்பாகத் தமிழ், வட்டெழுத்து, கிரந்தம் கன்னடம், தெலுங்கு இவைகளில் புள்ளி மறைந்து மூன்று புள்ளிகளுமே இணைந்து வளைந்த, சுருண்ட வடிவம் பெற்று விட்டது.

ஈ (I) (படம் 23) நடுவில் செங்குத்துக் கோடும் இருபுறமும் இரு புள்ளிகளுமாகத் திகழ்ந்த எழுத்து இது. பிற்காலத்து, செங்குத்துக் கோடு சிறிய நெளிவுடனும் இரட்டைக் கோடாகவும், ஒரு வளையமாகவும், இவ்வாறு மூவகையாக மாற்றம் பெறுகிறது. அதே நேரத்து, புள்ளிகள் இரண்டையும் குறுக்கு வாட்டில் இணைத்துக் கோடாகவும சில மரபினர் எழுதினர். இவ்வெழுத்தில் மிகப் பெரிய மாற்றம் ஏதும் நிகழவில்லை.



Mauryan 3 c. B.C.
Bhattiprolu 3-2 c. B.C.
Tamil caves 3 c. B.C.
Kuṣān 2 c. A.D.
Kṣatrapa 2 c. A.D.
Sātavāhanā 2 c. A.D.
Ikṣvāku 3 c. A.D.
Gupta 4 c. A.D.
Kadamba 4-5 c. A.D.
Sālankāyana 4 c. A.D.
Pallava 3-4 c. A.D.
Yaśodharman 6 c. A.D.
Traikūṭaka 5 c. A.D.
Vākāṭaka 5 c. A.D.
W. Ganga 5-6 c. A.D.
Nala 6 c. A.D.
Viṣṇukuṇḍi 6 c. A.D.
Pallava 5 c. A.D.
NAGARI
CANARESE
TELUGU
GRANTHA
TAMIL
VATTELUTTU
Maitraka 6 c. A.D.
W. Cālukya 6 c. A.D.
E. Ganga 7 c. A.D.
E. Cālukya 7 c. A.D.
Pallava 7 c. A.D.
Pallava 7 c. A.D.
Vardhana 7 c. A.D.
Pallava 7 c. A.D.
Somavamśi 6-7 c. A.D.
W. Cālukya 8 c. A.D.
Pallava 8 c. A.D.
Pallava 8 c. A.D.
Pāṇḍya 8 c. A.D.
Pratihāra 9 c. A.D.
Pāla 9 c. A.D.
Rāṣṭrakūṭa 9 c. A.D.
Rāṣṭrakūṭa 9 c. A.D.
E. Cālukya 10 c. A.D.
G. Cālukya 11 c. A.D.
Paramāra 11 c. A.D.
Candella 11-12 c. A.D.
W. Cālukya 11 c. A.D.
E. Ganga 11 c. A.D.
W. Cālukya 11 c. A.D.
E. Cālukya 11 c. A.D.
Cola 11 c. A.D.
Cola 11 c. A.D.
Cola 11 c. A.D.
Gahaḍavāla 12 c. A.D.
Sena 12 c. A.D.
Yādava 13 c. A.D.
Kākatīya 13 c. A.D.
Kākatīya 12 c. A.D.
Pāṇḍya 13 c. A.D.
Cola 13 c. A.D.
Reḍḍi 14 c. A.D.
Vijayanagar 15 c. A.D.
Vijayanagar 15 c. A.D.
Vijayanagar 15 c. A.D.
Vijayanagar 15 c. A.D.

படம் 20



NAGARI
CANARESE
TELUGU
GRANTHA
TAMIL
VATTELUTTU
Gupta
Pallava
Vākāṭaka
W. Gaṅga
Nala
Yaśodharman
Traikūṭaka
Vardhana
W. Cālukya
Maitraka
E. Gaṅga
E. Cālukya
Pratihāra
Pāla
Rāṣṭrakūṭa
Pāṇḍya
Paramāra
Cola
Gahaḍavāla
Sena
Yādava
Hoysala
Kākatiya
Reddi
Vijayanagar



படம் 22



Mauryan 3 c. B. C.
Bhattiprolu 3-2 c. B. C.
Tamil caves 3 c. B. C.
Kuṣān 2 c. A. D
Kṣatrapa 2 c. A. D.
Sātavāhana 2 c. A. D.
Ikṣvāku 3 c. A. D.
Gupta 4 c. A. D.
Kadamba 4-5 c. A. D
Sālankāyana 5 c. A. D.
Pallava 3-4 c. A. D.
Yaśodharman 6 c. A. D.
Traikūṭaka 5 c. A. D.
Vākāṭaka 5 c. A. D.
W. Ganga 5-6 c. A. D.
Nala 5 c. A. D.
Viṣṇukundi 6 c. A. D.
Pallava 5 c. A. D.
NAGARI
CANARESE
TELUGU
GRANTHA
TAMIL
VATTELUTTU
Pallava 7 c. A. D.
W. Cāḷukya 6 c. A. D.
E. Ganga 7 c. A. D.
E. Cāḷukya 7 c. A. D.
Pallava 7 c. A.D.
Pallava 7 c. A.D.
W. Cāḷukya 8 c. A. D.
Pallava 8 c. A.D.
Pallava 8 c. A. D.
Pāṇḍya 8 c. A. D.
Pratihāra 9 c. A.D.
Pāla 9 c. A.D.
Rāṣṭrakūṭa 9 c. A. D
Rāṣṭrakuṭa 9 c. A. D.
S. Cāḷukya 10 c. A. D.
E. Cāḷukya 11 c. A. D.
Cola 11 c. A. D.
Cola 11 c. A. D.
Cola 11 c. A. D.
Kākatiya 12 c. A. D.
Pāṇḍya 13 c. A. D.
Cola 13 c. A. D
Reddi 14 c. A. D.
Vijayanagar 15 c. A. D.

படம் 23

உ (U) (படம் 24) ஒரு செங்குத்துக் கோடும் ஒரு படுக்கைக் கோடும் இணைந்து பெறும் வடிவம் இதனுடையது. நாகரியில் உச்சியில் அழுகுக்கோடு பெற்றதோடு, செங்குத்துக் கோடு ஒரு வளைவாகவும், படுக்கைக் கோடு ஒரு வளைவாகவும் மாறியது. ஆனால் வலப்புறமாக எழுதப்பட்ட இவ்வளைவு இடப்புறமாக எழுதப்படும் நிலையை பெற்றது. மாறாக, தெலுங்கு-கன்னட, தமிழ்-கிரந்த எழுத்துக்களில் இடவல மாற்றம் ஏற்படவில்லை. செங்குத்துக்கோடு மட்டுமே வளைவாக மாறியதைத் தமிழ், கிரந்த எழுத்துக்களிலும், படுக்கைக்கோடு மட்டுமே வளைவாக மாறியதை கன்னட, தெலுங்கு எழுத்துக்களிலும் காணலாம். இவையிரண்டிலும் எழுத்தின் நடுவே ஒரு படுக்கைக் கோடு புதிதாக இடம் பெற்றுள்ளது.

எ (E) (படம் 25) முக்கோண வடிவில் அமைந்தது. மூன்று நேர் கோடுகள் இணைந்த இவ்வெழுத்தில், மூன்று கோடுகளுமே சிறு நெளிவுகளுடன் காலந்தோறும் மாற்றம் பெற்றதை நாகரி எழுத்துக்களில் காணலாம். ஒரு செங்குத்துக்கோடு இருக்க, அதைத் தொடர்ந்தாற்போல கொக்கியாக மாறிவிட்டதை கன்னட, தெலுங்கு எழுத்துக்களின் மூலம் அறியலாம். கிரந்தத்தில் இவ்வெழுத்து பெரிதும் மாற்றம் பெற்று விடுகிறது. தமிழிலோ, முக்கோணம் உடைந்து, ஒரு நுனி சுழியாகவும், மறு நுனி செங்குத்துக் கோடாகவும் நின்று விடுகிறது. வட்டெழுத்தில் இரு நுனிகளுமே இரு சுழிகளாக முடிகின்றன.

உயிர் மெய்யெழுத்துக்களில் உயிரொலியைக் குறிக்கும் குறியீடுகள்

ஆகாரத்தை குறிக்கும் குறியீடு (படம் 26): எழுத்தின் உச்சியிலோ பக்கவாட்டிலோ இடப்படும் சிறு கோடே இவ்வொலியைக் காட்டும். காலப்போக்கில், அச்சிறுகோடு உச்சியிலேயே சாய்வு கோடாக மாறியதை குஷானர் கல்வெட்டுகளில் காண்கிறோம். கீழ்நோக்கிய வளைவினைக் கோடாகப் பல்லவர், வாகாடகர்கள் கி.பி. 4, 5-ஆம் நூற்றாண்டுகளில் எழுதினர். இதையே மேல் நோக்கிய வளைவாக, க்ஷத்ரப, குப்தர்கள் எழுதியிருக்கின்றனர். எழுத்தின் பக்கவாட்டில் தனிக்கோடாக, எழுதுவதைப் பரமாரர், பிரதிகாரர், சேனர், பல்லவர், சோழர், விஜநகரர் கல்வெட்டுக்களில், காண்கிறோம். தனித்த வளைவாக கீழைச் சாளுக்கியர், காகதீயர் எழுதினர் இணைத்து அதே போன்று வளைவாக ரெட்டி மன்னர்களும் பல்லவர்களும் எழுதி உள்ளனர்.


Kuṣāṇa
2 c. A. D.
Kṣatrapa
2 c. A. D.
Sātavāhana
2 c. A. D.
3 c. A. D.
Gupta
4 c. A. D.
Kadamba
4-5 c. A. D.
Pallava
3-4 c. A. D.
Yaśodharman
6 c. A. D.
Traikūṭaka
5 c. A. D.
Vākāṭaka
5 c. A. D.
W. Ganga
5-6 c. A. D.
5 c. A. D.
Viṣṇukuṇḍi
6 c. A. D.
Pallava
5 c. A. D.
NAGARI
CANARESE
TELUGU
GRANTHA
TAMIL
VATTELUTTU
Maitraka
6 c. A.D.
W. Cāḷukya
6 c. A. D.
E. Ganga
7 c. A. D.
E. Cāḷukya
7 c. A. D.
Pallava
7 c. A.D.
Pallava
7 c. A.D.
Vardhana
7 c. A. D.
Pallava
7. c. A. D.
Somavamśi
6-7 c. A. D.
W. Cāḷukya
8 c. A. D.
Pallava
8 c. A.D.
Pallava
8 c. A. D.
Pāṇḍya
Pratīhāra
9 c. A.D.
Pāla
9 c. A. D.
Rāṣṭrakūṭa
9 c. A. D.
Rāṣṭrakūṭa
9 c. A. D.
E. Cāḷukya
10 c. A. D.
Paramāra
11 c. A. D.
Ć andella
11-12 c. A. D.
W. Cāḷukya
11 c. A. D.
E. Ganga
11 c. A. D.
W. Cāḷukya
11 c. A. D.
E. Cāḷukya
11 c. A. D.
Cola
11 c. A. D.
Cola
11 c. A. D.
Cola
11 c. A. D.
Gahaḍavāla
12 c. A. D
Sena
12 c. A. D.
Yādava
13 c. A. D.
Kākatīya
13 c. A. D.
Hoysala
12 c. A. D.
Kākatīya
13 c. A. D.
Pāṇḍya
13 c. A. D.
Cola
13 c. A. D.
Reḍḍi
14 c. A. D.
Vijayanagar
15 c. A. D.
Vijayanagar
15 c. A. D.
Vijayanagar
15 c. A. D.

படம் 24



படம் 25


Mauryan 3 c. B.C.
Kuṣān 2 c. A.D.
Uṣavadāta c. A.D.
Kṣatrapa 2 c. A.D.
Ikṣvāku 3 c. A.D.
Pallava 3-4 c. A.D.
Pallava 3-4 c. A.D.
Gupta 4 c. A.D.
Yaśodharman 6 c. A.D.
Harṣavardhana 7 c. A.D.
Pratihāra 9 c. A.D.
Paramāra 11 c. A.D.
Sena 12 c. A.D.
Vākāṭaka 5 c. A.D.
Pallava 5 c. A.D.
W. Cālukya 6 c. A.D.
E. Cālukya 10 c. A.D.
Kākatīya 12 c. A.D.
Reddi 13 c. A.D.
Pallava 7 c. A.D.
Pallava 8 c. A.D.
Cola 11 c. A.D.
nayañagar 15 c. A.D.

படம் 26

இகாரத்தைக் குறிக்கும் குறியீடு (படம் 27) : தொடக்க காலத்தில் எழுத்தின் உச்சியில் சிறிய படுக்கைக் கோடொன்று மேல் நோக்கிச் சரியாகத் திரும்பிய குறியாக, அசோகன் கல்வெட்டுக்களிலும், தமிழகக் குகைக் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன. பின்னர் சரியாகத் திரும்பிய அமைப்பு மாறி இடப்புறமாக வளைக்கப்பட்ட கோடாக மாற்றம் பெற்றதைக் காண்கிறோம். ஆனால் இவ்வளவு குறைந்த அளவிலும், சில இடங்களில் அதிகமாகவும் 2-ஆம் நூற்றாண்டிலேயே எழுதப்பட்டது. குஷான் கல்வெட்டுக்கள் சிலவற்றில் அவ்வளைகோடு மீண்டும் வலப்புறம் திரும்பி, 'S' வடிவில் நிற்பதைப் பார்க்கலாம். க்ஷத்ரபர் எழுத்துக்கள் சிலவற்றிலும் இக்ஷுவாகு மன்னர்கள் கல்வெட்டுக்களிலும், இந்த வளைகோட்டின் நுனியில் ஒரு சுருளும் அமைந்தது. குப்தர்கள் எழுத்தின் உச்சியில் வலப்புறம் தொடங்கி, இடப்புறம் உச்சியில் சரியாக முடியும் ஒரு வட்டம் போல இக்குறியீட்டை எழுதினர். அதனையே பல்லவர், மேலைச்சாளுக்கியர், வாகாடகர் அமைப்பாகவும் அறிகிறோம். ஹர்ஷரின் கல்வெட்டுக்களில் மிக அலங்காரமாக இறகு போன்ற அமைதியில் இருக்கின்றன. இக்குறியினை எழுத்தின் இடப்புறம் எழுத்தின் உயரமுண்டயதாக, உச்சியில் இணைத்தும், இணைக்காமலும், பிரதிகாரர், பரமாரர், சேனர் ஆகியோர் எழுதினர். சரியான வட்டமாக இல்லாமல் மேலே உட்புறம் வளைந்த ஓர் அமைதியில், கீழைச் சாளுக்கியர் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. பிற்காலப் பல்லவர், சோழர், விஜய நகரர் கல்வெட்டுக்கள் கூட இவைகளினின்று பெரிதும் மாறுபடவில்லை.

ஈகாரத்தைக் குறிக்கும் குறியீடு (படம் 27) : முன்னையதோடு பெரிதும் ஒப்புமையுடையதே இக்குறியீடு. படுக்கைக் கோட்டுடன் இணைந்து மேனோக்கி ஒற்றைக் கோடிடுவதற்குப் பதிலாக இரு கோடுகளை முதலில் இட்டனர். அதுவே இணைந்து கவை வடிவில் குஷான், க்ஷத்ரபர், சதவாகனர் கல்வெட்டுக்களில் அமைந்தது. தமிழ் இரட்டைக் கொம்பு வடிவில், இக்ஷுவாகு வம்சத்தினர் குறித்தனர். இதனை உச்சியில் இடப்புறம் தொடங்கி, வலப்புறமாகக் கொண்டு சென்று நிற்பதாக யசோதர்மன் எழுதுகிறான். இகரத்திற்கு இடப்புறத்தில் எழுத்தின் உயரத்தில் ஒரு கோடாக இட்ட பிரதிகார, பரமார, சேனர்கள் ஈகாரத்திற்கு அதே அமைதியில் எழுத்தின் வலப்புறம் இட்டனர். பிற பல கல்வெட்டுக்களில், இவ்வெழுத்தும், வலப்புறம் உச்சியில் தொடங்கி எழுத்தின் மேலேயே இடப்புறமாக ஒரு சுருளாக முடியும் அமைதியையே பெற்றிருந்தது. பல்லவர், சோழர், விஜயநகரர் எழுத்தின் உச்சியில் ஒட்டியும் ஒட்டாமலும் இதனை இட்டனர்.

உகரத்தைக் குறிக்கும் குறியீடு (படம் 28): எழுத்தின் அமைதிக்கு ஏற்ப, எழுத்தின் அடியில் வலப்புறம் நோக்கியோ அல்லது கீழ் நோக்கியோ ஒரு சிறு கோடிடுவதன் மூலம் இவ்வொலி குறிக்கப்பட்டது. குஷானர், உசவதத்தர் ஆகியோர் கீழ் நோக்கிய கோட்டை மிக நீளமாக எழுதினர். க்ஷத்ரப, இக்ஷ்வாகு வம்சத்தினர், கீழ் நோக்கிய கோடாயின் அதனை நுனிப்பகுதி மட்டும் இடப்புறம் திருப்பிய நிலையிலும், வலப்புறம் நோக்கிய கோடாயின் அதனைக் கொக்கி போல வளைத்தும் எழுதியுள்ளனர். பின்னர் நீட்டி எழுதி வளைக்கப்பட்ட குறி, நீளம் குறைந்து, எழுத்தின் கீழே தொடங்கி வலப்புறம் சென்று மீண்டும் இடப்புறமாக வளைக்கப் பட்ட கோடாக, யசோதர்மர், ஹர்ஷவர்த்தனர், பிரதிகாரர் கல்வெட்டுக் களில் காணக் கிடைக்கிறது. ஆனால் வாகாடகர், பல்லவர் (கிரந்தம்) சாளுக்கியர் ஆகியோர் இக்கோட்டினைக் கீழே இணைந்த இணை கோடாக எழுதி விட்டனர். இம்முறையே இறுதி வரை பல்லவர், சோழர், விஜய நகரர் காலக் கிரந்த எழுத்துக்களில் பின் பற்றப்பட்டது. மாறுகத் தமிழ் எழுத்துக்கள் எழுத்தின் கீழே தொடங்கி வலப்புறம் வளைந்து செல்லும் அமைதியைப் பெற்றன. முற்றிலும் மாறுக காகதீய ரெட்டி மன்னர்கள் எழுத்தின் வலப்புறம் பிறை வடிவிலான அமைதியில் இதனைக் குறித்தனர்.

ஊகாரத்தைக் குறிக்கும் குறியீடு (படம் 28) இகர ஈகாரங்களுக் கிடையே உள்ள வேறுபாட்டைப் போன்றதே. உகர ஊகாரங்களுக் கிடையே உள்ள வேறு பாடும் ஆகும். எழுத்தின் அமைதிக்கேற்ப, வலப் புறம் நோக்கியும், கீழ் நோக்கியும், உகரத்தில் ஒற்றையாக இடப்பட்ட கோடு, ஊகாரத்தில் இரட்டையாக இடப்பட்டது. எழுத்தின் கீழே ஒரு கேள்விக்குறி போன்ற வடிவத்தில், இதனை உசவதத்தர், க்ஷத்ரபர் எழுதினர். இரு கோடுகளில் ஒன்று குறுகிவிட மற்றொன்று நீண்டதனால் வந்த மாற்றமே இது. எழுத்திலிருந்து கீழ் நோக்கியிட்ட நீண்ட கோட்டுடன், இரு சிறு கோடுகளையும் இட்டனர். இக்ஷ்வாகு, பல்லவ வம்சத்தினர் இரண்டுள் ஒன்று சிறு கோடாகவே இருக்க, மற்றொன்று வலப்புறம் சென்று இடப்புறம் திரும்பும் பெரிய வளைவாக மாற்றிவிட்டனர். இதையே யசோதர்மன், ஹர்ஷவர்த்தனர் கல்வெட்டுக்களும் காட்டுகின்றன. வாகாட கர், பல்லவர் (கிரந்த) எழுத்துக்களில் இகரத்தைக் குறித்த இணையான கீழே இணைந்த கோடும், கோட்டுடனிணைந்து வலப்புறம் செல்லும் இரண்டு அல்லது ஒற்றைக் கோடாக இது எழுதப்பட்டது. சில பல்லவ எழுத்துக் களில், விரிந்த வட்டமாக விசிறி போன்று அழகாக இக்குறி இடப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது. காகதீயர், ரெட்டி வம்சத்தினர் இக்குறியினை எழுத்தின் வலப்புறம் கொக்கி போன்ற வளைவாக எழுதியுள்ளனர்.


Mauryan 3 c. B.C.
2 c. A.D.
Uṣavadāta c. A.D.
Kṣatrapa 2 c. A.D.
Sātavāhana 2 c. A.D.
Ikṣvāku 3 c. A.D.
Pallava 3-4 c. A.D.
Gupta 4 c. A.D.
Yaśodharman 6 c. A.D.
Harṣavardhana 7 c. A.D.
Pratihāra 9 c. A.D.
Paramāra 11 c. A.D.
12 c. A.D.
Vākāṭaka 5 c. A.D.
Pallava 6 c. A.D.
W. Cāḷukya 6 c. A.D.
E. Cāḷukya 10 c. A.D.
Kākatīya 12 c. A.D.
Reddi 13 c. A.D.
Pallava 7 c. A.D.
Pallava 8 c. A.D.
Cola 11 c. A.D.
Vijayanagar 15 c. A.D.

படம் 27

உகரத்தைக் குறிக்கும் குறியீடு (படம் 28): எழுத்தின் அமைதிக்கு ஏற்ப, எழுத்தின் அடியில் வலப்புறம் நோக்கியோ அல்லது கீழ் நோக்கியோ ஒரு சிறு கோடிடுவதன் மூலம் இவ்வொலி குறிக்கப்பட்டது. குஷானர், உசவதத்தர் ஆகியோர் கீழ் நோக்கிய கோட்டை மிக நீளமாக எழுதினர். க்ஷத்ரப, இக்ஷ்வாகு வம்சத்தினர், கீழ் நோக்கிய கோடாயின் அதனை நுனிப்பகுதி மட்டும் இடப்புறம் திருப்பிய நிலையிலும், வலப்புறம் நோக்கிய கோடாயின் அதனைக் கொக்கி போல வளைத்தும் எழுதியுள்ளனர். பின்னர் நீட்டி எழுதி வளைக்கப்பட்ட குறி, நீளம் குறைந்து, எழுத்தின் கீழே தொடங்கி வலப்புறம் சென்று மீண்டும் இடப்புறமாக வளைக்கப் பட்ட கோடாக, யசோதர்மர், ஹர்ஷவர்த்தனர், பிரதிகாரர் கல்வெட்டுக் களில் காணக் கிடைக்கிறது. ஆனால் வாகாடகர், பல்லவர் (கிரந்தம்) சாளுக்கியர் ஆகியோர் இக்கோட்டினைக் கீழே இணைந்த இணை கோடாக எழுதி விட்டனர். இம்முறையே இறுதி வரை பல்லவர், சோழர், விஜய நகரர் காலக் கிரந்த எழுத்துக்களில் பின் பற்றப்பட்டது. மாறுகத் தமிழ் எழுத்துக்கள் எழுத்தின் கீழே தொடங்கி வலப்புறம் வளைந்து செல்லும் அமைதியைப் பெற்றன. முற்றிலும் மாறுக காகதீய ரெட்டி மன்னர்கள் எழுத்தின் வலப்புறம் பிறை வடிவிலான அமைதியில் இதனைக் குறித்தனர்.

ஊகாரத்தைக் குறிக்கும் குறியீடு (படம் 28) இகர ஈகாரங்களுக் கிடையே உள்ள வேறுபாட்டைப் போன்றதே. உகர ஊகாரங்களுக் கிடையே உள்ள வேறு பாடும் ஆகும். எழுத்தின் அமைதிக்கேற்ப, வலப் புறம் நோக்கியும், கீழ் நோக்கியும், உகரத்தில் ஒற்றையாக இடப்பட்ட கோடு, ஊகாரத்தில் இரட்டையாக இடப்பட்டது. எழுத்தின் கீழே ஒரு கேள்விக்குறி போன்ற வடிவத்தில், இதனை உசவதத்தர், க்ஷத்ரபர் எழுதினர். இரு கோடுகளில் ஒன்று குறுகிவிட மற்றொன்று நீண்டதனால் வந்த மாற்றமே இது. எழுத்திலிருந்து கீழ் நோக்கியிட்ட நீண்ட கோட்டுடன், இரு சிறு கோடுகளையும் இட்டனர். இக்ஷ்வாகு, பல்லவ வம்சத்தினர் இரண்டுள் ஒன்று சிறு கோடாகவே இருக்க, மற்றொன்று வலப்புறம் சென்று இடப்புறம் திரும்பும் பெரிய வளைவாக மாற்றிவிட்டனர். இதையே யசோதர்மன், ஹர்ஷவர்த்தனர் கல்வெட்டுக்களும் காட்டுகின்றன. வாகாட கர், பல்லவர் (கிரந்த) எழுத்துக்களில் இகரத்தைக் குறித்த இணையான கீழே இணைந்த கோடும், கோட்டுடனிணைந்து வலப்புறம் செல்லும் இரண்டு அல்லது ஒற்றைக் கோடாக இது எழுதப்பட்டது. சில பல்லவ எழுத்துக் களில், விரிந்த வட்டமாக விசிறி போன்று அழகாக இக்குறி இடப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது. காகதீயர், ரெட்டி வம்சத்தினர் இக்குறியினை எழுத்தின் வலப்புறம் கொக்கி போன்ற வளைவாக எழுதியுள்ளனர்.


Maurya 3 c. B.C.
Kuṣāṇa 2 c. A.D.
Uṣavadāta c. A.D.
Kṣatrapa 2 c. A.D.
Sātavāhana 2 c. A.D.
Ikṣvāku 3 c. A.D.
Pallava 3-4 c. A.D.
Gupta 4 c. A.D.
Yaśodharman 6 c. A.D.
Harṣavardhana 7 c. A.D.
Pratihāra 9 c. A.D.
Paramāra 11 c. A.D.
Rana 12 c. A.D.
Vākāṭaka 5 c. A.D.
Pallava 6 c. A.D.
W. Cālukya 6 c. A.D.
E. Cālukya 10 c. A.D.
Kākatīya 12 c. A.D.
Reḍḍi 13 c. A.D.
Pallava 7 c. A.D.
Pallava 8 c. A.D.
Cola 11 c. A.D.
Vijayanagar 15 c A.D.

படம் 27



Mauryan 3 c. B.C.
Kuṣāṇa 2 c. A.D.
Uṣavadāta c. A.D.
Kṣatrapa 2 c. A.D.
Sātavāhana 2 c. A.D.
Ikṣvāku 3 c. A.D.
Pallava 3-4 c. A.D.
Gupta 4 c. A.D.
Yaśodharman 6 c. A.D.
Harṣavardhana 7 c. A.D.
Pratihāra 9 c. A.D.
Paramāra 11 c. A.D.
Sena 12 c. A.D.
Vākāṭaka 6 c. A.D.
Pallava 5 c. A.D.
W. Cālukya 6 c. A.D.
E. Cālukya 7 c. A.D.
E. Cālukya 10 c. A.D.
Kākatiya 12 c. A.D.
Reddi 13 c. A.D.
Pallava 7 c. A.D.
Pallava 8 c. A.D.
Cola 11 c. A.D.
Vijayanagar 15 c. A.D.

படம் 28

'ரு' என்னும் ஒலியின் குறி (படம் 29) : தமிழ் மொழியில் இல்லாத இந்த ஒலியினை அசோகர் கல்வெட்டு முதலே காண்கிறோம். இது எழுத்தின் அடியில் இடப்புறமாக சிறிது வளையும் ஒரு குறியாக முதலில் இடப்பட்டது. இதுவே சற்று நீண்டு பல்லவர் எழுத்துக்களில் உள்ளது. குப்தர், யசோதர்மர், ஹர்ஷவர்த்தனர் எழுத்துக்களில், எழுத்தின் அடியில் தொடங்கி, இடப்புறம் சென்று பின் வலப்புறம் திரும்பிய அரை வட்டவடிவில் இக்குறி காணப்படுகிறது. பிற்காலத்தில் வாகாடகர், பல்லவர், சாளுக்கியர், சோழர் (கிரந்தம்) ஆகிய அனைவருமே பெரிதும் மாற்றம் இன்றி இதே வழியைக் கடைப் பிடித்துள்ளனர். ரெட்டி மன்னர்கள் மாத்திரம், இதனை எழுத்தினின்றும் தனியாக, எழுத்தின் உச்சியிருக்கும் உயரத்தில் தொடங்கி, கீழே எழுத்தின் இடப் புறம் வரை சென்று முடியும் அளவு இக்குறியீட்டினை எழுதியுள்ளனர்.

பிற்காலத்து வடபகுதிக் குப்தர் கல்வெட்டு எழுத்துக்களுக்குத் தாயாக அமைந்தவை வடஇந்தியக் குஷானர் எழுத்துக்களே ஆகும். இவ்வகைக் குப்தர் எழுத்துக்களைச் சமுத்திர குப்தனின் அலகாபாத் ஜயஸ் தம்பத்தில் காணலாம் (Fleet C. In. Ind III p. 1). குப்தர் கல்வெட்டெழுத்துக்களைப் பரவிய இடம் நோக்கி, வடபகுதி, மத்தியபகுதி, தென் பகுதி என்று மூவகையாகப் பிரிக்கலாம். அலகாபாத் மெய்க்கீர்த்திக் கல்வெட்டு வடபகுதி முறைக்கும், சமுத்திரகுப்தனின் இரான் கல்வெட்டும் (Ibid p. 18), இரண்டாம் சந்திரகுப்தனின் உதயகிரிக் கல்வெட்டும் (Ibid p. 21) மத்தியப் பகுதி முறைக்கும் சான்றாக அமைகின்றன. முன்னதில் பெட்டித் தலை முறையும் நகத்தலை முறையும் இணைந்தும், இரண்டாவதில் நகத்தலை மட்டும் இடம் பெறுகின்றன. இரண்டாம் சந்திரகுப்தனின் காஞ்சிக் கல்வெட்டும், ஸ்கந்தகுப்தனின் ஜூனாகத் கல்வெட்டும் (Ibid p. 56), தென்பகுதி முறைக்கு எடுத்துக்காட்டுக்கள். இவையன்றி சில சிறுபான்மை குறிப்பிடத்தக்க முறைகளும் காணப்படுகின்றன. அவற்றுள் சிறப்பான ஒன்று குமாரகுப்தனின் பில்சத் கல்வெட்டு ஆகும் (Ibid p. 42). இங்கு சமுத்திரகுப்தனின் அரசவைப் புலவரால் எழுதப்பட்ட கவிதை வடிவில் அமைந்த அலகாபாத்தில் உள்ள மெய்க்கீர்த்திப் பகுதி தரப்படுகிறது (படம் 75). சமுத்திரகுப்தனின் தென்னகத் தொடர்பினை இக்கல்வெட்டில் அமைந்த தென்பாணியிலமைந்த எழுத்துக்கள் காட்டுகின்றன. மகரம் இந்தோ-ஸ்கித்திக் முறையில் உள்ளது. ஒகர உயிர் எழுத்து தனித்தன்மையில் 3-ஆம் வரியில் (கோசத) இருப்பதைக் காணலாம்.



படம் 75

सुचरितशतालङ्कृतानेकगुणोत्सिक्तिभिश्चरणतलप्रमृष्टान्यनरपतिकीर्त्तेः

साध्वसाधुदयप्रलयहेतुपुरुषस्याचिन्त्यस्य भक्त्यवनतिमात्रग्राह्यमृदुहृद

यस्यानुकम्पावतोनेकगोशतसहस्रप्रदायिनः कृपणदिनानाथातुरजनो

द्धरणसन्त्रदीक्षाभ्युपगतमनसः समिद्धस्य विग्रहवतो लोकानुग्रहस्य

धनदवरुणेन्द्रान्तकसमस्य स्वभुजबलविजितानेकनरपतिविभवप्रत्य

र्प्पण.नित्यव्यापृतायुक्तपुरुषस्य निशितविदग्धमतिगान्धर्व्वललितै

र्व्रीडितत्रिदशपतिगुरुतुम्बुरुनारदादेर्व्विद्वज्जनोपजीव्यानेक

काव्यक्रियाभिः प्रतिष्ठितकविराजशब्दस्य सुचिरस्तोतव्यानेका

द्भुतोदारचरितस्य लोकसमयक्रियानुविधानमात्रमानुषस्य

சமுத்திரகுப்தனின் இரான் கல்வெட்டு (Ibid p. 20) பெட்டித்தலை முறையையும் நகத்தலை முறையையும் கொண்டுள்ளது. தென்பாணியில் அமைந்த சில தனியியல்புகளைக் கொண்ட மத்திய இந்திய முறையினது. முதல் வரியில் நகத்தலையும் பின்னிரு வரிகளில் பெட்டித்தலையும் இவ்வெழுத்துக்களில் இலங்குகின்றன.



படம் 76

वभूव धनदान्तकतुष्टिकोपतुल्यः

यस्य रिपवश्चरणोर्जितानि

प्मान्तरेष्वपि विचिन्त्य परित्रसन्ति

பழைய வடபகுதிக் குப்தர் கல்வெட்டெழுத்துக்களின் வளர்ச்சியினைத் தோரமானன், யசோதர்மன் ஆகியோர் கல்வெட்டுக்களில் காண்றோம். இங்கு தான் அழகிய நாகரி எழுத்தின் தொடக்கமும் உள்ளது. இங்குபிராம்மி எழுத்துக்களினின்று மாற்றம் வந்து விடுகிறது. பழைய குப்தரின் கல்வெட்டுக்கும் 7–ஆம் நூற்றாண்டு நாகரி எழுத்துக்கும் இடையே உள்ள படியினை இங்கு நாம் காண்கிறோம். இவ்வழகிய எழுத்துருவங்களை ஹர்ஷவர்த்தனரின் பன்ஸ்கெர, மதுவன் செப்பேடுகளில் காணலாம். இங்கு யசோதர்மனின் மாண்டசார் கல்வெட்டுப் பகுதியைக் காணலாம்.



आलौहित्योपकण्ठात्तलवनगहनोपत्यकादामहेन्द्रादागङ्गाश्लिष्टसानोस्तुहिन
शिखरिणः पश्चिमादापयोधेः सामन्तैर्यस्य बाहुद्रविणहृतमदैः मादयो
रानमद्भिश्चूडारत्नांशुराजिव्यतिकरशबला भूमिभागाः क्रियन्ते॥ स्थाणोरन्यात्रयेन प्र
णतिकृपणतां प्रापितं नोत्तमाङ्गं यस्याश्लिष्टो भुजाभ्यां वहति हिमगिरिर्दुर्ग
शब्दाभिमानं नीचैस्तेनापि यस्य प्रणतिभुजबलावर्ज्जना क्लिष्टमूर्ध्नां चूडापुष्पो
पहारैर्म्मिहिरकुलनृपेणार्च्चितं पादयुग्मं॥ (गा)मेवोन्मातुमूर्द्ध्वं विगणयितुमिव

7. 8-ஆம் நூற்றாண்டுகளில் நாகரி எழுத்தின் வளர்ச்சி சிறப்புடையது. இக்காலத்தில் எழுத்துக்கள் அழகாக எழுதப்பட்டு அணி செய்யப்பட்டன. இலக்காமண்டல மெய்க்கீர்த்தி (E. I. I. p. 10) எழுத்துக்களும், மகாநாமனின் புத்தகயைக் கல்வெட்டும் (Fleet C. Ins. In III p. 274) குறிப்பிட்ட சில பண்டைய வடிவங்களைக் கொண்டு விளங்குகின்றன. இதே காலத்தைச் சார்ந்த ஹர்ஷவர்த்தனரின் செப்பேடுகளில் சிறிது வேறுபட்ட வடிவங்கள் காணப்படுகின்றன. மேலும் கீழுமாக எழுதப்படும் கூட்டெழுத்துக்களில் வளைவுகள் மிக பெரிதாக எழுதப்படுகின்றன. இவ்வெழுத்துக்கள், ஜால்ராபடன் கல்வெட்டுடனும் (Ind. Ant. V p. 180), பந்தனின் பனாஸ் கல்வெட்டுடனும் (E. I. IX p. 60) ஸ்வாமி பட்டனின் தேவ்கார் பாறைக் கல்வெட்டுடனும் (Ibid XVIII p.125) பெரிதும் ஒத்துக் காணப்படுகின்றன. இவ்வெழுத்துக்கள் இந்தியக் கல்வெட்டுக்களில் மிக அலங்காரமாக எழுதப்பட்டவை. இவ்வழகிய எழுத்துக்களைக் கொண்ட கல்வெட்டின் இறுதியில் ஹர்ஷனின் கையொப்பம் மிகச் செம்மையான அலங்காரமான எழுத்தில் காணப்படுகிறது. ப்யூலர் இதனைக் குறிப்பிடுகிறார். அரசியல் வேலைகளுக் கிடையிலும் எல்லா அரசு ஆணைகளிலும் இத்தகைய அழகிய முறையில் ஹர்ஷன் தன் கையொப்பத்தினை இடச்செய்திருக்கின்றான். அவனது கலையார்வம் எண்ணி எண்ணி வியக்கத்தக்கது. சிறந்த கவிஞனாகவும், வீரனாகவும் இலக்கிய கர்த்தாவாகவும் விளங்கியவன் ஹர்ஷவர்த்தனன். இவனுக்கு நிகரான மற்றொருவன் போஜமன்னன். இத்தகைய இடங்களில்அறிவும் திறமையும இருப்பது இயல்பே. இவைபோன்ற அழகிய எழுத்துக்கள், தமிழகத்து மாமல்லை, காஞ்சி கைலாசநாதர் கோயில் ஆகிய இடங்களில் உள்ள எழுத்துக்களை ஒத்தவை செங்குத்துக் கோடுகளின் உச்சி, சிறிது வலப்புறமாகச் சாய்ந்து முடிவதும், கோணமாகத் திரும்புவதும் இதில் தனி முறைகள். இத்தகைய அழகுக்கோண முறை (acute-angled Script),

'குடில'என்று அழைக்கப்படுகிறது. ஆ, இ, ஈ, எ, ஐ, ஒ, ஔ ஆகிய எழுத்துக்குறியீடுகள், சிறகு போலும், படகு போலும், அமைகின்றன. இம்முறையில், மாண்டசார் கல்வெட்டுக்களையும், ஜாலராபடன் மெய்க்கீர்த்தி எழுத்துக்களையும் இது ஒத்துள்ளது. மேற்பகுதியில் திறந்த அரை வட்ட வடிவில் உச்சியில் சுருண்ட நுனி கொண்டதாக எழுதி 'உபத்மானியத்தைக்' குறித்தனர். இங்குள்ள பகுதி, ஹர்ஷவர்த்தனரின் பன்ஸ்கேராச் செப்பேட்டினின்றும் எடுக்கப்பட்டுள்ளது. (Ibid IV. p. 208)

நாகரி எழுத்தின் வளர்ச்சியை 8, 9-ஆம் நூற்றாண்டில் கங்கைச் சமவெளியில் ஆண்ட பிரதிஹாரர் கல்வெட்டில் காணலாம். யசோதர்மனின் கல்வெட்டிலும் 7- ஆம் நூற்றாண்டு எழுத்துக்களிலும் காணப்பட்ட



படம் 78

ओ स्वस्ति महानौहस्त्यश्वजयस्कन्धावाराच्छीवर्धमानकोटया महाराजश्रीनरवर्द्धनस्तस्य पुत्रस्तत्पादानुध्यात

श्शीवज्रिणीदेव्यामुत्पन्नः परमादित्यभक्तो महाराजश्रीराज्यवर्द्धनस्तस्यपुत्रस्तत्पादानुध्यातश्श्रीमद

प्सरोदेव्यामुत्पन्नः परमादित्यभक्तो महाराजश्रीमदादित्यवर्द्धनस्तस्यपुत्रस्तत्पादानुध्यातश्श्रीम

हासेनगुप्तादेव्यामुत्पन्नश्चतुस्समुद्रातिक्रान्तकीर्त्तिः प्रतापानुरागोपनतान्यराजोवर्णाश्रम

व्यवस्थापनप्रवृत्तचक्र एकचक्ररथ इव प्रजानामर्त्तिहरः परमादित्यभक्तः परमभट्टारक

महाराजाधिराजश्री प्रभाकरवर्द्धनस्तस्य पुत्रस्तत्पादानुध्यातस्सितयशः प्रतानविच्छुरित

सकलभुवनमण्डलः परिगृहीतधनदवरुणेन्द्रप्रभृतिलोकपालतेजास्सत्पथोपार्ज्जिता

नेकद्रविणभूमिप्रदानसंप्रीणितार्थिहृदयोतिशयितपूर्वराजचरितो देव्याममल

यशोमत्या श्रीयशोमत्यामुत्पन्नः परमसौगतस्सुगत इव परहितैकरतः परमभट्टारक

பிராம்மிச் சாயல் முழுவதுமாக மறைந்து பிற்கால வடிவம் இடம் பெறுகிறது. கன்யாகுப்ஜத்து காகதவேலரின் கல்வெட்டுக்களில் இதனினும் வளர்ச்சி பெற்ற நாகரி எழுத்துக்கள் காணப்படுகின்றன. ஏறக்குறைய இன்றைய நாகரி எழுத்தின் சாயல் இங்கேயே வந்து விடுகிறது. மேலே இடப்படும் படுக்கைக் கோடு எழுத்து முழுவதையும் அடக்கும் அளவிற்கு நீண்டு விட்டது. எழுத்துக்கள் நெருக்கமாகவும், மெல்லியதாகவும், உயரத்துடனும் எழுதப்பட்டன. 11-ஆம் நூற்றுண்டில் நாகரியின் வளர்ச்சியினை அக்காலத்து ஆண்ட பரமாரர் கல்வெட்டுக்களில் காணலாம். சிறந்த கவிஞனுக, இலக்கண ஆசிரியனுக, கட்டிட நிபுணனுக, யோகம் வல்லோனுக, அரசியல் நிர்வாகியாக, படைத்தளபதியாக, இலக்கியப் புரவலனுக விளங்கிய போஜனின் பன்ஸ்வராச் செப்பேடு இதற்குச் சிறந்த சான்று ஆகும்.

வடகிழக்கு இந்தியாவில் 11-ஆம் நூற்றுண்டின் இறுதியில், நாகரியின் வளர்ச்சியில் குறிப்பிட்ட படி ஏற்பட்டது. அதுவே வங்காளத்திற்கு அடிப்படை ஆயிற்று. விஜயசேனனின் தேவ்பார் கல்வெட்டு (Ibid I p. 305) *இம்மாற்றத்தினை மிகத் தெளிவாகக் காட்டுகிறது. இவை வடஇந்திய முறையினின்றும் மாறுபட்டது. இதனின்று மிகக் குறைந்த கால வேறுபாடு கொண்ட, வைத்யதேவனின் செப்பேடு*



Plate 79

उच्चित्राणि दिगम्बरस्य वसनान्यर्धाङ्गनास्वामिनो रत्नालंकृतिभिर्विशोषितवपुः शोभाः शशंसुस्स्वः
पौराद्यास्त्वपुरीः श्मशानवसतेर्भिक्षाभुजोस्याक्षयां लक्ष्मीं स व्यतनोद्दरिद्रभरणे सुज्ञो हि सेनान्वय ः॥
चित्रक्षौमेमचर्म्मा हृदयविनिहितस्थूलहारोरगेन्द्रः श्रीखण्डक्षोदभस्मा करमिलितमहानीलरत्नाक्षमालः
वेषस्तेनास्य तेने गुरुडवगिलताेगोनसः कान्तमुक्तानेपथ्यनूस्थिरिच्छासमुचितरचनः कल्पकापालिकस्य।
बाहोः केलिभिरद्वितीयकनकच्छत्रं धरित्रीतलं कुर्वाणेन न पर्यशेषि किमपि स्वेनेव तेने हितम्। किन्त
स्मै दिशतु प्रसन्नवरदोर्ध्वेन्दुमौलिः परं स्वं सायुज्यमसावपश्चिमदशाशेषे पुनर्हास्यति॥

(Ibid II p. 347) வங்காள எழுத்தின் தொடக்கத்தைத் தெளிவாகக் காட்டுகிறது. இராஷ்டிரகூட மன்னன் துருவனின் பரோடாச் செப் பேட்டில் காணப்படும் 'அவக்கிரஹம்' இங்கு முதன் முதலாகத் தெளிவான வடிவம் பெறுகிறது (ப்யூலர் பக். 91). இந்த வங்காளத்தின் முன்னோடி எழுத்தினை அவர் தொல் வங்காளம் (Proto-Bengali) என்று குறிக்கிறார். இக்கல்வெட்டு மொழியும் மிகச் சிறந்தது. சிறந்த கவிஞராகிய உமாபதி தரனின் படைப்பு இது. அவனுக்குப்பின் வந்த ஜயதேவன் இவனைப் பற்றி वाचः पल्लवयत्युमापतिधरः धेयो कविक्ष्मापतिः।। என்று கூறுகிறான்.

பல்லவர்கள் மிகுந்த அலங்காரமானதும், எளிமையானதும் ஆன நாகரி எழுத்துக்களைக் கிரந்தத் தமிழ்க் கல்வெட்டுக்களை எழுதப் பயன் படுத்தினர். சில பல்லவர் கல்வெட்டுக்கள் முழுவதும் நாகரியிலேயே அமைந்துள்ளன. காஞ்சி கைலாசநாதர் கோயிலில் பட்டப் பெயர்கள் பலவும் எழுதப்பட்டுள்ளன. ஹர்ஷவர்த்தனரின் எழுத்துக்களை யொத்த அணி செய்யப் பெற்ற எழுத்துக்களும், எளிமையான எழுத்துக்களும் ஆகிய இரண்டுமே இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. இங்கு தரப் பட்டுள்ள பகுதி, (படம் 90) மாமல்லையை அடுத்த சாளுவன் குப்பத்தில் காணப்படுகிறது (Ibid X p. 12). தென்னிந்தியாவில் உள்ள பழைய நாகரிக் கல்வெட்டுக்களுள் இதுவும் ஒன்று. அழகிய எழுத்து முறையில் பெரிய வளைவுகளும், சுருள்களும், மயில் போன்ற உருவங்களும் காஞ்சி புரத்தில் உள்ளன. இதிலும் கூட்டெழுத்துக்களும், உயிர்மெய்யெழுத்துக் களும் அன்னம் போலவும், மயில் போலவும், பிற பறவைகள் போலவும் எழுதப்பட்டுள்ளன.

தென்னிந்தியாவில், நாகரியின் வளர்ச்சியை இன்னும் பிற் காலத்திலும் காணலாம். வரகுணனின் பாளையம் செப்பேடு இதனைக் காட்டுகிறது. முதல் பக்கத்தில் தமிழில் தொடங்கி, பின்னர் நாகரியில் இரண்டாம் பக்கத்திலிருந்து இது எழுதப்பட்டுள்ளது. இவை அதிரண சண்டேஸ்வரத்து கல்வெட்டெழுத்துக்களோடு ஒப்புமை உடையதாக இருப்பினும், இராஷ்டிரகூடமன்னன் முதலாம் கிருஷ்ணனின் தலிகோன் செப்பேட்டு எழுத்தமைதி போன்ற வளர்ச்சியினையும் காட்டுகிறது (Ibid XIII p. 275). இந்தியாவின் தென் கோடியில் கிடைக்கும் ஒரே நாகரிக் கல்வெட்டு இதுதான். இச்செப்பேட்டினை முதலில் எடுத்துக் கூறியவர் திரு. கோபிநாதராவ் அவர்கள். செங்கோட்டைக் கருகில் உள்ள ஆய்குடியில் ஆண்ட ஆய்மன்னர்களுடைய செப்பேடு இது. இப்



श्रीमतोत्यन्तकास्य
द्विषद्दर्प्पापहारिणः श्रीनि
धेः कामरागस्य हराराधनसंगि
नः।। अभिषेकजलापूर्णे चित्ररत्नां
बुजाकारे अस्ते विशाले सुमुखः शिरस्सर
सि शंकरः।। तेनेदं कारितं शम्भोर्भव
नं भूयते भुवः कैलासमन्दरनिभं भूभृतां
मूर्ध्नि तिष्ठता।। भक्तिप्रह्वेण मनसा भवभूषणं
लीलया दोष्णा च यो भुवन्धत्ते जीयात्स श्रीभररिच
रम्।। अतिरणचण्डःपतिरवनिभुजामतिर
णचण्डेश्वरमिदमकरोत् ईह गिरितनयागु
हगणसहिततो नियतकृतरतिर्भवतु पशुपति।।

பகுதியினைக் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வரகுணன் தன்னாட்சிக்குட் படுத்தி இருந்தான். இங்கு முதல் ஏட்டின் இரண்டாம் பகுதி தரப்படு கிறது (படம் 81)

தென்னிந்தியாவில் நாகரிக் கல்வெட்டுக்கள் மிகவும் குறைவு. பல்லவர்கள் முதலில் இதனைப் பயன்படுத்தினர். சோழர் காசுகளில் எழுதப்படும் வாசகங்களும் நாகரியில் அமைந்துள்ளன. உத்தம சோழன் இராஜராஜன், இராஜேந்திரன் (கங்கைகொண்டான்) ஆகியோர் காசு களில் நாகரி எழுத்துக்கள் உள்ளன.



ज्योत्सनापूर इवामलश्शशधरादाह्लादयान्मेदिनी यः प्रावर्तत यद्गतेन शशिनं मुक्त्वा कलङ्कः क्वचित्
यस्यास्तेदयहिम्यशैलमलया: सैन्येभदन्तावलीटङ्कक्षुण्णतटा भवन्ति विजय
स्तम्भा जगन्निर्ज्जये॥ असीघस्यविलोलविचिकलिकावाहाग्रफेनावलीप्रेङ्खच्चा
मरचारुचीरचतुरा दासी चतुस्सागरी यज्जातास्य करोति मूर्ध्नि मुकुटीवन्कवन्धो रमाली लाम्भो
रुहमण्डलेनललितां रत्ननातपत्रस्त्रियम्॥ यज्जातेष्वनुवन्धयाजिषु गतेष्वद्यापि तारापथे लक्ष्यन्ते
हयमेधधूमनिकरा लग्ना इवाम्भोधराः यत्रत्यानिव चानुकर्तुमथ ते गत्वा चतुस्सागरीम्वर्धन्त्याहृतमाहृत
म्वसुमतीभूत्यै स्वसासेच्चयम्॥ स्थेया क्षितिभृतां मूर्ध्नि स्फुरन्मुक्ताफलोदयः वंशो वार्ष्णेय भूपानां सोयमा

படம் 82

இதுபோல ஈழத்து விக்கிரம பாகு, விஜயபாகு, லீலாவதி, சாகஸமல்லன், தர்மா சோகன், புவனேகபாகு ஆகியோர் காசுகளிலும் நாகரி எழுத்து உள்ளது. இவை அனைத்தும் ராஜராஜன் காசுகளைப் போன்றே உள்ளன (ஸ்மித் p. 327). 'வீரகேரளஸ்ய' என்று ஒரு புறத்திலும், 'கண்டராங்குசஸ்ய' என்று மறுபுறத்திலும் எழுதப்பட்ட ஒரு வகைக்காசு கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் கேரளத்தில் கிடைக்கிறது. சேரபாண்டிய நாட்டு எல்லைப்புறங்களில் சில இடங்களில் வெகு அருமையாகச் சில செப்பேடுகள் நாகரியில் கிடைக்கின்றன. ஆனால் சோழர் நாட்டில் கல்வெட்டில் கிரந்தமும் தமிழுமே இடம் பெறுகின்றது. எலியட்டின் கருத்துப்படி நாகரி எழுத்துக்கள் கொண்ட பாண்டியர் காசுகள் காலத்தால் முற்பட்டவை (எலியட் p. 119 & pl III p. 129). ஈழத்து முறையில் அமைந்த பாண்டியர் காசுகள் எதிலும் நாகரி எழுத்துப் பயன்படுத்தப்படவில்லை. தமிழே உள்ளது. எனவே நாகரி எழுதும் பழக்கம், 11-ஆம் நூற்றாண்டுக்குப் முந்தியதாகவோ, 12-ஆம் நூற்றாண்டுக்குப் பிந்தியதாகவோ இருத்தல் வேண்டும். பல்லவர்களால் முதலில் பின்பற்றப்பட்ட இம்முறை பின்னர், சோழர்களாலும் ஈழத்து மன்னர்களாலும் கைக்கொள்ளப்பட்டிருக்கும். இதில் எழுதப்பட்ட எழுத்தும், வரிக்கு வரி பிரிக்கும் கோடும் இதனை உறுதிப்படுத்துகின்றன. இத்தகைய முறையினைக் கன்னட எழுத்துக்களைக் கொண்ட போசளர் காசுகளிலும், 'தலக்காடு கொண்ட' என்று நாகரியில் எழுதப்பட்ட விஜயநகரர் காசுகளிலும்

காணலாம். விஜயநகரர் காலம் தொடங்கி, நாகரியில் செப்பேட்டு வாசகங்கள் அமைய, கையொப்பம் மாத்திரம் தெலுங்கு கன்னட எழுத்தில் அமைந்தது. இதுவே காசுகளிலும் ஆளப்பட்டது. இது நந்திநாகரி என்று பெயர் பெற்றது. பழைய யாதவர், காகதீயர் ஆகியோரின் நாகரி எழுத்தின் வளர்ச்சியே இது.

மேற்கு இந்தியாவில் காணப்படும் பழைய நாகரி எழுத்துக்களுக்கு, தந்திதுர்க்கனின் சமன்காட்டுச் செப்பேடும், 2-ஆம் கீர்த்திவர்மனின் பட்டடக்கல் தூண் கல்வெட்டும் சிறந்த சான்றுகள் (E. I. III p. 1). இத்தூண் கல்வெட்டு எழுத்துக்கள், மகாநாமனின் புத்தகயைக் கல் வெட்டுக்கும், சமன்காட்டுச் செப்பேட்டுக்கும் இடைப்பட்ட வளர்ச்சியினைக் காட்டுகிறது என்பது பிளீட் அவர்கள் கருத்து. இவ்வெழுத்துக்களின் உச்சியில், சிறிய முக்கோண வடிவ அழகுக்கோடும் இடப்பட்டுள்ளது. சாளுவன் குப்பம், காஞ்சி ஆகிய இடங்களில் முதலில் நாகரிக் கல்வெட்டுக் கள் இருந்தும் கூட, பின்னர் அப்பகுதியிலும் இவ்வெழுத்துக்கள் மறைந்து விட்டன. தக்காணத்திலும மேலை இந்தியாவிலும் நாகரி எழுத்துக்கள், இராஷ்டிரகூடர்களாலும் பாதாமிச் சாளுக்கியர்களாலும் பயன்படுத்தப் பட்டன. இங்கு பாதாமிச் சாளுக்கியர்தம் கல்வெட்டுப்பகுதி தரப் படுகிறது. இதுவும் சாளுவன்குப்பம்; காஞ்சி ஆகிய இடங்களில் உள்ள பல்லவர் தம் நாகரியுமே தென்னகத்தில் உள்ள காலத்தால் முற்பட்ட நாகரிக் கல்வெட்டுக்கள் ஆகும்.





தக்காணத்தில் தொடர்ந்து இராஷ்டிரகூட மன்னர்களாலும், யாதவராயர், காகதீயர்களாலும் நாகரி பயன்படுத்தப்பட்டது. இறுதியாகத் தென்னகத்தில் விஜயநகர மன்னர்களால் நாகரி எழுதப்பட்டது. 15-ஆம் நூற்றாண்டு முதல் இது உன்னத நிலையை அடைந்தது. கன்னடமும், தமிழ்-கிரந்தமும் கல்வெட்டுக்களில் சிறப்பிடம் பெற்றாலும் செப்பேடுகளின் நாகரியே முதலிடம் பெற்றது. கையொப்பம் மட்டும் கன்னடத்தில் இடப்படும். ஸ்ரீஹரிஹரன் என்பது போல மன்னன் பெயரோ, அல்லது ஸ்ரீவிருபாக்ஷர், ஸ்ரீத்ரையம்பதா என்பது போல இறைவன் பெயரோ மட்டும் கன்னடத்தில் அமையும். யாதவர், காகதீயர் எழுத்திினின்றும் பிறந்த நந்திநாகரியினையே இவர்கள் எழுதினர். இவ்வெழுத்துக்களின் ஒழுங்கற்ற தன்மைக்குப் பனையோலைகளில் எழுதிய பழக்கம்தான் காரணம் போலும்! (பர்னல்பக் : 53) தெலுக்கு கன்னடம் போன்ற வட்ட வடிவ எழுத்துக்கள் பனையோலைகளில் அழகாக எழுதப்பட்டாலும், நாகரி நேர்கோடுகளாதலின் இம்முமறை நிலைத்தது. 15-ஆம் நூற்றாண்டு எழுத்துக்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் 2-ஆம் தேவராஜனின் சத்யமங்கலச் செப்பேட்டுப் பகுதி இங்கு தரப்படுகிறது (படம் 84). இது விஜயபூபதியின் தண்டபள்ளிச் செப்பேட்டு எழுத்துக்களோடு ஒப்புமையுடையது. (E. I. XIV. P. 68)

மத்திய இந்தியாவில் வளர்ந்த இவ்வெழுத்து தென்னப்பாணியில் ஆனால் பெட்டித்தலை வடிவம் கொண்டு இருந்தது. சமுத்திரகுப்தனின் இரான் கல்வெட்டே பெட்டித்தலை எழுத்துக்களில் பழமையானது. இதில் நகத்தலை முறையும் பரவிக் காணப்படுகிறது. சமுத்திர குப்தனின் உதய கிரிக் குகைக்கல்வெட்டும் இவ்வெழுத்து முறையில் அமைந்து பழமையான ஒன்று. இவ்வமைப்பு முறையில் இடம் பெற்ற சிறந்த கல்வெட்டுக்கள் வாகாடகருடையவை. பிருதிவிசேனனின் நச்சினேகிதலாய்



படம் 84

கல்வெட்டே வாகாடகர் கல்வெட்டுக்களுள் பழமையானது. எழுத்தின் உருவம் சரியாகத் தெரியாவிடினும், பெட்டித்தலை மிகத்திருத்தமாக உள்ளது. சில இடங்களில் பெட்டித்தலை இல்லாமலும் இவர்கள் எழுதினர். 2-ஆம் பிரவரசேனனின் சிவனிச் செப்பேட்டில் பெட்டித்தலை முறை இருக்க, அதே மன்னனின் துடியாச் செப்பேட்டில் இம்முறை காணப்படவில்லை.

भूयस्यै भवतां भूयै भूयादाश्चर्यकुंजरः
विहारविपिनं यस्य विदुर्वेदान् पुराविदः। क्षे
मं व प्रचुरीकुर्य्यात् क्षोणीमभ्युद्वहन्नयं क्रोडा
कृतेरभूद्यस्य क्रीडापल्वलमंबुधिः। अस्ति क्षी
रार्णवोभ्दूतमपां पुष्पमनुत्तमं। अम्लानं यद
निर्माल्यमाधत्ते शिरसीश्वरः। सदामोदनिधेस्त
स्य संतानो यदुसंज्ञया। अभूदाश्चर्यमाधुर्य्यं वसु
धायास्तपः फलं। संगमो नाम राजासीत्सारभू
तं तदन्वये। प्रजानां यः ममस्तानां प्रमोदो मूर्त्ति
मानिव सर्वरत्ननिधेस्तस्य संम्राडासीत्तनूभुवां
मध्ये बुक्कमहीपालो मणीनामिव कौस्तुभः॥

வாகாடகர்களும், கதம்பர்களும், குப்தர்களோடு அரசியல் தொடர்பு மட்டும் இன்றி மணவினைத் தொடர்பும் கொண்டிருந்தனர். எனவே வழக்கங்களும் இயல்பாகவே பரிமாறப்பட்டிருந்தன. பழைய கதம்பர் கல்வெட்டுக்களில் உள்ள பெட்டித்தலை எழுத்துக்கள் குறிப்பிடத்தக்கவை. காகுத்தவர்மனின் தாளகுண்டாக் கல்வெட்டு சிறப்பானது.



படம் 85

दृष्टम् प्रवरपुत् अग्निष्टोमप्तोर्य्यामोक्थ्यषोडस्यतिरात्रवाजपेयबृहस्पति

सवसाद्यस्कचतुरश्वमेधयाजिनः विष्णुवृद्धसगोत्रस्य संम्राटः वाकाटकानाम्म

हाराजश्रीप्रवरसेनस्य सुनोः सूनोः अत्यन्तस्वामिमहाभैरवभक्तस्य अंसभारस

न्निवेशि तशिवलिङ्गोद्वहनशिवसुपरितुष्टसमुत्पादितराजवंशानाम्पराक्र

माधिगाभागीरथ्यमलजलमूर्द्धाभिषिक्तानान्दशाश्वमेधावभृतस्नातानाम्भा

रशिवानम्महाराजश्रीभवनागदौहित्रस्य गौतमीपुत्रस्य पुत्रस्य वाकाट

कानाम्महराजश्रीरुद्रसेनस्य सूनो अत्यन्तमाहेश्वरस्य सत्यज्जवकारुण्य

இதில் எழுத்துக்கள் நீண்டு குறுகலாக அழகாக எழுதப்பட்டு உள்ளன. வாகாடகர் நாட்டின் வழியாகவே இம்முறை தென்பகுதிக்குப் பரவியது. 4, 5-ஆம் நூற்றுண்டுகளில் பல்லவர்கள், கதம்பர், மேலைக்கங்கர், சாலங்காயனர் ஆகியோர் இதனைப் பயன்படுத்தினர். தாளகுண்டாக் கல்வெட்டு கல்லில் எழுதப்பட்டதால் சீரிய வடிவம் பெற்றது போலும்; 1894-இல் திரு. பி. எல். ரைஸ் அவர்களால் வெளியிடப்பட்ட இக் கல்வெட்டுப் பகுதி (E. I. VIII p. 24) *கீழே தரப்பட்டுள்ளது. இது அழகிய சமஸ்கிருதப் பாடல் கல்வெட்டு. எங்கும் காணப்படாத பாவமைதி கொண்டது. சமஸ்கிருத இலக்கியத்திற்குப் பெருமை கூட்டிய கவிஞன் குப்ஜனுல் எழுதப்பட்டது இது.*



படம் 86

अथ बभूव द्विदकुलप्रांशुविचरद्गुणेन्दुंशुमण्डलमृत्यार्षवर्त्महरितीपुत्रमृषिमुख्यमानव्यगोजम् ॥
विविधयज्ञावभृथपुण्याम्बुनियताभिषेकार्द्रमुर्द्धजम् प्रवचनावगाहनिष्णातविधिवत्समिद्धाग्निसोमपम् ॥
प्रणवपूर्व्वषडिवधाध्ध्ययनानर्घमानन्तरालयम् ॥ अकृशचातुर्म्मास्यहोमोष्टिपशुपान्वर्णश्राद्धपौष्टिकम्
अतिथिनित्यसंस्तितावसथसवनत्रयावन्ध्यनैत्यकम् गृहसमीपदेशसंरूढविकसत्कदम्बैकपादपम्
तदुपचारवत्तदास्य तरोस्सानाम्यसाधर्म्यमस्यतत् प्रववृते सतीर्त्थ्यविप्राणां प्राचुर्य्यतस्तद्विशेषणम् ।
एवमागते कदम्बकुलेस्सीमान्बभूव द्विजोत्तमः नामतो मयूरशर्म्मेति स्ततशीलशौचाद्यलंकृतः

கலிங்கத்திலும் அதைச் சுற்றிய நாடுகளிலும் பெட்டித்தலைமுறை வழக்கத்தில் இருந்தது. இப்பகுதியை ஆண்ட நளவம்சத்தினரின் எழுத்து ஏறக்குறைய தாளக்குண்டாக் கல்வெட்டெழுத்தினை ஒத்த அழகுடையது முன்னதின் மெல்லிய எழுத்து முறை. இதில் மாறி சிறிது அகன்ற எழுத்துக்களைக் கொண்டிருப்பது ஒன்றே வேறுபாடு இவ்வெழுத்து முறை கலிங்கர், கீழைச்சாளுக்கியர், கங்கர் ஆகியோராலும் பயன்படுத்தப் பட்டது.

தமிழக மன்னர்களான பல்லவர்கள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் இப்பெட்டித்தலை முறையினைத் தம் எழுத்துக்களில் பயன்படுத்தியுள்ளனர். மங்களூர்ச் செப்பேடு (In Ant V p. 154), உருவப்பள்ளிச் செப்பேடு (Ibid p. 51) பிகிராச் செப்பேடு (E. I. VIII p. 159) இவை சான்றுகள். மங்களூர், பிகிராச் செப்பேடுகளில் இது சிறப்பாக அமையவில்லை எனினும் உருவப்பள்ளி, விளவட்டிச் செப்பேடுகளில் தெளிவாக உள்ளன. வாகாடகர், கதம்பர் எழுத்துக்களில் உள்ளது போலப் பெரிய பெட்டித் தலை இடப்படாவிடினும் தெளிவாகத் தெரியும் அளவில் இவைகளில் உள்ளது. தமிழகத்தின் பெட்டித்தலைமுறை எனக்கூறும் வண்ணம் இது உள்ளது. பல்லவர் செப்பேடுகளை ஒத்த இதன் சாயலை ஜாவாவில் உள்ள பூர்ணவர்மனின் கல்வெட்டுக்களிலும் காணலாம். சிம்மவர்மனின் பிகிராக் கல்வெட்டுப்பகுதி கீழே தரப்படுகிறது.



படம் 87

जितम्भगवता स्वस्तिश्री विजयस्कन्धावारान्मेन्मानूरावासकात्परम ब्रह्मण्य

१ स्य स्वाहुवलार्ज्जितोर्ज्जितक्षात्रतपोनिधर्व्विधिविहितसर्व्वमर्य्यादस्य

स्थितिस्थितस्यामितात्मनो महाराजस्य पृथिवीतलैकवीरस्य स्रीवीरवर्म्मणः प्रपौत्रो

பல்லவர் நாட்டில் உள்ள பெட்டித்தலை எழுத்து முறைக்குச் சிறந்த சான்று விளவட்டிச் செப்பேடுகளே. இது உருவப்பள்ளிச் செப்பேட்டை விட அழகிய எழுத்துக்களைக் கொண்டது. இங்கு நகத் தலை முறையும் விரவி வருகின்றது. குப்தரின் இரான் கல்வெட்டை இது நினைவூட்டுகிறது. இந்தச் செப்பேட்டில் தனித்த தமிழ் அகரமும் இடம் பெறுகிறது. அச்செப்பேட்டின் ஒரு பகுதி இங்கு தரப்பட்டுள்ளது.

இந்தியாவின் மேற்குப் பகுதியிலும், தெக்கணத்தின் வடக்குப் பகுதியிலும் கூட தென்னகப் பாணி எழுத்துக்கள் வளர்ந்தன என்பதைத் திரிகூடகர், மைத்ரகர், மேலைச்சாளுக்கியர் கல்வெட்டுக்கள் மூலம் அறிய

லாம். மைத்ரகர் கல்வெட்டுக்களும் ஸ்கந்த குப்தனின் ஜுனகத் கல்வெட்டு (Fleet C. Ins In III p. 56), குமாரகுப்தனின் மாண்டசார் கல்வெட்டு (Ibid p. 29) ஆகிரவற்றின் வளர்ச்சி வடிவத்தையே பெற்றுள்ளது.



படம் 88

स्वस्ति जितंभगवता स्रीविजयपट्टक्कराविष्ठाने परमब्रह्मण्यस्य स्वबा

हुनिर्ज्जिताज्जितक्षात्रतपोनिधेः विधिविहितसर्व्वमर्य्यादास्थितिस्थित

स्यामितात्मनो महाराजस्य पृथिवितलैकवीरस्य स्रीवीरवम्मणः प्रपौ

त्रस्यात्युच्चितशक्तिसिद्धिसम्पन्नस्य प्रतापोपनतराजमण्डलस्य भग

தெலுங்கு கன்னட எழுத்துக்களுக்குத் தாய் போன்ற பழைய சாளுக்கியர் எழுத்துக்கள் மேற்கிலும் கிழக்கிலும் பரவின. கீழைச் சாளுக்கிய மன்னன் புலிகேசியின் கல்வெட்டு அவன் நாட்டிலேயே உள்ளது. 6-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாதாமிக் குகையில் காணப் படும் மங்களேசனின் கல்வெட்டும் ஐஹொளே, பட்டடக்கல் ஆகிய இடங் களில் உள்ள கல்வெட்டுக்களும், தெலுங்கு கன்னட எழுத்துக்களின் தொடக்க நிலையைக் காட்டுகின்றன. பழைய கதம்பர், மேலைக்கங்கர் எழுத் துக்களினின்றே கன்னட, தெலுங்கு எழுத்துக்களின் வளர்ச்சி வந்தது. மங்களேசனின் கல்வெட்டில் உள்ள குறிப்பிடத்தக்க சில அம்சங்கள், இறுதி வரை தெலுங்கு கன்னட எழுத்துக்களில் நிலைபெற்றன. சாளுக்கிய நாட்டில் அடுத்த மூன்று நூற்றாண்டுகளில் வளர்ந்த வளர்ச்சியினைப் பியூலர் மத்திய வகை (Middle veriety) என்று குறிப்பிகிறார். இம் மாற்றத்தினைப் பழைய சாளுக்கிய, இராஷ்ரகூடர் கல்வெட்டுக்கள் தெளி வாகக் காட்டுகின்றன. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இராஷ்டிரகூட

மன்னன் அமோகவர்ஷனின் நீலகுண்டாச் செப்பேடு, இதன் வளர்ச்சிப் படியினைக் காட்டும் ஒன்றாகும்.

இதற்கு அடுத்த நிலை பியூலரால் 'பழைய கன்னட வடிவம்' என்ற கூறப்படும் மேலைச் சாளுக்கியர் எழுத்துக்கள் ஆகும். பல எழுத்துக்கள் வட்டமாக எழுதப்பட்டன. உச்சியில், வளைகோடோ பிறை வடிவமோ இடப்பட்டது. பெரும்பாலான செங்குத்துக் கோடுகள் வளைகோடுகளாக மாற்றம் பெற்றன. இங்கு தரப்படும் பகுதி 6-ஆம் விக்கிரமாதித்தனின் ஹூளிக் கல்வெட்டினின்றும் (Ibid XVIII p. 19) எடுக்கப்பட்டது.



படம் 89

नमस्तुंगशिरश्चुंबिचंद्रचामरचारवे त्रैलोक्यनगरारंभमू

लस्तंभाय शंभवे ॥ वागर्थाविव संदृक्तौ वागर्थप्रतिपत्तये

जगतः पितरौं वंदे पार्व्वतीपरमेस्वरों। ओं नमः श्वि (य)

स्वस्ति समस्तभुवनाश्रयस्रीपृत्वीवल्लभमहाराजाधिराज

परमेस्वरपरमभट्टारकसत्याश्रयकुलतिलकचालुक्या

இதன் வளர்ச்சியில் இறுதி நிலையைப் பிற்காலச் சாளுக்கியர், ஹொய்சளர் கல்வெட்டுக்களிலும் காணலாம். எழுத்துக்கள் சிறப்பங்களைப் போல அழகாக வட்ட வடிவமாக எழுதப்பட்டன. முன்னர் இருந்த வடிவமே திருத்தமாக எழுதப் பெற்றது. சில இடங்களில் வளைவு கோடுகள் அலங்கார வடிவமாகவே இடப்பட்டது. எழுத்தில் வளைவு களின் இறுதியில் சில மலர்கள், பிற அலங்காரங்கள் இவை வரையப் பெற்றன. இறுதி வளர்ச்சிப் படியினை விஜயநகரர் கல்வெட்டுக்களில் காண்கிறோம். விஜயநகரர் காலத்திற்குப் பின்னர் தான் கன்னட எழுத்து முறையில், தெலுங்கினின்று வேறுபட்ட சில மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன.

எனவே தெலுங்கு கன்னட எழுத்துக்கள் முதலில் தனித்தனியே தொடங்கி, விஜயநகரர் காலத்தில் ஒன்ருகவே எழுதப்பட்டு, மீண்டும் அவர்கள் காலத்திற்குப் பின்னர் தனித்தனியே சில வேறுபாடுகளை ஏற்று வளர்ந்தது. போசளரின் பேலூர்க் கோயிற் செப்பேட்டினின்று இங்குள்ள பகுதி தரப்படுகிறது (E. car V. p. 137). இது கி. பி. 1117-ஐச் சார்ந்தது.

படம் 90

स्रीमत्रैलोक्यपूज्याय सक्षिकर्म्म
सु साक्षिणे फलदाय नमो नित्यं
केशवाय शिवाय च ॥ स्रीशोदरांबुजभ
वादुदितोत्रिरत्रि जातेन्दुपुत्रबुधपु
त्रपुरूरवस्तः आयूस्ततश्च नहषो नहु

षाद्ययातिः तस्माद्यदुर्य्यदुकुले
बहवो बभूवुः॥ ख्यातेषु तेषु
नृपतिः कथितः कदाचित् कश्चिद्वने मुनि
वरेण शलः करालं शर्दूलकं प्र
ति हि पोय्सल इत्यत्रोभूत्तस्याभिधा
मुनिवचोपिचमूरलक्ष्मं ॥ ततो

தக்காணத்தின் தென்கிழக்குப் பகுதியிலும், கடலோரப் பகுதியிலும் வளர்ந்த தெலுங்கு எழுத்துக்களை, மேற்குப் பகுதியில் இருந்த கன்னடத்தோடு இணைத்துப் பார்ப்பது அவசியமாகிறது. மிக அலங்காரமாக எழுதப் பெற்ற இக்ஷுவாகு, பண்டைப் பல்லவர் எழுத்துக்களுக்குப் பின்னர், பிராம்மி எழுத்தின் வளர்ச்சியினைக் கிருஷ்ணை ஆற்றங்கரையில் உள்ள சாலங்காயனர் கல்வெட்டுக்களில் காணலாம். பிராம்மி எழுத்துக்களைப் போலவே, சிறிதும் அலங்காரம் இன்றி எழுதப்பட்டவை சாலங்காயனர் எழுத்துக்கள். சிறிய தலைக்கோடு மட்டும் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. இப்பகுதியில் அமைந்த பிராகிருதத்திலான விஜயதேவ வர்மனின் செப்பேடு எளிய பிராம்மியினின்று வேறுபடாத எழுத்துக்களுக்குச் சான்றாகும். தெலுங்குப் பகுதியில் உள்ள எழுத்துக்களின் அடுத்த வளர்ச்சியினை, விஷ்ணுகுண்டின் செப்பேடுகளில் காண்கிறோம். தெலுங்கு இலக்கியத்தின் தொடக்கம் கீழைச்சாளுக்கியர் கல்வெட்டிலேயே உள்ளது. தெலுங்கு இலக்கியங்களான பரதம், நன்னிசோடரின் குமார சம்பவம், ஆகியவையும், போதன்னவின் பாகவதம், ஸ்ரீநிதியின் நைஷதம் அனைத்தும் பிற்காலத்தவையே ஆகும். பழைய தெலுங்கு இலக்கியங்கள் கல்வெட்டுக்களிலேயே உள்ளன. தளபதி பாண்டரங்கனின் செயற்கருஞ் செயல் கூறும் கல்வெட்டே இதற்குச் சான்றாகும். பண்டைய எழுத்துக்கள் கீழைச் சாளுக்கியருடையவையே. இவையும் குப்ஜ விஷ்ணுவர்த்தனர் அதாவது மேலைச்சாளுக்கிய விஷ்ணுவர்த்தனரின் தம்பி புலிகேசியின் காலத்தவையே ஆகும். பிற்காலத்துத் தெலுங்கு எழுத்தில் சில வளர்ச்சிப் படிகள் தோன்றினாலும், அதன் ஆதியான மேற்குப் பகுதியில் இருந்த எழுத்தமைதியினை இது விடவில்லை.

இரு நூற்றாண்டுகளில் இவ்வெழுத்துக்களில் மிகுந்த மாற்றம் ஏற்பட்டது. பிற்கால வளர்ச்சியினை இவ்விடைக்காலத்தில் பெற்று

விட்டது. கீழைச்சாளுக்கியர்தம் செப்பேடுகளை இயற்றிய புலவன் ஒருவனால் பாடப்பட்ட பாடல் வடிவில் அமைந்த 3-ஆம் விஜயாதித்தனின் மசூலிப்பட்டணம் செப்பேட்டுப் பகுதி (Ibid V p. 122) இம்மாற்றங்களைக் காட்டுவதாக அமைகிறது. அப்பகுதி இங்குத் தரப்படுகிறது.



படம் 91

राजः॥ यस्मिन्नारूढदन्तिन्यरिकुलमधिसंरोहति क्ष्माभृदग्रं पद्घाहावाच

खड्गे रिपुयुवतिकरा गृह्णते चामराणि अवद्घायां भ्रकुट्यां मधु रिपु

भवने यस्य बध्नन्ति भृंगा यद्घामन्याजिभेरीध्वननमनु शिवाश्शत्रु

धाम्नि ध्वानन्ति॥ तस्य प्रियतनयः। कान्तेरिन्दुक्षमायाः क्षितिरमरत रुगशक्तेः

प्रतापस्यार्क्कश्शौर्य्यस्य सिंहो जलाधिरपि महासत्वतायामथायं स्थानं

10-ஆம் நூற்றாண்டில் இவ்வெழுத்துக்களின் வளர்ச்சி குறிப்பிடத்தக்கது. சதுர வடிவமாகவும் ஓரங்கள் மட்டும் வளைவுகள் கொண்டும் தனித்தன்மைகள் பெற்று விட்டன. அழகுக்கோடு அழுத்தமாக நகத்தலை போலக் காணப்படுகிறது. இதற்கடுத்த நூற்றாண்டில் இவ்வழகுக் கோடு 'V' வடிவம் பெற்று விடுகிறது. பல குறிப்பிடத்தக்க மாற்றங்களை எல்லா எழுத்துக்களும் பெற்று விடுகின்றன. 2-ஆம் அம்மராஜனின் வந்தரம் செப்பேட்டின் மூலம் இந்த வளர்ச்சியினை நன்கு தெரிந்து கொள்ளலாம்.

11-ஆம் நூற்றாண்டில் கீழைச் சாளுக்கிய கல்வெட்டுக்களில் அழகுக் கோடு சிறப்பிடம் பெறுகிறது. 'V' வடிவில் இடப்பட்ட இது ஏறக்



படம் 92

स्वतिस्त्री॰। जयातहरिवराहः प्रेमसं
भ्रांतपृथ्वीस्तनभरपरिरंभारंभ
दृप्तस्य यस्य। पुलकचुलकितांभः
स्संभवस्तोयराशिः पुनरविगलनि
र्यंतस्वेदपूरैरपूरि॥ हेरंबस्य

विकल्पदतमुकुल गौरीरहस्यो
त्सवप्रत्यासंनविलसदीपकलिका
गंगामृणालांकुरः। देवस्य त्रिपुर
दृह्योविजयिना पुष्पेषुणा मस्त
के विन्यस्तांकुशविभ्रमा विजयते
चूडासुधांशोः कला ॥ पायाद्वः प
रिवर्त्तमानलहरीप्राग्भारमास्फा
ल्यन्सायंकालतरंकेलिषुकरास्क
दंने मंदाकिनीं । देवस्यारभटीपरिभ्र
मकलासंरंभसंभाविनः शंभोरंबु
मृदङ्गवाद्यरचनारंभाय लंबोदरः॥

குறைய எழுத்தின் அளவு பெரியதாகச் சம அளவினதாக மாறியது. பிற்காலத்திய அகர, ஆகார, இகரங்களுக்கு அடிப்படை உருவம் இங்கேயே தொடங்குகிறது. தெலுங்கு எழுத்துக்களில் சிறந்தவையாக விளங்குவன காகதீயரின் கல்வெட்டுக்களே; இதிலுள்ள எழுத்துக்கள் அழகானவை, தெளிவானவை. இதற்குப் பின்னர் உள்ள மாற்றங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழ்ந்தவையே. பகரவர்க்க எழுத்துக்களில் எழுத்தின் அடியில் கீழே சிறு கோடிடுவதைக் கூறலாம். காகதீயரின் அழகிய எழுத்துக்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் ஜெயனின் செப்புருலுக் கல்வெட்டுப் (E. I V. p. 142) பகுதி மேலே தரப்பட்டுள்ளது. இதில் பல எழுத்துக்கள் பிற்கால அமைதியினைப் பெற்று விடுகின்றன. முன்பு போல இன்றி, பிறைவடிவ அழகுக்கோடு இடம் பெறுகிறது.

கிரந்தத்தமிழ் எழுத்துக்களின் முதல் வளர்ச்சிப் படி கன்னட, தெலுங்கு எழுத்து முறையோடு பெரிதும் ஒத்துள்ளது. முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன் ஆகியோரின் எழுத்துக்கள், இந்தியா முழுவதிலும் குறிப்பாகத் தென்னகம் எங்கும் காணப்பட்ட எழுத்துகளினின்றும் பெரிதும் மாறுபடவில்லை. 7-ஆம் நூற்றாண்டு முதல் கிரந்தத்தமிழ் எழுத்து முறையில் தனித்தன்மை வரத் தொடங்குகிறது. இது தொடர்ந்து நிலை பெற்றது. ஒவ்வொரு மொழியும் தனக்கெனத் தனித்தனியே எழுத்துப் பெற்றிருக்க வேண்டும் என்ற



படம் 93

अमेयमायः
अप्रतिहतशासन
अत्यन्तकाम ।
अवनभाजनः

எண்ணத்தின் அடிப்படையிலேயே அவை அமைக்கப்பட்டுள்ளன. சோழர், பாண்டியர், சேரர் நாடுகளில் ஒரே வகையான எழுத்துக்களே உள்ளன. தமிழகத்தின் தென்கோடியிலும், சேரநாட்டிலும் மட்டும் மிக வளர்ந்த வட்டெழுத்துக்களும் இடம் பெறுகின்றன. தெலுங்கு கன்னட எழுத்துகளைப் போல அன்றித்தனியாக வளர்ந்த வடிவம் இது. பல்லவ கிரந்த எழுத்துக்கள் மிகுந்த புகழ் பெற்றிருந்தவை. அதன் பழைய வடிவத்திலமைந்த கல்வெட்டுக்களைத் தென்கிழக்கு ஆசியாவிலும், சில தூரக்கிழக்காசியத் தீவுகளிலும் கூட காண்கிறோம். 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்த இந்தப் பல்லவ கிரந்த எழுத்துக்களில் பல வகைகள் உள்ளன. இதனைத் திரு. துப்ரைல் அவர்கள் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளார் (துப்ரைல் p. 39). அலங்காரமான எழுத்துக்களும், அதே நேரத்தில் எளிய எழுத்துக்களும் உள்ளன. மகேந்திரவர்மனின் குடவரைக் கோயில்களிலும் மாமல்லபுரம் தர்மராஜரதத்திலும், பிற இடங்களிலும் உள்ள இம் மன்னனின் பட்டப் பெயர்களும் கல்வெட்டுக்களும் சான்றுகளாக அமையத் தக்கன. இங்கு தர்மராஜ ரதத்தில் உள்ள பெயர்கள் தரப்பட்டுள்ளன (E. I X p 1). இதில் நான்கு வகையான எழுத்து முறைகளைக் காண்கிறோம். அகரம் நான்கிலும் நான்கு வகையில் எழுதப்பட்டுள்ளது. இரு வகை 'ய'கர 'ம'கரங்கள், மூவகை 'ந'கரங்கள் ஆகியவை இங்கு இடம் பெற்றுள்ளன.

இதினின்று சில காலத்திற்குப் பின் எழுதப்பட்ட, பிற்காலத்துத் தொடர்ந்து வந்த கிரந்தத்தமிழ் எழுத்துக்களுக்கு முன்னோடியாக விளங்கிய கல்வெட்டு ஒன்றும் (படம் 94) இங்கு தரப்பட்டுள்ளது. இதுவே பிற்காலத்து முழு வளர்ச்சி பெற்றது.



படம் 94

श्री अत्यन्तकामपल्लवेश्वरगृहम् ।

95-ஆம் படத்தில் உள்ளது இரண்டாம் நரசிம்மனாகிய இராஜசிம்மனின் காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிற் கல்வெட்டாகும். 7-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்த பல்லவ கிரந்த அமைதிக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இது பாடலாக அமைந்து கல்வெட்டில் இலக்கியமாக இலங்குவது. அகர, ஆகார, இகரங்களில் உள்ள செங்குத்துக் கோடுகளை இணைகோடுகளாக எழுதுவது கிரந்தத்திற்கே உரிய மரபு. இடப்புறம் நுனியில் அகர ஆகாரங்களுக்குச் சுழி இடுவதற்கும், ஆகரத்திற்கு வலப்புறம் கீழே பெரிய வளையம் இடுவதற்கும் உரிய தொடக்கம் இங்கு தான் காணப்படுகிறது. இகரத்திலுள்ள, படுக்கைக் கோடு வளைந்து இடப்புறம் திரும்பி பின் கீழ் நோக்கிச் சாய்ந்த செங்குத்துக் கோடாக எழுதப்படுகிறது. இருபுள்ளிகள், சிறு வட்டங்களாக மாறுகின்றன. உகரம் இணைகோடு போல கீழே இடப்படும். அடிப்புறம் இணைந்த அமைப்பை எழுத்தின் கீழே இடுவதன் மூலம் காட்டப்படுகிறது. ஆகார உயிர்மெய் எழுத்தின் உச்சியில் வலப்புறம் ஒரு பிறை வடிவில் நிற்கும் நெளி கோட்டால் உணர்த்தப்பட்டது. இகர ஐகாரங்கள் முறையே எழுத்தின் உச்சியில் தனி வளையமும் நுனியில் சுருள் கொண்ட வளையமும் இடுவதால் காட்டப்பட்டது. இவ்வாறு பல எழுத்துக்கள் பல புதிய வடிவங்களுடன் விளங்குகின்றன. ஐகார ஒலிக்கு எழுத்தின் இடப்புறம் மேல் கீழாக இருகொம்புகள் இடப்பட்டன.

முதலாம் பரமேஸ்வரவர்மனின் கூரம் செப்பேடு 7-ஆம் நூற்றாண்டில் இருந்த கிரந்த எழுத்தில் அமைந்துள்ளது தமிழை எழுதப் பிராம்மி எழுத்துக்கள் மட்டுமே முதலில் இருந்தது. ஆனால் அதற்குப் பின்னர்



படம் 95

अस्मिन्नुत्वृत्तशत्रुद्विरदघनघटाराजसिंहेन राज्ञा : राज्ञामज्ञाविधेयीकृत

सकलदिशानिर्म्मिते धर्मभाजा शैले कैलासलीलामपहरति गृहे

राजसिंहेस्वराख्यां बिभ्रत्यभ्रंलिहाग्र विरचयतु सदा सन्निधानं वृषाङ्कः॥

कलाचतुरयोषितां रहसि रञ्जने मन्मथस्त्रयीमथनिषेविणं सतततालने वासवः॥

मुनिद्विजसुरद्विषां हृदयदारणे माधवः स्व द्रविणसंपदा सुजनतोषणेवित्तदः॥

தமிழ் எழுத்து வளர்ச்சியின் தொடக்கத்தை இச்செப்பேடு காட்டுவதால் இது மிகவும் வரலாற்றுச் சிறப்புடையது. இச்செப்பேடு பாதி தமிழிலும் அமைந்தது. எனவே கிரந்தம், தமிழ் ஆகிய இரு எழுத்துக்களையும் இச்செப்பேட்டின் மூலம் தெரிந்து கொள்ளலாம். இங்கு தரப்படும் பகுதி கிரந்தத்தில் அமைந்தது. அகர ஆகாரத்தில் இடப்புறம் சுழி இடம் பெறுகிறது. இது போல பல எழுத்துக்களும் சிறுசிறு வளர்ச்சியுருவங்களைப் பெற்று விளங்கின்றது. (படம் 96)

8-ஆம் நூற்றுண்டில் இதனின்றும் மிகக் குறைந்த வளர்ச்சியே காணப்படுகிறது. நந்திவர்மனின் காசாக்குடிச்செப்பேட்டு எழுத்துக்கள் இக்காலத்தைச் சார்ந்தவை.



படம் 96

परमेश्वर इव सर्व्वाधिकदर्शनः परमेश्वरवर्म्मा भरत इव सर्व्वदमन सगर इव कृता
समञ्जसत्यागाः कर्ण्ण इव पुष्कलांगोयः प्रियकव्यो ययातिरिव अनुपनतानां राज्ञा
यस्याज्ञा भवति सर्व्वदा पीला सैव सुहृदाम्प्रयच्छति मुखशोभा कर्णपूरतया चतुरः कला
विलासे नियतम् यश्चांदो भवत्यनंगस्य मुक्तागुणस्तु हृदये मुक्तागण एव
वनितानाम् अगणितनरहयकरिकुलविमर्द्दजनितेन रेणुतुहिनेन अरोपितश
शिमण्डलसादृश्यसहस्रकरबिम्बे पटहरवगर्ज्जतोग्रे विकोशनिर्स्त्रिंशनवि
द्युदाभोगे प्रचरितकुञ्जरजलदे विकालवर्षावतार इव तुंगतुरंगतरंगे प्रच

கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் வழங்கப்பட்ட தமிழ் எழுத்துக்கள் சுமார் 9 அல்லது 10-ஆம் நூற்றாண்டுகளுக்குப் பின்னர் வளர்ச்சி அடையத் தொடங்குகிறது. பெரிய தமிழ்க் கல்வெட்டுக்கள் 7-ஆம் நூற்றாண்டில்தான் முதன்முதலாகத் தமிழகத்தின் தென்கோடிப் பகுதியில் காணப்படுகின்றன. கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கூரம் செப்பேடு தமிழ் எழுத்து முறையினைக் காட்டுவதாக உள்ளது. தமிழ் எழுத்துக்களாலேயே முழுவதும் அமைந்த தமிழ்க் கல்வெட்டுக்கள் மிகக் குறைவே. தமிழகக் குகைக் கல்வெட்டு எழுத்துக்களோடு, மிகச்சில எழுத்துக்களையும் தெரிந்து கொண்டாலே தமிழ்க் கல்வெட்டுக்களைப்



படம் 97

ஸ்ரீ கண்டார் காணு வுலகத்திற்காதல் செய்து நில்லாதெய்
பண்டேய் பரமன் படைத்த நாள்பார்த்து நின்று
நைய்யா தெய் தண்டார் மூப்பு வந்துன்னைத்
தளர்ச்செய்து நில்லா முன்னுண் டேல்லுண்டு
மிக்கது உலகம் மறிய வைம்மினெய்

படித்து விடலாம். சமஸ்கிருதச் சொற்களை எழுதும் இடங்களில், தேவையான சில கிரந்த எழுத்துக்களையும் பயன்படுத்தினர். தமிழுக்கு ஏற்ப சில மாற்றங்களையும் ஏற்றுக் கொண்டனர். அ, ஆ, இ, எ, க, ச, ப, ம, ர, ல, வ ஆகிய எழுத்துக்களில் இரு எழுத்துக்களுக்கும் மிகுந்த ஒப்புமை இருப்பதைக் காணலாம். 97-ஆம் படத்தில் காட்டப்பட்ட பகுதி பல்லவர்தம் இறுதிக்காலத்தது. அழகிய சோழர் எழுத்துக்களுக்கு முற்பட்டது. தந்திவர்மனின் காலத்துத் திருவெள்ளறையில் எழுதப்பட்டுள்ளது. பாடல் வடிவில் அமைந்தது. இப்பாடலை அங்கு எழுதி இருப்பதற்கு உரிய காரணம் போன்றவை தெளிவாகவில்லை. பல்லவ மன்னர்கள், சமஸ்கிருத இலக்கியத்துடன் தமிழ் இலக்கியத்தையும் பெரிதும் ஆதரித்தவர்கள். பின்னர் வந்த சோழர், பாண்டியர்களைப் போலவே இலக்கிய ஆதரவிலும் சிறப்புப் பெற்று இருந்தனர். இலக்கிய உலகில் குறிப்பிடத்தக்க சிறப்புடையது. மொத்தத்தில் கிரந்த எழுத்துக்களை விட தமிழ் எழுத்துக்கள் எளிமையானவை. கிரந்த அகர, ஆகார, 'க'கர 'ர'கரங்களில் இரட்டைக் கோடுகள், ஒற்றையாகத் தமிழில் எழுதப்பட்டன. இகரம் மூன்று எண் போல எழுதப்பட்டது.

கிரந்தத்தோடு நெருங்கிய ஒப்புமையுடையதாக பாண்டிய மன்னர்கள் எழுத்துக்களை எழுதினர். இவை தமிழகத் தென்பகுதிகளில் காணப்படுகின்றன. இங்குபாண்டியரின் கல்வெட்டுப் பகுதி தரப்பட்டுள்ளது (Ibid VIII p. 320). *(படம் 98)*

வட்டெழுத்துக்களோடு கலந்து எழுதப்பட்ட 8-ஆம் நூற்றுண்டுக் கிரந்தக் கல்வெட்டு இது. தமிழ் எழுத்துக்கள் இங்கு இடம் பெறவில்லை தமிழ்முறையில் அமைந்திருப்பினும், சமஸ்கிருத மொழியினை எழுத கிரந்தமே இங்கு சிறப்பிடம் பெறுகிறது. இடையில் வரும் தமிழ் எழுத்து, வட்டெழுத்தாக அமைகிறது.

பல்லவர் காலத்திற்குப் பின்னர் சோழர் காலத் தொடக்கத்தில் ஏற்பட்ட கிரந்த எழுத்துக்களின் வளர்ச்சியை உத்தமசோழனின் சென்னை அருங்காட்சியகச் செப்பேட்டில் (S. I. I. III p. 264) காணலாம். வலப்புறம் கோணமாகத் திரும்பிய வடிவம், எல்லா எழுத்துக்களிலும் மாறி வளைவாகத் திரும்பியது. க[2] (ഖ)வில் சுழி பெரிதாகியது. க[3] (ഗ)வில் வலப்புறச்சுழி பெரிதாகி கீழ்நோக்கி வளைகிறது. த[3] , ஸ போன்ற எழுத்துக்களிலும் மிகச்சிறு வளர்ச்சி காணப்படுகிறது. தமிழ் எழுத்துக்களிலும் முன்னர் கண்டதற்கும் இதற்கும் பெருத்த மாற்றம் இல்லை.



படம் 98

करवन्दपुरनिवासि स्रीमन्वैद्यः शिला
गृहं विष्णोः अकृत कृति मधुरकर्म्म
धुरतरो मारसूनुरिदम् ॥ मन्त्री स ए
व मतिमान्पण्डयस्य परानतकाभिधान
स्य अमितर्द्धिमग्रेजेभ्यः प्रादादिम

சிற்பங்களில் அமைந்த வளர்ச்சி போன்றதே, பல்லவர் தமிழ் எழுத்துக்கும் சோழர் தமிழ் எழுத்திற்கும் இடையே உள்ள வளர்ச்சி.

தமிழ், கிரந்தம் ஆகிய எழுத்துக்களின் அடுத்த வளர்ச்சிப்படியினை இராஜேந்திர சோழனின் திருவாலங்காட்டுச் செப்பேடு (Ibid p. 383) காட்டுகிறது. கிரந்த எழுத்துக்களில் அமைந்த சமஸ்கிருதப் பகுதி இங்கு தரப்பட்டுள்ளது. (படம் 99). இந்தியக் கல்வெட்டியல் வரலாற்றில் தனியிடம் பெற்றது. 31 ஏடுகளைக் கொண்டதாய் முத்திரை வளையத்தோடு

இது உள்ளது. சோழர்களின் செப்பேடுகள பெரியவை; பளுவானவை. திருவாலங்காட்டுச் செப்பேடு 8 மணங்கு, 2 வீசை, 20 பலம் எடை கொண்டது. பைத்தான் செப்பேட்டை விட இது மூன்று மடங்கு அதிக எடையுள்ளது. பைத்தான் செப்பேடுகளின் எடையையே எண்ணி திரு. பிளீட் வியப்பார் (Ibid p. 383). இதில் இடப்பட்டுள்ள அழகுக் கோடு உச்சியிலிருந்து இடப்புறம் சிறிது கீழ்நோக்கி வளைந்ததாக உள்ளது. உத்தமசோழனின் சென்னை அருங்காட்சியகச் செப்பேடுகள் அளவுஅழகிய, செம்மையான எழுத்துக்கள் என்று இதனைக் கூற இயலாது.



படம் 99

स्वस्ति स्रीकण्ठकण्ठाभरणभुजगराटमूर्ध्न माणिक्यमध्ये दृष्वा
स्मीयां सलज्जा प्रतिकृतियपरामंगनां शंकमाना अश्लेषाले
लचित्तं कृतचरणनतिप्रार्थनम् वो भवानी दिश्यात् पश्यन्त्यधी
रात्रिजपतिमनिशं सेर्ष्यमर्धेक्षणेन ।। वीरस्रीराजहंसीविह
णसरसी विद्वदर्मभोजभानुर्दृष्गादृगार्थमार्गद्वयपथिकम
हालोकसार्थैकनाथः सर्व्वक्षत्राधिनाथस्सकलगुण
मणिस्रेणिजन्माम्बुरांशिर्विश्वक्लेशापहारी चिरम
वतु महीमण्डलञ्चोलवंशः।। पञ्चाशदेव लिपयः प

இதேகாலத்துத் தமிழ் எழுத்துக்களுக்குச் சான்றாக நிலைத்திருப்பவை இராஜராஜனின் தஞ்சைக்கல்வெட்டுக்கள்தமிழக மன்னர்கள் தமிழ்எழுத்துக்களை என்றுமே எழுதாதிருக்கவில்லை. அரசுமொழியாக சில இடங்களில் (பல்லவர்) சமஸ்கிருதம் இருப்பினும் கூட, தமிழும் சிறந்த இடம் பெற்றே

இருக்கிறது. சோழ, பாண்டிய மன்னர்களின் தமிழ் மெய்க்கீர்த்திகள் சிறந்த இலக்கியப் படைப்புக்கள். ஒவ்வொரு அரசனின் மெய்க்கீர்த்தியும் தனித்தனியாக அமைந்து, அவர்களின் வெற்றிகளையும், புகழையும் சிறப்பாக நமக்குத் தெரிவிக்கின்றன. ஆண்டுதோறும் பெறும் அவனது வெற்றிகள் மேலும் மேலும் இணைக்கப்படுவதால், ஆட்சியாண்டு கூடக்கூட, மெய்க்கீர்த்திகளும் நீண்டு செல்கின்றன. பகர, மகரங்களில் அடிக்கோடு செம்மையான படுக்கைக் கோடாக ஆவதோடு, அழுக்குக்கோடு உச்சியிலிருந்து இடப்புறமாகக் கீழ்நோக்கி எழுதப்பட்டது. தஞ்சையிலுள்ள இராஜேந்திரனின் மெய்கீர்த்திப் பகுதி:



படம் 100

1. ஸ்வஸ்தி ஸ்ரீ திருமன்னி வளர இருநிலமடந்தையும் பொற்சய
2. ப்பாவையும் சீர்த்தனிச் செல்வியும் தன்பெருந்தேவியராகி
3. இன்புற நெடுதியள் ஊழியுள் இடைதுறை நாடும் துடர்
4. வன வேலிப்படர்வனவாசியும் சுள்ளிச்சூழ் மதிள் கொள்ளி

தமிழ் எழுத்துக்களின் தொடர்ந்த வளர்ச்சியினைச் சோழ அரசினையும் சாளுக்கிய அரசினையும் இணைத்துப் பாலமாக விளங்கிய முதற்குலோத்துங்களின் கல்வெட்டுக்களில் காணலாம். 12-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த இம்மன்னனின் திருக்கழுக்குன்றக் கல்வெட்டிலிருந்து மெய்க்கீர்த்திப் பகுதி இங்கு தரப்படுகிறது (படம் 101) பொதுவாக இந்த எழுத்துக்கள் நீண்ட செவ்வக வடிவின. எந்த எழுத்திலும் அடியில் உள்ள படுக்கைக் கோடு நேராக இல்லை. 'இ'கரத்தைக் குறிக்கும் குறியீடு, எழுத்து முழுவதையும் நிறைத்ததாக உள்ளது.



படம் 101

ஸ்வஸ்தி ஸ்ரீ புகழ்சூழ்ந புணரி அகழ்சூழ்ந புவியில்
பொன்நெமி அளவு ஙன்நெமி நடப்ப விளங்கு
ஜயமகளி ளங்கொப்பருவத்துச் சக்கரகொட்டத்
து விக்கிரமத் தொழிலால் புதுமணம் புணஙு.



படம் 102

தமிழ்க் கல்வெட்டில் இடம் பெற்ற கிரந்த எழுத்துக்களின் இறுதி நிலையினை விஜயநகரர் தம் கல்வெட்டுக்களில் காணலாம். அனைத்து எழுத்துக்களும் கோணங்களாகத் திரும்பும் நிலை பெற்றன. தற்காலக் கிரந்த எழுத்துக்களினின்றும் பிரித்துக்கூற இயலாத அளவு ஒற்றுமையுடையன. இரட்டை கோடுகள், சிறு செவ்வக வடிவமாகவே மாறிவிட்டன. ட, ப, போன்ற எழுத்துக்களில் அகலம் அதிகமாகி விட்டது. க^{2} கரத்தின் சுழி, எழுத்தின் அடிப்புறம் வரை நீண்டதாகிறது. யகரத்தின் நடுக்கோடு வலப்புறம் சாய்ந்து மூலையில் இணைவாக அமைகிறது. அழகுக்கோடுகள், க, ச போன்ற எழுத்துக்களில் இடப்புறம் கீழ்நோக்கி அதிகமாக நீண்டு, சுழியைத் தொடுவதாக மாறிவிட்டன. இந்த எழுத்துக்களைக் காட்டுவனவாக அமையும் சிரிகரி பூபாலனின் சென்னை அருங்காட்சியகச் செப்பேட்டுப் பகுதி இங்குள்ளது.

क्ष्लमीम् पक्ष्मलयत्वाद्यमत
रायतमोपहम । प्रथमद्वन्द्व
सम्भूतम् प्रणयाद्वैतवै
भवम् करुणामयवामांगं क
ल्याणगुणभूषणम् । वन्दे चन्द्र
कलाकल्पम्महास्त्रित यलोचनम्
भुवः प्रेमपरिष्वंगपुलकांकि
तबाहवो नमो वराहवपु
षे स्त्री वैभवपुषे त्विषो व
न्द्रेनन्तफणाभूषां स्यन्दन
भमेरूधन्वनः । मेदिनीं हरिदोस्तम्
भमेघनादानुलासिनीमा आ
सीत सोमान्वय रम्ये यदुः पर
मधा मूकः । अंशावतीर्णो यद्व
शे भगवान् पद्मलोचनः । त
त्कुले संगमो राजा समभूत्

தமிழ்க் கல்வெட்டுக்களில் சமஸ்கிருதப் பகுதியினை எழுதக் கிரந்தம் பயன்படுத்தப்பட்டது. ஆனால் தமிழ்ப் பகுதிகள் வடக்கே தமிழ் எழுத்துக் களிலேயே அமைய, தெற்கே வட்டெழுத்துக்களில் எழுதப்பட்டன. தமிழ் எழுத்துக்களை ஒரு வகையாகப் பெரும்பாலும் இடப்புறமாகச் சாய்த்தும் வளைகோடுகளாகவும் எழுதப்பட்டவையே வட்டெழுத்துக்கள். ஓரளவு தனித்தன்மையும் கொண்டவை. அ, ஔ, எ, க, ப, ர, ல, வ இவை பொதுவான அமைப்புடையன. ட, பு இவை பெரிதும் ஒத்தவையே. எ, ந, த, ண, ய ஆகிய எழுத்துக்கள் தமிழினின்று வேறுபட்டுள்ளன. இவை இரண்டும் பொதுவான ஓர் எழுத்திலிருந்தே வளர்ந்திருத்தல் வேண்டும். பாண்டியர், சேரர் கல்வெட்டுக்களில் இது சிறப்பான இடம் பெறுகிறது. சோழர் கல்வெட்டுக்கள், பாண்டிய நாட்டில் எழுதப் படுமாயின், வட்டெழுத்து பயன் படுத்தப்பட்டது. இங்கு பராந்தகனின் ஆனைமலைக் கல்வெட்டு தரப்படுகிறது. இதில் உயிர்மெய்யெழுத்துக்களில், அக்குறிகள், தனித்து எழுதப்படாமல், எழுத்தின் மேலோ கீழேயோ முன்னும் பின்னுமாக எழுதப்பட்ட முறை குறிப்பிடத்தக்கது. அதிலும் முற்காலத்தைச் சேர்ந்த எழுத்துக்களாயின், தமிழோடு கூடியவொப்புமையை எளிதில் உணலாம். பிற்காலத்து வட்டெழுத்துக்கள், வேறுபாடு இன்றி, வட்டத்திற்கு சிறப்பிடம் கொண்டு நிலை பெறுவதை, சேரநாட்டு வட்டெழுத்துக் கல்வெட்டுக்களில் காணலாம்.



படம் 103

1. கோமாறஞ்சடையற்கு உ
2. த்தர மந்த்ரிகளக்குடிவை
3. த்யந் மூவெந்த மங்கலப்
4. பேரரையன் ஆகிய மாறங்
5. காரி இக்கற்றளி செய்து
6. நீர்த் தளியாதெய் ஸ்வர்க்காரொ
7. ஹணஞ் செய்த பின்னை அவ
8. னுக்கு அநுஜந் உத்தர
9. [illegible]வடி. மெய்தின பாண்டி
10. மங்கல. விசைஅரையன்
11. ஆகிய மாறன்னெ. இ
12. ளன் முகமண்டமஞ் செ
13. ய்து நீர்த்தளித்தான்.

படம் 2.



இராஜேந்திர சோழனின் திருவாலங்காட்டுச் செப்பேடு

திருவாலங்காட்டுச் செப்பேட்டில் இராஜேந்திர சோழனின் இலச்சினை

படம் 3.



இரண்டாம் விக்ரமேந்திரவர்மனின் சிக்குல்லாச் செப்பேடு.

செப்பேட்டிலுள்ள கீழைச் சாளுக்கியரின் முத்திரை.

படம் 4.





கீழைச் சாளுக்கிய மன்னன் மூன்றும் விசயாதித்தனின் சாத்தலூர் செப்பேடுகள்

படம் 5.



பட்டிபுரோலுவில் புத்தரின் எலும்பு இந்த கற்பேழையில் வைக்கப்பட்டிருந்தது. அதை குறிக்கும் கல்வெட்டு.



மேலே உள்ள கற்பேழையின் மூடி - எழுத்துடன்



பேரரசன் அசோகனின் ஜௌகடா கல்வெட்டின் பகுதி



அமராவதிக கல்வெட்டு (கி.மு. 200)



அமராவதிக் கல்வெட்டு (கி.பி. 2-ஆம் நூற்றாண்டு)

ஜக்கைய்யபேட்டைக் கல்வெட்டு (கி.பி. 3-ஆம் நூற்றாண்டு)



காஞ்சிபுரத்திலுள்ள கி.பி 7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல்லவ கிரந்தக் கல்வெட்டு.

வட ஆற்காடு மாவட்டம் கீழ்முட்டுகூரில் உள்ள கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர் கால நடுகற் கல்வெட்டு

படம் 8.



செங்கல்பட்டு மாவட்டம் களம்பாக்கத்திலுள்ள கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இராஜராஜன் கல்வெட்டு

படம் 9



சென்னை அருங்காட்சியகத்திலுள்ள பார்த்திவேந்திரவர்மனின் கல்வெட்டு கி.பி. 10-ஆம் நூற்றாண்டு.

பெசவாடா துவாரபாலகர் சிற்பத்தின் பின்புறத்திலுள்ள முற்காலக் கீழைச் சாளுக்கியரின் கல்வெட்டு.

படம் 10.



கிழக்கு கோதாவரி மாவட்டம், ராஜமுந்திரியிலுள்ள
கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிற்காலக்
கீழைச் சாளுக்கியர் கல்வெட்டு.

குண்டூர் மாவட்டம், அட்டங்கியிலுள்ள
கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த
முற்காலக் கீழைச் சாளுக்கியர் கல்வெட்டு.

விஜயநகரார்தம் செப்பேட்டுப் பிரதி
கி.பி. 15-ஆம் நூற்றாண்டு.

முற்கால மேலைச்சாளுக்கியர் கல்வெட்டு
அன்னவர அக்ரஹாரம், நெல்லூர் மாவட்டம்.
கி.பி. 7-ஆம் நூற்றாண்டு.

பிற்கால மேலைச்சாளுக்கியர் கல்வெட்டு
கி.பி. 11-ஆம் நூற்றாண்டு.



கீழைக்கங்கரது நாகரிக் கல்வெட்டு,
உரஜத், விசாகப்பட்டினம்
கி.பி. 11-ஆம் நூற்ருண்டு.



விஜயநகரரது நந்திநாகரி எழுத்துப
பொறிக்கப்பட்டுள்ள செப்பேடு,
கி.பி. 15-ஆம் நூற்ருண்டு.



பல்லவரது நாகரிக் கல்வெட்டு, காஞ்சிபுரம்,
செங்கற்பட்டு மாவட்டம்,
கி.பி. 7-ஆம் நூற்றாண்டு.



C. Sivaramamurti, del.